REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 டிசம்பர் 14 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
1932 - 2021
வரு. 89 இல. 296 | Tuesday 14, December, 2021 | 20 பக்கங்கள் | 30/-






## ஜனாதிபதி கோட்டாபய சிங்கப்பூர் பயணம்
### தனிப்பட்ட விஜயமாகவே சென்றார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று காலை சிங்கப்பூர் பயணமாகியுள்ளார்.

நேற்று ஜனாதிபதியுடன் சிங்கப்பூர் சென்ற குழுவில் அவரது பாரியார் முதல் பெண்மணி மற்றும் மூவர் அங்கம் வகிப்பதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். ஜனாதிபதியின் பயணத் திட்டம் மற்றும் பயணத்தின் நோக்கம் குறித்து இதுவரை வெளியிட முடியாது என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பாராளுமன்ற கூட்டத் தொடர் ஒத்திவைப்பு புதிய விடயமல்ல
### முன்னைய ஜனாதிபதிகளினாலும் கொண்டு வரப்பட்டதே!




**ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைக்கும் முடிவு திடீரென எடுக்கப்பட்ட ஒன்றல்ல என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜனவரியில் செலுத்த வேண்டிய கடன் தவணைக்கும் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைப்பிற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று தெரிவித்த அவர், 06

## ஒப்சேர்வர் SLT மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் வீரர் விருது விழா இன்று






SLT மொபிடெல் மற்றும் ANCL இன் முதன்மையான ஞாயிறு நாளிதழான Sunday Observer மீண்டும் இணைந்து நாட்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்கு இன்று வெகுமதிகளை வழங்குகின்றன. இவ்வாறாக, 43வது ஒப்சேவர் SLT மொபிடெல் பாடசாலைகளுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர்களுக்கான இறுதிப் போட்டி கொழும்பு 06

### ஞாயிறு நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில்
# பாராளுமன்ற கூட்டத்தொடர் ஜன.18வரை ஒத்திவைப்பு
### ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி அறிவித்தல்




**ஷம்ஸ் பாஹிம்**

நேற்று முன்தினம் (12) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பாராளுமன்ற அமர்வுகளை நிறுத்தி ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 70 ஆவது சரத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய ஜனாதிபதியினால் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு அமைய 2022 ஜனவரி 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு மீண்டும் பாராளுமன்றம் கூடும் என குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அனைத்து குழுக்களும் ரத்தாவதோடு உயர்பதவிகளுக்கான குழு மாத்திரமே இயங்கும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் அலுவலகம் தெரிவித்தது.

பாராளுமன்ற அமர்வுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனவரி 18 ஆம் திகதி காலை உத்தியோகபூர்வமாக 06



ஐக்கிய நாடுகள் சபை உதவிச் செயலாளர் நாயகமும் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட பிராந்திய பணியக பணிப்பாளருமான கனி விக்னராஜா, நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவை சந்தித்த போது பிடிக்கப்பட்ட படம்.

## பூஸ்டர் தொடர்பான வதந்திகளை நம்பாது விரைவாக பெறுங்கள்
### விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஹேமந்த



ஆரோக்கியமான மற்றும் சுகாதாரமான தலைமுறையொன்றை உருவாக்குவதற்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மிகவும் முக்கியமானதாகும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். 06

## அரசு ஒருபோதும் மக்களை பட்டினியில் விடமாட்டாது
### அதற்கான பொறுப்பு தனது என்கிறார் பந்துல



அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடு இல்லாமல் விநியோகிக்கும் பொறுப்பை தான் ஏற்றுக்கொள்வதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் என்றும் ஒருபோதும் மக்களை பட்டினியில் வைக்கப்போவதில்லை என்றும் அவர் உறுதியளித்தார். நேற்று முன்தினம் (12) 06

## சமஷ்டி ரீதியிலான அரசியல் தீர்வை பெற்றே தீருவோம்



சமஷ்டி தீர்வு எமது குறிக்கோளாக என்றென்றும் இருக்கின்றது. ஒரு காலகட்டத்தில் அதனை பெற்றே தீருவோம். அரசியல் அமைப்பின் 13 ஆம் திருத்தச்சட்டம் எமக்கான நிரந்தர அரசியல் தீர்வு அல்ல, ஆனாலும் தற்போது சட்ட புத்தகத்தில் இருக்கும் 13 ஆம் திருத்தச்சட்டத்தையேனும் முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்பதே எமது கோரிக்கையாகும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 06

## பங்களாதேஷுடன் இருதரப்பு தொடர்புகள்
### ஹசீனாவுடன் பிரதமர் மஹிந்த பேச்சு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் பங்களாதேஷ் பிரதமர் சேக் ஹசீனாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த தொலைபேசி 06

## தடுப்பூசி ஏற்றல் காரணமாக இறப்பு விகிதம் குறைகிறது



இலங்கையில் கொரோனா தொற்றினால் ஏற்படும் இறப்பு வீதம் குறைவதற்கு தடுப்பூசி நடவடிக்கையே காரணம் என 06

## மண்ணெண்ணெய் அடுப்பு வகைகளுக்கு என்றுமில்லாத மவுசு

சந்தையில் இதுவரை காலமும் ஆயிரம் ரூபாய் முதல் ஆயிரத்து 500 ரூபாய் வரையான விலையில் விற்பனை செய்யப்பட்டு வந்த மண்ணெண்ணெய் அடுப்புகளின் விலை பல மடங்காக 06

### எரிவாயு வெடிப்பில் உயிரிழந்த பெண்;
## பத்துகோடி ரூபா நட்டஈடு கோரி வழக்கு தொடர தீர்மானம்
### குடும்பத்தார் சமையல் எரிவாயு நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை



கண்டி குண்டசாலை பகுதியில் சமையல் எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்பு சம்பவத்தில் எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் 06

## 'பொடி லெசி' விரைவில் நீதிமன்றத்தில் ஆஜர்
### நீதிமன்றுக்கு IGP அறிவித்தார்



பாதாள உலகக் குழுத் தலைவன் "பொடி லெசி" தடுப்புக் காவலின் பின்னர் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

பொடி லெசி என அழைக்கப்படும் ஜனித் மதுஷங்க தனது உயிருக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி தாக்கல் செய்த மனு நேற்று (13) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே 06

## சக்திவாய்ந்த 81 ரக எறிகணைக் குண்டுகள்
### மட்டக்களப்பில் படையினரால் மீட்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் குடும்பிமலைக்கு தெற்கே மயிலத்தமடு எனுமிடத்தில் இருந்து சக்திவாய்ந்த 81 ரக எறிகணைக் குண்டுகள் 16 நேற்று முன்தினம் (12) மாலை மீட்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைவாக காகித ஆலை விசேட அதிரடிப்படையுடன் 06

## 10 மாத குழந்தையின் உயிரை பறித்த வாழைப்பழம்



10 மாத குழந்தையின் தொண்டையில் வாழைப்பழம் சிக்கிக் கொண்டதில் அக்குழந்தை மூச்சுத் திணறி பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

தாயினால் உணவாக 06

## 27 கோடியை கடந்த கொவிட் தொற்றாளர்கள்
கடந்த 24 மணிநேரத்தில் 1,23,736 பாதிப்பு 03

### மீன் பிடித்து விளையாடிய சிறுவரது
## தூண்டிலில் சிக்கிய வெடிகுண்டு பார்சல் 03

## கிழக்கில் 800 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை
கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் 03

## விக்கல் வீராச்சாமி



கொழும்பில தமிழ், முஸ்லிம் கட்சிகளின்ர தலைவர்கள் கூடி கதைச்சிருக்கினம், அரசியல்ல ஏதும் பெரிய மாற்றம் வந்துடும் போல தெரியுது.....

நீங்க வேற, அங்க வந்த கட்சி தலைவர்களால தங்கட தங்கட கட்சிகளின்ர எம்.பிமாரையே கொன்றோல் பண்ண முடியாம இருக்கு, இந்த அழகில...!!!

## 20 வருடங்களுக்கு பின்னர் இந்தியாவுக்கு 'மிஸ் யுனிவர்ஸ்'
### 80 உலக அழகிகளுள் ஹர்னாஸ் தெரிவு



இஸ்ரேலின் சுற்றுலாத்தளமான எய்லட் நகரில் பிரபஞ்ச அழகிற்கான போட்டி நடைபெற்றது. இதில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 80 அழகிகள் 06

## இழப்பீடு அல்ல; காணாமல் போன பிள்ளையை தாருங்கள்
### ஜனாதிபதி ஆணைக்குழு முன் தாய் உருக்கம்




2006ஆம் ஆண்டு யாழ். திருநெல்வேலி பகுதியில் உள்ள கடையொன்றில் வேலை செய்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட தனது பிள்ளையே வேண்டும், இழப்பீடு வேண்டாம் என ஜனாதிபதி விசாரணை 06

### பட்ஜட்டுக்கு ஆதரவாக வாக்களிப்பு;
## மு.கா அமைப்பாளர் தௌபீக் இடைநிறுத்தம்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

கட்சியின் தீர்மானத்தை மீறி 2022 பட்ஜட்டுக்கு ஆதரவாக வாக்களித்ததன் 06

# வெளிவிவகார அமைச்சின் நத்தார் தின விசேட சந்திப்பு







தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்காக வெளிவிவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நத்தார் தின விசேட சந்திப்பு மற்றும் இரவு விருந்துபசார நிகழ்வு நேற்று முன்தினம் (12) இரவு கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் இடம்பெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர் இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டார்.

நத்தார் தினத்தை முன்னிட்டு இவ்விசேட சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்து கொண்ட தூதுவர்கள் தற்றும் உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட இராஜதந்திர சேவையின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

இச் சந்தர்ப்பத்தில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பவித்ராதேவி வன்னிஆராச்சி, அலி சப்ரி,இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், தாரக பாலசூரிய, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, சுரேன் ராகவன் மற்றும் பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.







## ஜெர்மனி கவிஞர் ப.தியானின் 'சொற்காடு' கவிதை நூல் வெளியீட்டு விழா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது ஜெர்மனியிலிருந்து தமிழ்ப் பணியாற்றிவரும் கவிஞர் தியானின் கவிதைகளை 'சொற்காடு' என்ற தலைப்பின் இனிய நந்தவனம் பதிப்பகம் நூலாக வெளியிட்டுள்ளது இந்நூலின் வெளியீட்டு விழா அண்மையில் தமிழ்நாட்டில் சென்னை அண்ணாநகர் நான் ஒரு ஐஏஎஸ் அகாடமி கூட்ட அரங்கில் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஸ்ணன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

எந்த ஒரு சமுதாயம் கலை இலக்கியம் தொடர்பான சந்திப்புகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறதோ அந்த சமுதாயம் வளர்ந்து கொண்டிருப்பதாக அர்த்தம் என்று ஜெர்மனி நாட்டு சமூகவியல் அறிஞர் ஒருவர் குறிப்பிடுகிறார், அதே போல இலக்கியம் தொடர்பாக கூடுகின்ற கூட்டம்தான் இந்த சமூக மேம்பாட்டுக்கான இடமாக நான் கருதுகிறேன். இன்று கூட இதைக் கூட்டம் மாகப் பார்க்கவில்லை குடும்பமாகத்தான் பார்க்கிறேன். நல்ல செய்திகளை பகிர்ந்து கொள்வதற்காவே நாம் இங்கு கூடியிருக்கிறோம். வாழ்க்கையில் கவிதைதான் மிகப்பெரிய இன்பத்தைத் தருகிறது. கவிஞர்களும் இசைபாடுபவர்களும் மட்டுமே தாங்கள் அனுபவித்த இன்பத்தை மற்றவர்களுக்கும் தருகிறார்கள். கவிஞர் தியானும் தான் அனுபவித்தவற்றை கவிதையாக மற்றவர்களுக்கும் தருகிறார். என்று ஏர்வாடி இராதாகிருஷ்ணன் தனது ஏற்புரையில் குறிப்பிட்டார்

மேலும் நிகழ்வில் முனைவர் தமிழ்மணவாளன் வாழ்த்துரை வழங்க எழுத்தாளர் வே. எழிலரசு ,கவிஞர் சொர்ணபாரதி, கவிஞர் பா.தென்றல் ஆகியோர் நூலாய்வு செய்தனர். வழக்கறிஞர் வைதேகி பாலாஜி. தொழிலதிபர் தாரை கு.திருஞானசம்மந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு நூலை வெளியிட்டுச் சிறப்பித்தனர்

முன்னதாக உளநல ஆலோசகர் கே. நித்தியானந்தம் அனைவரையும் வரவேற்க, கலாநிதி வே .த.யோகநாதன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இனிய நந்தவனம் பதிப்பாசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் நிகழ்வை சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

காவல்துறை உதவி ஆய்வாளர். ராஜா உட்பட இலக்கிய ஆர்வலர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## 14வது எடிசன் திரை விருது தேர்வுப் பட்டியலில் விஜயின் மாஸ்டர், தனுஷின் கர்ணன்








உலகத் தமிழ் இரசிகர்களால் கொண்டாடப்படும் எடிசன் தமிழ் திரை விருதுகள் 2022 தேர்வு பட்டியலில் அதிக இடங்களை பிடித்து முன்னணியில் விஜயின் மாஸ்டர் படமும், இரண்டாவதாக தனுஷின் கர்ணன் படமும், மூன்றாவதாக ஆர்யாவின் சார்பட்டா பரம்பரை படமும், சிவகார்த்திகேயனின் டாக்டர் படமும் அதிக பிரிவுகளில் தேர்வு பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

மாஸ்டர் திரைப்படம் 17 பிரிவுகளிலும், கர்ணன் திரைப்படம் 13 பிரிவுகளிலும், சார்பட்டா பரம்பரை திரைப்படம் 12 பிரிவுகளிலும், டாக்டர் திரைப்படம் 12 பிரிவுகளிலும், ஜெய் பீம் 9 பிரிவுகளிலும், மாநாடு 6 பிரிவுகளிலும் தேர்வு பட்டியலில் அதிகப்படியாக இடம்பெற்றிருப்பது திரைத்துறைக்கு ஆரோக்கியமான விடயமாகும்.

'இணையத்திலும், செயலியிலும் வாக்குப்பதிவு நடைபெற்று வரும் எடிசன் தமிழ் திரை விருதுகள் ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி சென்னையில் பிரமாண்டமாக நடைபெற உள்ளது.

அந்நிகழ்வில் விருது மற்றும் தென்னிந்திய முன்னணி நட்சத்திரங்களின் கலை நிகழ்வு மற்றும் அயல்நாட்டு தமிழ் கலைஞர்கள் கலை நிகழ்ச்சியை படைக்க உள்ளனர்' என்று எடிசன் விருது குழு தலைவர் செல்வகுமார் மற்றும் செயலர் மலேசிய தீனா தெரிவித்தனர்.

நத்தார் பண்டிகைக்காக

# மதுபான விநியோகத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை

## கலால் திணைக்கள ஆணையாளர் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நத்தார் பண்டிகையை இலக்காகக் கொண்டு சாதாரண ஹோட்டல்கள் அல்லது உணவகங்களுக்கு மதுபான விநியோகத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. அவ்வாறான எந்த வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவுமில்லையென கலால் திணைக்கள ஊடகப் பேச்சாளர் கலால் ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

நத்தார் பண்டிகையை இலக்காகக் கொண்டு அவ்வாறு ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு மதுபான விநியோகத்துக்கான அனுமதி கோரப்பட்டுள்ளதாக கடந்த இரு தினங்களுக்கு முன் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே கலால் திணைக்கள ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சுற்றுலா சபை அனுமதிபெற்றுள்ள ஹோட்டல் அறைகள் வழங்கும் உல்லாசப் பிரயாண ஹோட்டல்களுக்கு மட்டும் நத்தார் தினத்தில் மதுபானம் விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது இந்த வருடம் மட்டுமன்றி வழமையாக இடம்பெற்றுவரும் நடவடிக்கையாகும். நத்தார் தினத்தில் மதுபான விநியோகத்திற்கான அனுமதியைப் பெற்றுத்தருமாறு உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் வேண்டுகோள் விடுத்திருந்த போதும் அது தொடர்பில் இதுவரை எந்தவொரு தீர்மானமோ அல்லது பேச்சுவார்த்தையோ மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

காணி விவகார குற்றச்சாட்டு தொடர்பில்;

# பகிரங்க விவாதத்திற்கு வருமாறு சாணக்கியன் எம்.பிக்கு ஹாபிஸ் எம்.பி அழைப்பு





பகிரங்க விவாதத்திற்கு வருமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பிக்கு ஹாபிஸ் நஸீர் எம்.பி அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதோடு அதில் தெரிவித்துள்ளதாவது:

கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற வரவுசெலவுத் திட்ட விவாதத்தின் போது "ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம்களுக்கும் காணிப்பிரச்சினை இல்லை. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் பிள்ளையானுடன் சேர்ந்து காணிப் பிரச்சினை தொடர்பில் நாடகம் ஆடுகிறார்கள்" என்று தாங்கள் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பிலேயே உங்களுடன் பகிரங்க விவாதத்தை நடாத்த நான் தயாராக இருக்கின்றேன். மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிகளுக்கு நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அநீதிகள் குறித்தும் சட்டத்திற்கு முரணாக முஸ்லிம் பிரதேச செயலகங்களின் காணி எல்லைகள் கபளீகரமாக பறிக்கப்பட்டது தொடர்பிலும், அரச அதிகாரிகள் சிலர் முஸ்லிம் பிரதேசங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் மேற்கொண்ட ஓரவஞ்சனையான செயற்பாடுகள், முஸ்லிம்கள் இழந்த காணிகள், இழந்த கிராமங்கள் மற்றும் முஸ்லிம் பிரதேச காணிகள் கபளீகரம் செய்யப்பட்டமை தொடர்பிலுமே உங்களுடன் பகிரங்க விவாதம் ஒன்றை நடாத்த இந்த அழைப்பு விடுக்கின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதி 06

# கடலில் மூழ்கிய நால்வரில் மூவரின் சடலங்கள் மீட்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டின் இருவேறு பிரதேசங்களில் கடலுக்கு சென்றுள்ள நால்வர் காணாமற்போயுள்ளதுடன் அவர்களில் இரு பாடசாலை மாணவர்களின் சடலங்களும் ஒரு இளைஞரின் சடலமும் நேற்று கடற்படையினரால் மீட்கப்பட்டுளள்து. வத்தளை மற்றும் மன்னார் பகுதிகளிலேயே மேற்படி நால்வர் கடலில் குளிக்கச்சென்றும் விழுந்தும் காணாமல் போயுள்ளனர். அதற்கிணங்க வத்தளை திக்ஓவிட்ட பிரீதிபுர கடலில் குளிக்கச்சென்ற நான்கு மாணவர்களில் இருவர் கடலில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரது சடலங்களே நேற்று கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன. ஏ.கே. ரூவிந்த புன்சர (15), வை.எம். சஞ்சுத சந்தகெலும் (15) மற்றும் மன்னார் களப்புவில் காணமல் போன தர்ஷன் (21) 06

# வெசாக்கை போன்று நத்தார் பண்டிகையிலும் மதுபான விற்பனையை தடைசெய்ய வேண்டும்

## - பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வெசாக் உற்சவத்தின் போது மதுபான விற்பனை தடைசெய்யப்படுமானால் நத்தார் பண்டிகையிலும் அதனை தடைசெய்ய வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மதம் என்பது விருந்துகளை ஏற்படுத்துவது மற்றும் மதுபானம் அருந்தி உயிர்களை அழித்துக்கொள்வதல்ல என தெரிவித்துள்ள பேராயர், மதம் என்பது மிக உன்னதமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கனேமுல்ல பகுதியில் நடைபெற்ற மத வழிபாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு 06



# வெளிநாட்டு நாணயத்தை வைப்பிலிட மத்திய வங்கி

## விசேட அறிவுறுத்தல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

எந்த வகையிலாவது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயத்தை தம் வசம் வைத்திருப்பவர்கள் அதனை வைப்பிலிடுவதற்கான மாற்று செயற்பாடு தொடர்பில் மத்திய வங்கி அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளது.

அதற்கிணங்க நேற்றைய தினம் இலங்கை மத்திய வங்கி நாட்டு மக்களுக்கு பொது அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் மூலம் மத்திய வங்கி மேலும் தெரிவிக்கையில்: 06

12/15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு

# பைசர் தடுப்பூசி வழங்க சுகாதார அமைச்சின் நிபுணர் குழு அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் தடுப்பூசி தொடர்பான விசேட நிபுணர் குழு அனுமதி வழங்கியுள்ளது.

சில தினங்களுக்கு முன் கூடியுள்ள மேற்படி குழு கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்குதல் தொடர்பில் பல்வேறு தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

அதன் ஓர் அம்சமாகவே 12 வயதுக்கும் 06

# 27 கோடியை கடந்த கொவிட் தொற்றாளர்

## 24 மணிநேரத்தில் 1,23,736 பேர் பாதிப்பு



உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை ஞாயிற்றுக்கிழமை (12) 27 கோடியைக் கடந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் உலகம் முழுவதும் 123,736 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அதை அடுத்து, சர்வதேச அளவில் அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 270,425,329 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா பாதிப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அந்த நாட்டில் இதுவரை 50,801,455 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவிலும் அதற்கு அடுத்தபடியாக பிரேஸிலிலும் அதிகம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரேஸிலில் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 22,189,867 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 10,819,515 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட பிரிட்டன் அந்த நோய் பாதிப்பு எண்ணிக்கையில் 4 ஆவது இடத்தில் உள்ளது. பிரிட்டனில் கொரோனா பரவலைத் தடுப்பதற்காக 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 3 ஆவது ஊக்கத் தவணை தடுப்பூசி செலுத்த அந்த நாட்டு மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் முதல்முறையாகக் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் வகை கொரோனா, இதுவரை உருவான மற்ற வகைகளைவிட 4 மடங்கு வேகமாகப் பரவும் தன்மை கொண்டது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே டெல்டா வகை கொரோனாவால் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் புதிய கொரோனா அலை எழுந்து ஏராளமானவர்கள் உயிரிழந்தனர். மருத்துவமனைகளில் அளவுக்கு அதிகமான கொரோனா நோயாளிகள் சேர்க்கப்பட்டதால் ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்பட்டு சுகாதாரக் கட்டமைப்பு நிலைகுலைந்தது.

இந்தச் சூழலில், புதிய ஒமிக்ரோன் வகைக் கொரோனாவால் மீண்டும் அத்தகைய நிலைமை ஏற்படும் என்று உலகின் 06

மீன் பிடித்து விளையாடிய சிறுவரது

# தூண்டிலில் சிக்கிய வெடிகுண்டு பார்சல்

யாழ்ப்பாணம் மடம் வீதியில் உள்ள கால்வாய் ஒன்றில் சிறுவர்கள் மீன்பிடித்து விளையாடிக் கொண்டிருந்த போது அவர்களது தூண்டிலில் திடீரென ஒரு பாரமானபை அகப்பட்டுள்ளது.

உடனே குறித்த சிறுவர்கள் அதனை தூக்கி பார்த்தபோது அப் பையில் துருப்பிடித்த நிலையில் வெடிகுண்டு ஒன்று இருந்ததை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது.

யாழ். பொலிஸார் குறித்த வெடிகுண்டினை நீதிமன்றத்தின் அனுமதி பெற்று விசேட அதிரடிப் படையின் உதவியுடன் மீட்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கிழக்கில் 800 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

கிழக்கு மாகாணத்தில் விசேட பாட ஆசிரியர்களுக்கான தேவை தற்போதைய காலத்தில் 800க்கும் அதிகமாகவுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் இரண்டாம் கட்ட நிகழ்வு நேற்று நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

சாதனைகள் ஒவ்வொரு மட்டத்திலும் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பது பிரதானமாகயிருக்கின்றது. கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரையில் பட்டதாரி பயிலுனர்கள் 3033 பேர் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக இணைக்கப்பட்டுள்ளனர்.

எங்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டதாரிகளில் அதிகளவானோர் கலைப்பட்டதாரிகளாகவுள்ளனர். இவர்களில் சுமார் 140 பேர் மாத்திரமே கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப பாடங்களை கற்றவர்களாகவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரையில் விசேட பாட ஆசிரியர்களுக்கான தேவை தற்போதைய காலத்தில் 800க்கும் அதிகமாகவுள்ளது. இன்று பல வலயங்கள் பாட ரீதியான ஆசிரியர்கள் பற்றாக்குறைக்கு மத்தியிலேயே கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்கின்றன.

சில வலயங்களில் அனைத்து பாடங்களுக்கான ஆசிரியர் தேவைகளை பூர்த்தி செய்ததாகவும் உள்ளன. மட்டக்களப்பு மேற்கு, கல்குடா போன்ற வலயங்கள் ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கிவருகின்றது.

மட்டக்களப்பு வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் ஓரளவு ஆசிரியர் தேவையினை பூர்த்தி செய்துகொண்டு கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பொதுமக்களுக்கான அறிவித்தல்

பின்வருவன ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத்தை உங்கள் உடமையில் வைத்திருப்பீர்களாயின்...

I. வெளிநாட்டு பயணத்திற்காக வங்கியொன்றிலிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநரிடமிருந்து கொள்வனவுசெய்து, பயன்படுத்தாது இலங்கைக்கு திருப்பிக் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),
II. வெளிநாட்டு பயணத்திற்காக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து (PFCA) மீளெடுப்புச்செய்தல் (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),
III. வெளிநாட்டிலிருக்கும் போது தொழில், தொழில்சார்நிபுணத்துவம் அல்லது வியாபாரம் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை,
IV. சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடுவதற்காக 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை நீங்கள்,

- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியில் இலங்கை ரூபாவாக மாற்றலாம்; அல்லது
- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிடலாம்; அல்லது
- உங்களது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) அல்லது சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடலாம்;
- உங்களது வங்கியூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யலாம்.

* செலாவணி வீதம்: ரூ.200 + விசேட ஊக்குவிப்பு ரூ.10

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி மூலம் மேற்குறித்தவை தொடர்பிலான அவசியமான அறிவுறுத்தல்கள் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
0112477255 0112477716 dfe@cbsl.lk www.dfe.lk

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 28ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஊலா பிறை 09



### குறள் தரும் சிந்தனை

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்

எந்த அளவுக்கு நன்மை கிடைக்கும் அல்லது தீமை ஏற்படும் என்று விளைவுகளைக் கணக்குப் பார்த்த பிறகே ஒரு செயலில் இறங்க வேண்டும்.

## பூஸ்டர் தடுப்பூசியின் முக்கியத்துவம் உணரப்பட வேண்டியது அவசியம்

கொவிட் 19 தொற்று அச்சுறுத்தலில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பம் முதல் முன்னெடுத்து வருகின்றது. இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி புழக்கத்திற்கு வந்ததும் இந்நாடும் அவசரப் பயன்பாட்டுக்கு அஸ்ட்ரா செனகா தடுப்பூசியின் இந்திய உற்பத்தியான கொவிஷீல்ட்டுக்கு முதலில் அங்கீகாரம் வழங்கியது. இதே காலப்பகுதியில் பைஸர், ஸ்புட்னிக் வீ, சினோபாம், மொடர்னா, அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகளும் அவசர தேவையின் நிமித்தம் பயன்பாட்டுக்கு வந்தன.

ஆனால் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதில் உலகளாவிய ரீதியில் போட்டி நிலை நிலவி வருவதால் இந்நாடு கொவிஷீல்டுக்கு மாத்திரமல்லாமல் அஸ்ட்ரா செனகா, ஸ்புட்னிக் வீ, பைஸர், சினோபாம், மொடர்னா ஆகிய தடுப்பூசிகளின் பாவனைக்கும் அனுமதி வழங்கின. இதன் பயனாக இந்நாட்டு சனத்தொகையில் 60 வீதத்திற்கும் மேற்பட்டோருக்கு ஒரு வருட காலப் பகுதிக்குள் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவற்கான தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு நின்று விடாது இத்தொற்றின் உலகளாவிய மற்றும் பிராந்திய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இத்தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின கீழ் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த வெள்ளியன்று கூடிய கொவிட் 19 தொற்று கட்டுப்பாட்டுக்கான தேசிய செயலணியின் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ள சகலருக்கும் மூன்றாவது டோஸாக பூஸ்டர் தடுப்பூசியை அடுத்து வரும் இரு வாரங்களுக்குள் பெற்றுக் கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார். அந்த அறிவுறுத்தலுக்கு ஏற்ப இத்தொற்றின்தாக்கத்தைக்கட்டுப்படுத்துவதற்கானதடுப்பூசி வழங்கப்படும் சகல மையங்களிலும் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

ஆனால் தற்போது இந்நாட்டில் இத்தொற்றுக்கு உள்ளாவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களதும் உயிரிழப்பவர்களதும் எணணிக்கையில் பெரிதும் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதால், பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் போதிய அக்கறையும் ஆர்வமும் காட்டப்படாத நிலைமை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது ஆரோக்கியமான நிலைமை அல்ல.

ஏனெனில் எதிர்வரும் நாட்கள் பண்டிகைக் காலமாக இருக்கின்றன. இக்காலப் பகுதியில் மக்கள் பல்வேறு விதமான பயணங்களை மேற்கொள்வதற்கு திட்டமிட்டு இருப்பார்கள். ஆனால் தற்போதைய சூழலில் கடந்த காலத்தைப் போன்று இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் அசிரத்தையுடனோ, கவனயீனமாகவோ நடந்து கொள்ள முடியாது. கடந்த காலத்தில் அவ்வாறு செயற்பட்டதன் விளைவாக நாடும் மக்களும் முகம் கொடுத்த விளைவுகளை இந்நாட்டு மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதனால் மிகுந்த பொறுப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டிய காலப் பகுதி இது.

இக்காலப் பகுதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தான் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ள சகலருக்கும் அடுத்து வரும் இரு வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்க ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழலில் மருந்துப் பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சரான பேராசிரியர் சன்ன ஜயசுமன, 'பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாது மக்கள் கூடிக் காணப்படும் இடங்களுக்கு செல்லுதல், பயணங்களை மேற்கொள்ளுதல், களியாட்ட இடங்களுக்கு செல்லுதல் உள்ளிட்ட கொவிட் 19 தொற்று பரவுவதற்கு துணை போகும் வகையில் செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதானது, இத்தொற்று இந்நாட்டில் மீண்டும் தீவிரமடைவற்கு துணை புரிவதாகவே அமையும். அது நாட்டில் வருட இறுதியில் கொவிட் 19 தொற்றின் சுனாமி அபாய நிலை ஏற்பட வழிவகுப்பதாக இருக்கலாம்' என்றுள்ளார்.

அது தான் உண்மை. தற்போதைய சூழலில் இத்தொற்றின் அச்சுறுத்தலையும் ஆபத்தையும் கருத்தில் கொண்டு பூஸ்டர் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டும். இது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# எழுத்தாளர்கள் பலரை உருவாக்கிய பெரும் ஊடக நிறுவனம் லேக்ஹவுஸ்

## சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வில் ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும



எனது முதலாவது ஆக்கம் 1967 ஆம் ஆண்டில், நான் 3ஆம் வகுப்பில் கற்கும் போது லேக்ஹவுஸ் நிறுவனத்தின் 'மிகிர' எனும் பத்திரிகையில் எனது பெயருடன் வெளிவந்திருந்தது. அந்தப் பத்திரிகையை எனது கையில் எடுத்து வாசித்த அந்த கணம் சந்தோசமானது. ஊடகத்துறை அமைச்சராக சத்தியப்பிரமாணம் எடுத்த தருணத்தில் கூட எனக்கு அவ்வாறான மகிழ்ச்சி ஏற்பட்டதில்லை.

மேற்கண்டவாறு ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அங்கு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தாவது:

"நான் ஆனந்தா கல்லூரியில் கல்வி கற்கும் போது அதே மாதத்தில் மேலுமொரு எனது ஆக்கம் சிலுமின பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அரச பத்திரிகை நிறுவனமான லேக் ஹவுஸ் நிறுவனமானது இந்த நாட்டில் பல்லின மொழி, இன எழுத்தாளர்களை உருவாக்கியதொரு சிறந்த நீண்ட கால வரலாறு கொண்ட அரச நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் கௌவரவம் என்றும் மக்கள் மத்தியில் பேணப்பட்டு வருகின்றது.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் சிறுவர்கள் வெளியீட்டினால் நடத்தப்படுகின்ற 'முத்து கர' எனும் சித்திரப் போட்டிக்கு 50 ஆயிரம் மாணவ மாணவியர் விண்ணப்பித்திருந்திருந்தாக அதிகாரிகளினால் எனக்கு கூறப்பட்டது.

இங்குள்ள மாணவர்கள் தமது கற்பனைகளை சித்திரவடிவில் இங்கு சித்திரித்துள்ளார்கள். இங்கு வருகை தந்து பரிசுகள், சான்றிதழ்கள் பெற்றவர்கள் மட்டுமல்லாமல் இப்போட்டிக்கு விண்ணப்பித்து தமது திறமைகளை அனுப்பி வைத்தவர்கள் சகலருக்கும் அவரவர் வீடுகளுக்கு லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஊடாக சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்படும். இவ்விடயமாக நான் ஏற்கனவே லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவருக்கும் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளேன். இவ்வாறானதொரு திட்டத்தை லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் செயல்படுத்துவதையிட்டு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை பூராவும் உள்ள மாணவர்களிடையே இவ்வாறானதொரு சித்திரப் பேட்டியை நடத்தி அதற்காக பாடுபட்டு இதனை செயற்படுத்தும் காரியம் சிறந்ததொரு காரியமாகும். நான் ஊடக அமைச்சுக்கு முன்பு கல்வியமைச்சராக பணியாற்றினேன். அதற்கு முன்பு நானும் ஒரு பத்திரிகையாளன், எழுத்தாளன். ஒரு பத்திரிகையின் ஆசிரியராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியுள்ளேன். அக்காலகட்டத்தில் என்னுடன் கடமையாற்றியவர் லேக்ஹவுஸ் ஆசிரிய பீட பணிப்பாளர் தர்மசிறி காரியவசம் ஆவார். அன்று பத்திரிகைத்துறைக்கு கைகொடுத்தவர்கள் எனது பாடசாலை ஆசிரியர்களும் எனது பெற்றோரும் ஆவர். லேக் ஹவுஸ் நிறுவனமானது இந்த நாட்டில் வாழும் பலரது வாழ்க்கையை திசை திருப்பிய ஒரு அரச நிறுவனமாகும். இந்த மண்டபத்தில் உள்ள சகல புத்திரர்களுக்கும் வீடுகளில் உள்ள மாணவர்களுக்கும் லேக் ஹவுஸ் நிறுவனம் களம் அமைத்துக் கொடுக்கும். இதற்காக அவர்கள் தமது பூரண ஆதரவை வழங்குவார்கள் என நான் நம்புகின்றேன்.

இங்கு நான் ஒரேயொரு குறையைக் காண்கின்றேன். தமிழ் மொழி மூலமான மாணவர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்தல் வேண்டும். இக்குறைபாடு அடுத்த முறை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். நான் கல்வியமைச்சராக இருந்த காலத்தில் பாடசாலைகள் கொவிட் 19 காரணமாக கடந்த ஆண்டு மார்ச்சில் மூடப்பட்டன. மாணவர்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர். தற்காலகட்டத்தில் கூடுதலான பிள்ளைகள் வாசிப்பதில் அக்கறை காட்டுவதில்லை. வாசிப்பு, எழுத்துத் திறன் மாணவர் சமூகத்திற்கு மிக முக்கியமாகும். சகல மாணவர்களும் கையடக்கத் தொலைபேசி மற்றும் சமூகவலைத்தளங்களில் மூழ்கிப் போயுள்ளனர்.

நான் ஒரு கல்வியமைச்சர் என்று இல்லாமல் ஒர் தந்தை என்ற ஸ்தானத்தில் கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் சிங்கள, தமிழ்ப் புத்தாண்டில் சகல மாணவர்களும் தமது சொந்த ஆக்கங்களான சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், கட்டுரைகள் எழுதும் ஒரு திட்டத்தினை ஆரம்பித்தேன். நான்கு மாதங்களுக்குள் இலங்கை பூராக 43 ஆயிரம் ஆக்கங்கள் கல்வியமைச்சுக்கு வந்தடைந்தன. அவற்றில் மும்மொழிகளிலும் 4 இலட்சம் சிறுகதைகள், கவிதைகள், நாடகங்களை எழுதியனுப்பினார்கள். அவற்றை பிரசுரிக்க தயார்படுத்தினேன். அதனை அலரி மாளிகையில் வைத்து மாணவர்களை அழைத்து ஜனாதிபதி, பிரதமரினால் சான்றிதழ் வழங்கி இம்மாணவர்களை கௌரவிப்பதற்கும் எண்ணியிருந்தேன். அத்திட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பின்போடப்பட்டது. அதற்காக நான் மன்னிப்பு கோருகின்றேன். தற்போதைய கல்வியமைச்சர் தினேஷ் குணவர்த்தன இத்திட்டத்தினை செயல்படுத்துவதாக எனக்கு உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவர் ஜனானதிபதி சட்டத்தரணி தயாரத்ன, ஆசிரிய பீட பணிப்பாளர் தர்மசிறி காரியவசம் மற்றும் பணிப்பாளர்கள், அதிகாரிகள் மாணவர்களின் பெற்றோர் கலந்து கொண்டனர்.

(தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்)

# உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் 10 இலட்சம் பெண் தொழில்முனைவோரை உருவாக்க திட்டம்



ஆண்டுதோறும் நடைபெறும் உலகத் தமிழர் திருநாள் விழா, உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு, உலகத் தமிழ் பாராளுமன்றம் ஆகியன இம்முறை எதிர்வரும் ஜனவரி மாதம் 8,9,10 ஆம் திகதிகளில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற உள்ளன. இந்நிகழ்வில் இந்தியா மற்றும் அயலக நாடுகளின் தமிழ் அமைப்புகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளன.

மேலும் இவ்வாண்டு தமிழ் பெண் தொழிலதிபர்களை உருவாக்கும் விதமாக சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட உள்ளது. உலக நாடுகளில் பல்வேறு சமூக அமைப்புகள் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தலைமையில் 1 பில்லியன் பெண் தொழிலதிபர்களை 2030ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்படுத்த உள்ளன.

அந்த சமூக அமைப்புகள் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்புடன் இணைந்து உலகெங்குமுள்ள தமிழ் பெண்களை தொழிலதிபர்களாக உருவாக்க திட்டமிட்டுள்ளன. இதன் மூலம் தமிழ் பெண்கள் சுமார் 10 இலட்சம் பேர் தொழிலதிபர்களாக உருவாக்கப்படுவர். இந்த சிறப்பான திட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மற்றும் பல்வேறு நாடுகளில் தமிழ் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களின் உதவியுடனும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு செயலாற்ற உள்ளது.

மூன்று நாள் நடைபெறும் இச்சிறப்பான நிகழ்வின் முதல் நாள் தொடக்க நிகழ்வாக 200 இற்கும் மேற்பட்ட நாதஸ்வர தமிழ்க் கலைஞர்கள் பங்கேற்கும் வரவேற்பு மற்றும் போட்டி நிகழ்வுகளும், தமிழ் கொமன்வெல்த் அமைப்பு உருவாக்கமும், அதன் செயல் தி ட்டமும் பல்வேறு கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொள்ளும் கலை கலாசார உடை திருவி ழா, பரதநாட்டியம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், பறையாட்டம், மறந்து போன விளையாட்டு நிகழ்வுகள், பழங்கால இசைக்கருவிகள் பண்டைய கால தமிழன் வரலாற்று காட்சியகம், நாட்டியாஞ்சலி, குரலோவியம் போன்ற நிகழ்வுகளும் 'வளரும் தமிழகம்' என்ற பெயரில் அரசின் நலத் திட்டங்கள் காட்சியகம், தமிழரின் பாரம்பரிய உணவு வகைகளை காட்சிப்படுத்தும் உணவு திருவிழாவாகவும், கிராமத்தில் நடைபெறும் பொங்கல் விழாவாகவும் ஜனவரி 8 மற்றும் 9ம் தேதிகளில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற உள்ளன.

மேலும் உலகெங்குமுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவும், இணைய வழியாகவும் ஜனவரி 10ஆம் திகதி கலந்து கொள்ள உள்ளனர் என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# கொடிய மிருகங்களுக்கு மத்தியில் தேவதை போன்ற ஒரு மனிதர்!

## நாகரிக உலகம் தலைவணங்க வேண்டிய மனிதநேயன் மலிக் அத்நான்



காட்டு மிருகங்கள் போன்ற மக்களுக்கு மத்தியில் மனிதர்களும் வாழ்கின்றார்கள் என்பதை நாம் அண்மையில் பார்த்த வீடியோ ஒன்றின் மூலம் உறுதி செய்து கொண்டுள்ளோம். அது பாகிஸ்தானின் சியல்கொட்டில் அண்மையில் நடந்த சம்பவமாகும். பிரியந்த தியவடன வின் படுகொலையின் போது பாகிஸ்தான் பிரஜையொருவர் நடந்து கொண்ட விதம் மனதையே உருகச் செய்தது. அவர் மலிக் அத்நான் என்னும் நபராவார்.

அவர் பாகிஸ்தான் ஊடகங்களுக்கு தான் பிரியந்த தியவடனவுக்கு உதவியாளர், நண்பர் எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் அவர் சம்பவம் இடம்பெற்ற தொழிற்சாலையில் பணிபுரிபவர். அச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் ஆயிரக்கணக்கானோர் வெறியுடன் கூக்குரலிட்ட போது, சுயநினைவுடன் நடவடிக்கையில் ஈடுபட்ட ஓரேயொரு மனிதர் அவர் எனக் குறிப்பிடலாம்.

ஏனைய ஊழியர்கள் மதஅடிப்படைவாதிகளாவர். அவர்கள் வெறிகொண்டு கூச்சலிட்டவாறு, பிரியந்த தியவடனவை பிடிக்க முயற்சி செய்த வேளையில், மலிக் அந்நாத் அவரை கூரையில் மறைத்து வைத்து காப்பாற்ற முயற்சி செய்துள்ளார். ஏனைய ஊழியர்களால் பிரியந்த தியவடன கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும், அவரை காப்பாற்ற மலிக் அந்நாத் முயற்சி செய்துள்ளார். வெறிபிடித்த காடையர் கும்பல் பிரியந்தவை இழுத்துச் செல்ல முற்பட்ட வேளையில் தனது உடம்பால் அவரை மறைத்து காப்பாற்ற முயற்சி செய்த காட்சி வீடியோவில் பதிவாகி சமூக ஊடகங்களில் பரவியுள்ளது.

அன்றைய தினம் பாகிஸ்தானிலுள்ள அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளும் அக்காட்சியை நாடு பூராவும் உள்ள மக்களுக்காக ஒளிபரப்பின. அதற்குக் காரணம் அந்நாட்டிலுள்ள பெரும்பான்மையினர் அந்த மதவாதவெறியர்களின் நடத்தையை எதிர்க்கின்றார்கள் என்பதாக இருக்கலாம்.

எவ்வாறாயினும் ஆயிரக்கணக்கான வெறியர்களுக்கு எதிராக தனிமனிதனால் போராட முடியாது போனதால், மலிக்கின் பிடியிலிருந்து பிரியந்தவை அவர்கள் இழுத்துச் சென்றார்கள். அதன் பின்னர் நடந்த சம்பவம் மிகவும் காட்டுமிராண்டித்தனமானது. தாங்கள் கொடிய விலங்குகள் என்பதை அவர்கள் நிரூபித்து விட்டார்கள். எவ்வாறாயினும் முழு உலகிற்கும் முன்னால் பாக்கிஸ்தானின் பெயருக்கு களங்கம் ஏற்பட்ட வேளையில், அதனை ஓரளவாவது காப்பாற்ற மலிக் அந்நாத் என்னும் தனிமனிதனால் முடிந்துள்ளது.

அதனை அவ்வாறே புரிந்து கொண்ட பாகிஸ்தான் பிதமர் இம்ரான் கான், மலிக் அத்நானுக்கு அந்நாட்டு சிவில் குடிமகனுக்கு வழங்கப்படும் உயரந்த விருதான 'ஷதம்க்ஹா இ சுஜாத் ஷ்' என அந்நாட்டு மொழியால் அறியப்படும் வீரத்துக்கான விருதை வழங்க முடிவு செய்தார். அவர் சம்பவம் இடம்பெற்று இரண்டு நாட்களுக்குப் பின்னர் டுவிட்டர் செய்தி மூலம் மலிக் அத்நானுக்கு விருது வழங்கவுள்ளதாக அறிவித்தார். அதன்படி கடந்த ஏழாம் திகதி மலிக் அந்நாத் பிரதமரின் வாசஸ்தலத்துக்கு அழைக்கப்பட்டதோடு, காலையிலிருந்து விருந்தினராக அங்கு தங்க வைக்கப்பட்டு பின்னர் அவருக்கு பிரதமர் இம்ரான் கானால் வீரத்துக்கான விருது வழங்கப்பட்டது.

அவ்விருதானது நல்லதையும் சரியானதையும் செய்ய பாகிஸ்தானியர்களை மாத்திரமல்ல உலக மக்கள் அனைவரையும் ஊக்குவிக்க அளிக்கப்பட்டதாகும். எவ்வாறாயினும் தனக்கு எதிராக வரும் மதஅடிப்படைவாத வெறிபிடித்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் தனது உடலை கேடயமாக மலிக் அந்நாத் பயன்படுத்தியது இலங்கையைச் சேர்ந்த பிரியந்த தியவடனவுக்கு மரணத்துக்கு முன்னர் ஒரு நொடியாவது நிம்மதியை தந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவ்விதத்தில் மலிக் அத்நான் வீரரே ஆவார். அவருக்கு வீரத்துக்கான விருது அளிக்கப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

டிரோனி வேவலகே
தமிழில்: வீ.ஆர். வயலட்

SMART PHONE பாவனை:

# அனுகூலமானவற்றை பயன்படுத்த மாணவர்கள் தவறக் கூடாது!

சீனாவில் கடந்த 2019 டிசம்பரில் வூஹான் எனும் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட Covid 19 வைரஸ் காரணமாக உலகெங்கிலும் அரசியல், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி மற்றும் கைத்தொழில் என பல்வேறு துறைகளிலும் பாரிய பின்னடைவுகளும் சவால்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தீவிரமான வைரஸ் பரவல் காரணமாக விசேடமாக கல்வித்துறை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. தொற்றுப் பரவல் காரணமாக பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டன. ஆனாலும் மாணவர் சமூகத்தின் நலன் கருதி நிகழ்நிலை மூலம் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்பதால் அதிகமான மக்களிடம் திறன்பேசி (Smart phone) பாவனை இருக்கவில்லை. தொழிற்நுட்ப வசதிகள், அது பற்றிய அறிவு, அது பற்றிய பயன்பாடு என்பன இலங்கைவாழ் மக்களிடம் அரிதாகக் காணப்பட்டதால் பாரிய தொழில்நுட்ப சவால்களுக்கு ஆசிரியர்கள் , பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் முகம்கொடுத்தனர்.

இணையவழிக் கல்வி முறைமை எளிதான முறையாக இருந்தாலும் 65 வீதமான மாணவர்கள் இந்தக் கல்வி முறைமையை பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மூலம் 2019 இன்படி Desktop, Laptop கணினிகள் உள்ள குடும்ப வீதம் 22 வீதம் ஆகும். நகர்ப்புறத்தில் 38 வீதமாகவும் கிராமப்புறத்தில் 18 வீதமாகவும் மலையகப் பகுதியில் 46 வீதமாகவும் காணப்படுகிறது. அதேவேளை இணையத்தளங்களை பயன்படுத்தும் குடும்பங்களின் சதவீதம் 30.3. அவற்றில் நகர்ப்புறத்தில் 47.4 வீதமாகவும் கிராமப்புறத்தில் 27.5 வீதமாகவும் மலையக பகுதியில் 12.2 வீதமாகவும் காணப்படுகிறது.



தொலைக்காட்சி வசதி உள்ள குடும்பங்கள் 90 வீதமாகும். வானொலி வசதிகள் கொண்ட குடும்பங்கள் சுமார் 63 வீதமும் உள்ளதாக புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனாலும் இணையத்தளக் கல்வி போலவே தொலைக்காட்சி, வானொலி சேவைகளும் ஒட்டுமொத்த இலங்கையையும் தழுவுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களிலும் பின்தங்கிய கிராமங்களில் தொலைபேசி சமிக்ஞை காணப்படாமையினால் மாணவர்களும் பெற்றோர்களும் மரங்களிலும் மலை உச்சிகளிலும் சமிக்ஞைகளைத் தேடி அலைந்த காட்சிகளை நாம் ஊடகங்களில் கடந்த காலத்தில் காணக் கூடியதாக இருந்தது. தொழில்நுட்ப அறிவைத் தேடி மாணவர் சமூகம் இணையத்தளத்தில் புகுந்த போதும், அதன் எதிர்மறையான தாக்கம் மாணவர் மத்தியில் பெரும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

திறன்பேசி பாவனைக்கு பழக்கப்பட்டுள்ள மாணவர் சமூகம் அதன் தவறான கேளிக்கை விளையாட்டுக்கள் , தகாத பதிவிறக்கங்கள், உடலியல் நோய்கள், உளத் தாக்கம் போன்ற பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. நிகழ்நிலையில் இருப்பதாகக் கூறிக் கொண்டு பல வெவ்வேறான இணைப்பு தொடர்புகளில் கவனத்தை செலுத்தி வருவதால் பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு இடையிலான முரன்பாடுகள் தோன்றியுள்ளதை நாம் அறிய முடிகின்றது. ஆனாலும் வளர்முக நாடுகளில் தொழில்நுட்ப வளர்ச்சியினால் கற்றல் நடவடிக்கைகள் பாரிய வெற்றிகளை அடைந்துள்ளதை ஆய்வுகள் சான்று காட்டி நியாயப்படுத்துன்றன.

எது எவ்வாறாயினும் நாணயத்திற்கு இரு பக்கங்கள் போல எந்தவொரு விடயத்திலும் நன்மை, தீமை என்ற இரண்டும் கலந்துள்ளன. மாணவர் சமூகம் தொழில்நுட்ப அறிவின் மூலம் நல்லவற்றை மட்டுமே பெற்று எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக, புத்திஜீவிகளாக மிளிர மாணவர் சமூகத்தை பெற்றோர், ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வழிநடத்த வேண்டும்.



ஜெ.எம்.இல்லியாஸ் (B.ED) ...
அ / கோவில்பந்தாவ முஸ்லிம் வித்தியாலயம்

# மக்கள் உள்ளங்களை இசையினால் கவர்ந்தவர் நாகூர் இசைமணி யூசுப்

## தமிழகத்தில் கர்நாடக இசை கற்றுத் தேர்ந்த ஒரேயொரு முஸ்லிம் கலைஞனின் மறைவு

இசை நமது உணர்வுகளை ஒருங்கிணைத்து நம்மை ஆளும் ஓர் ஆளுமை. இசை என்னும் சொல்லுக்கு இசைய வைப்பது என்றும் பொருள். நாகூர் இசைமணி எம்.எம்.யூசுப் தன் இசையால் மனித மனங்களை இசையவைத்து. இசையுலகில் பெரும் புகழ் பெற்றார். ஆழமான இசைக்கடலில் ஆர்பாட்டமில்லாத அமைதியான முகத்துடன் பயணித்தவர் நாகூர் இசைமணி எம்.எம்.யூசுப்.

நாகூர் புதுமனைத் தெருவில் வசித்து வந்த முஹம்மது முஹைதீன், ஜெய்னம் சுல்தான்பீவி தம்பதியருக்கு மகனாக 07.04.1933ம் ஆண்டு அவர் பிறந்தார். கேள்வி ஞானத்தால் இசையுலகில் நுழைந்தார் இசைமணி யூசுப். சென்னையில் தமிழ் இசைச் சங்கத்தில் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் பயின்று, வாய்ப்பாட்டிலும் எழுத்துத் தேர்விலும் வென்று 1958 ஆம் ஆண்டு தமது 28வது வயதில் இசைமணி பட்டம் பெற்றார்.

இசைக்கல்லூரியில் இசைமணி சீர்காழி கோவிந்தராசன் அவர்கள் இவருக்கு ஓராண்டு மூத்தவர். தமிழகத்திலேயே கர்நாடக இசை பயின்று இசைமணி பட்டம் பெற்ற முஸ்லிம் இவர் ஒருவரே. இராஜா அண்ணாமலை மன்றத்தில் 'இசைச்செல்வர்' பட்டமும் பெற்றுள்ளார். சென்னை பல்லாவரத்தில் உள்ள தமது இல்லத்திற்கு 'இசையில்லம்' என்றே பெயர் வைத்தவர். காயிதேமில்லத் மீது அளப்பரிய அன்பு கொண்டதால் அவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு, மற்றும் பொதுக்கூட்ட மேடைகளில் எல்லாம் பாடல்கள் பாடுவார்.

நாகூரில் பிறந்து வளர்ந்த எம்.எம். யூசுப் 'இசைமணி' என்னும் விருதுப் பெயரோடு முஸ்லிம் உலகம் முழுவதிலும் வலம் வந்துள்ளார். முறையாக கர்நாடக இசையை கற்று கேட்போரின் உள்ளங்களை உருகச் செய்யும் விதமாக தனது இசையை வெளிப்படுத்திய மேதையும் அவராவார்.



சென்னை வானொலி நிலையத்தில் தேர்வு செய்யப்பட்ட பாடகராக இவர் பல ஆண்டுகள் பாடியுள்ளார். இலங்கை மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வானொலி, தொலைக்காட்சிகளில் பாடல்கள் பாடியுள்ளார். சென்னை வானொலியில் இசை அமைப்பாளர்கள் டி.ஆர். பாப்பா, எல். கிருஷ்ணன், ஞானஸ்கந்தன் ஆகியோரின் இசையில் பாடிய பாடல்கள் மிகவும் பிரபலமடைந்தன.

பின்னணிப் பாடகி பி. சுசிலா, ரி.எம். சௌந்தராஜன் வாணி ஜெயராம் ஆகியோருடன்இணைந்து திரைப்படங்களில் பாடியுள்ளார். சுசீலாவின் பக்திப் பாடல் தொகுப்பில் 2 பாடல்கள் இசைமணியோடு இணைந்து பாடிய பாடல்கள் அடங்கும். சென்னை தலைமைச் செயலகத்தில் மனமகிழ்மன்றம் சார்பாக நடத்திய கச்சேரியில் இசைமணியை பாராட்டி 'ஏழிசைச்செல்வர்' எனும் விருதினை அளித்து கௌரவித்தனர். அன்னார் 18.11.2021 இல் காலமானார். ஜமின் பல்லாவரத்தில் உள்ள பதுருத்தின் தர்கா மையவாடியில் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இஸ்லாமிய இசைத்தமிழ் ஓய்வெடுத்தது.

கவிஞர் எம். ஜலாலுதீன்...
அமைப்பாளர், நிலா வட்டம்

# மழை பெய்ததும் வெள்ளத்தில் மூழ்கும் கம்பிரிகஸ்வெவ மனாருள் உலும் ம.வி

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வீதியொன்று புனரமைக்கப்படும் போது மழைநீர் வடிந்து செல்வதற்கு ஏற்றதாக மதகுகள் மற்றும் வடிகான்களை அமைக்கப்பட வேண்டும். அநுராதபுரம் மாவட்டத்தின் ஒயாமடுவவில் 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற தெயட்ட கிருள (தேசத்திற்கு மகுடம்) தேசிய கண்காட்சிக்கு அமைவாக அப்போதய அரசாங்கத்தினால் அநுராதபுரம் மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னடுக்கப்பட்டன.



இதன் போது இம்மாவட்டத்தில் போக்குவரத்து செய்ய முடியாமல் குண்டும் குழியுமாக இருந்த அதிகமான வீதிகள் காபட் இடப்பட்டு புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டு அநுராதபுரம், பரசன்கஸ்வெவ_ கட்டுக்கெலியாவ பிரதான வீதியின் 34 கிலோமீற்றர் தூரமுடைய வீதியும் ஏ.பீ.சி.காபட் இட்டு புனரமைக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

## மழைநீர் வடிந்து செல்ல வடிகான்கள் இல்லை!

அவ்வாறு திறந்து வைக்கப்பட்ட பிரதான வீதியில் அமைந்துள்ள 309 கிராம சேவகர் பிரிவின் மத்திய நுவர கம்பளாத்த பிரதேச செயலாளர் பிரிவின் நிருவாக எல்லைக்குட்பட்ட கம்பிரிகஸ்வெவ கிராமத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மழைநீர் வடிந்து செல்வதற்கு ஏற்றதாக மதகுகள் மற்றும் வடிகான்கள் அமைக்கப்படாத காரணத்தினால் மழைகாலங்களில் மழைநீர் வடிந்து செல்ல முடியாமல் தேங்கி நிற்கின்றது. இதனால் வீதியின் ஒரு பகுதியிலுள்ள வீட்டு உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



அவ்வாறு தேங்குகின்ற மழைநீர் கம்பிரிகஸ்வெவ அ/ மனாருள் உலும் மகா வித்தியாலயம் அமைந்துள்ள பாடசாலை வளாகத்தின் ஊடாக வடிந்து செல்வதால் முழு பாடசாலை வளாகமுமே மழைநீரில் மூழ்குவதுடன் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பாரிய அசௌகரிகங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து வித்தியாலய அதிபர் ஜே.அசாட் மொஹமட் கூறுகயில், உரிய முறையில் வடிகான் அமைக்கப்படாத காரணத்தினால் மழைநீர் வடிந்து செல்ல முடியாமல் பாடசாலை வளாகத்தின் ஊடாகவே செல்கின்றது. அதனால் மலசலகூடங்களின் கழிவறைக் குழிகள் நிரம்பி வழிவதுடன், டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய அபாயம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

மாணவர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எழுத்து மூலம் அறிவித்தும் எந்தவிதமான சாதகமான பதில்களும் கிடைக்கவில்லையென அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் லக்ஷ்மன் சந்திரசிரியுடன் தொடர்பு கொண்டு வினவிய போது "அங்கு அப்படியான பிரச்சினை ஒன்று காணப்படுவது உண்மைதான். அவ்விடத்திற்கு நாங்கள் நேரில் சென்று பார்வையிட்டோம். மழைநீர் வடிந்து செல்லக் கூடிய மதகுக்கு முன்னால் இடைஞ்சல் ஏற்படும் விதத்தில் சிலர் மதில்களை அமைத்துள்ளனர். அதனால்தான் மழைநீர் பாடசாலை பக்கமாக செல்கின்றது.

வீதியில் இருந்து ஏழரை அடிதான் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தம். தனியாருக்கு சொந்தமான காணிகளுக்கு உள்ளால் வடிகான்களை அமைக்க முடியாது. அதனால் எங்களுடைய நொச்சியாகம அலுவலகத்தின் பிரதான பொறியலாளருக்கு அறிவித்துள்ளேன். குறித்த பிரச்சினை தொடர்பில் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸாரது உதவியுடன் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வினை பெற்றுக் கொடுக்குமாறு கூறப்பட்டுள்ளதுடன் நாங்கள் பிரதேச செயலாளருக்கும் பொலிஸாருக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளோம்" என தெரிவித்தார்.

ஏ.பிர்தௌஸ் ...
(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

அடிக்கல் நடப்பட்டு 3வருடங்கள்:

# காரைதீவில் வரவேற்பு வளையி அமைப்பதில் தொடரும் தாமதம்!

காரைதீவு தென்புறஎல்லையில் வரவேற்புவளையியை நிருமாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி 3 வருட காலமாக பயன்படுத்தப்படாத காரணத்தினால் அந்நிதி மீளத் திரும்பிப் போகும் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக கூறப்படுகிறது. இதற்காக மூன்று வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் நடப்பட்டது. ஆனால் இன்னும் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படாதிருப்பது குறித்து காரைதீவு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபரான வே.ஜெகதீசன் முன்னர் காரைதீவு பிரதேச செயலாளராகவிருந்த போது 2018ஆம் ஆண்டு இதற்கான அடிக்கல் நடுவிழா கோலாகலமாக நடைபெற்றது. காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் அதற்கான 85 இலட்ச ரூபா நிதியை முன்னாள் அமைச்சர் மனோகணேசனிடமிருந்து பெற்று பிரதேச செயலகத்திடம் கொடுத்திருந்தார். அமுல்படுத்தும் பொறுப்பு வீதிஅபிவிருத்திஅதிகாரசபையின் நிருமாணத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் நிருவாக நடவடிக்கைகள் காரணமாக அப்பணி தாமதமடைந்து வந்தது. சுமார் இரு வருட காலமாக இக்கட்டுமானப் பணி இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் 2020 நவம்பர் மாதம் 16ஆம் திகதி இதன் கட்டுமானப் பணிளை மீள ஆரம்பிக்குமுகமாக பிரதேச செயலாளர், தவிசாளர் மற்றும் வீதிஅபிவிருத்திஅதிகாரசபை உயரதிகாரிகள் கூடி களத்திற்குச்,சென்று உரிய இடத்தை நிருமாணத்,திணைக்களத்திற்கு வழங்கியிருந்தனர். இருந்த போதிலும் இன்றுவரை அப்பணி ஆரம்பமாகவில்லை. அடிக்கல் நடப்பட்ட இடம்கூட தெரியாத நிலையில் உள்ளது.

"3 வருடத்திற்கு முன்பு அடிக்கல் நடப்பட்ட போதிலும், இன்னும் வரவேற்புவளையியைக் காணாமல் கவலையடைகின்றோம். ஏனைய சில ஊர்களில் நினைத்த மாதிரி இத்தகைய வளையிகளைக் கட்டுகிறார்கள். ஆனால் இங்கு மட்டும் ஏகப்பட்ட தடைகள் நடைமுறைகள். 3 வருடமாக இப்பணி தாமதமடைந்து வருகிறது. இதற்கு பிரதேச செயலாளர், தவிசாளர், வீதித்துறையினர் பதிலளிக்க வேண்டும்" என்று மக்கள் கூறுகின்றனர்.

தவிசாளர் கி.ஜெயசிறில் இது பற்றித் தெரிவிக்கையில், "காரைதீவு தென்புல எல்லையில் வரவேற்புவளையி அமைக்க வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்டநாள் ஆசையை நிறைவேற்றுமுகமாக நான் எனது சொந்தப் பணத்தைச் செலவழித்து கொழும்பு சென்று முன்னாள் அமைச்சர் மனோகணேசனிடம் 85 இலட்ச ரூபா பணம் பெற்று பிரதேசசெயலகத்திடம் பணியை ஒப்படைத்தேன். அதனிடையே துறைசார்ந்த ஊர்ப்பிரதிநிதிகளை அழைத்து எவ்வாறு இந்த வரவேற்புவளையி வர வேண்டும் என்ற ஆலோசனையையும் பெற்றிருந்தேன். அதன்படி முறைப்படி உரியவர்களிடம் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்பட்டன.

இதன் கட்டுமானப் பணியை கட்டடத் திணைக்களத்திடம் ஒப்படைத்து, வீதிஅபிவிருத்திஅதிகாரசபையின் நிருமாணப் பிரிவு முன்னெடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அறிந்தேன். ஆனால் இதுவரை ஒருஅடி கூட நகரவில்லை. 3 வருடத்திற்கு என்ன நடந்தது? நானும் கவலையடைகிறேன். தாமதத்திற்குகாரணம் என்னவென்று கூடத் தெரியவில்லை" என்றார்.

பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜனிடம் கேட்ட போது "பொதுமக்களின் கவலை நியாயமானதுதான். வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து நிருமாணத் திணைக்களத்திற்கு உரிய வரவேற்புவளையியின் திட்ட அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் வடிவமைப்புக்கான அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லையெனத் தெரிகிறது. அதன் காரணமாகவே இத்தாமதம் நிலவுகிறது" என்றார்.

உரிய தரப்பினர் இவ்வரவேற்பு வளையியை இனியாவது அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா? என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வி.ரி.சகாதேவராஜா ...
(காரைதீவு குறூப் நிருபர்)

## பகிரங்க விவாதத்திற்கு... (03ஆம் பக்கம் பார்க்க)

என்ற வகையில் மாவட்ட முஸ்லிம்களுக்கு காணி தொடர்பில் இழைக்கப்பட்ட அநீதிகளை இந்நாட்டு மக்களுக்கு வெளிக்கொணர வேண்டிய தேவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் குறித்து உங்களுடைய அறியாமையை உங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் இது தொடர்பாக திறந்தவெளியில் உங்களுடன் விவாதிக்கும் வகையில் உங்களது சம்மதத்தை நான் எதிர்பார்ப்பதுடன் அதற்குரிய இடம், பொருத்தமான நேரம் தொடர்பில் இருவரும் கலந்தாலோசித்து இந்த பகிரங்க விவாதத்தை நடத்த வேண்டும் என வேண்டுகின்றேன் என்றும் இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டு நாணயத்தை... (03ஆம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு நாணயம் டொலரொன்றுக்கு 210 ரூபா பெற்றுக்கொள்ளும் வகையில் ரூபாவாக மாற்றம் செய்வதற்கு எந்தவொரு வங்கியிலும் ரூபா வைப்பீட்டு கணக்கில் அதனை வைப்பிடவும் முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு கணக்கு வைப்பில் அல்லது விசேட கணக்கில் வைப்பிலிடவும் முடியும் என்றும் அதனை மத்திய வங்கி ஊக்குவிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவ்வாறின்றேல் இலங்கை அபிவிருத்தி பிணை முறிகளில் முதலீடு செய்யுமாறும் மக்கள் வங்கி அழைப்பு விடுத்துள்ளது.

## கடலில் மூழ்கிய நால்வரில்... (03ஆம் பக்கம் பார்க்க)

ஆகியோரின் சடலங்களே நேற்று மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை மன்னார் களப்பு பகுதியில் படகில் பயணித்துக் கொண்டிருந்தோரில் இருவர் கடலில் விழுந்து காணாமற்போயுள்ளனர். 27 வயதான இளைஞனை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஸ)

## இழப்பீடு அல்ல; காணாமல்...

ஆணைக்குழு முன்பாக ஒரு தாய் கூறியுள்ளார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அமர்வு நேற்றைய தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே குறித்த தாய் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், திருநெல்வேலி கடை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த நிலையில் எனது மகன் காணாமல் போயிருந்தார். எனது மகனை மீட்டுத் தருமாறு பல்வேறு தரப்பினரிடம் கேட்டேன்.

எனது உடல்நிலை மாத்திரையின்றி இயங்காத நிலையில் தினமும் மாத்திரைகளை உற்கொண்டே எனது அன்றாடக் கடமைகளை மேற்கொண்டு வருகிறேன். எனக்கு இழப்பீடு வேண்டாம் எனது பிள்ளையை மீட்டுத் தாருங்கள் என ஆணைக்குழுவிடம் உருக்கமான கோரிக்கையை முன்வைத்தார்.

## ஞாயிறு நள்ளிரவு...

ஆரம்பித்து வைப்பார். அன்றைய தினம் அவரின் கொள்கை விளக்க உரை இடம்பெறும்.

2021 நவம்பர் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 2022 வரவு செலவுத் திட்ட விவாதம் டிசம்பர் 10 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. அன்றைய தினம் பாராளுமன்றம் ஜனவரி 11 வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. வரவு செலவுத்திட்டம் 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

8 ஆவது பாராளுமன்றத்தில் பாராளுமன்ற கூட்டத் தொடர்கள் 4 தடவைகள் ஒத்திவைக்கபட்டது குறிப்பிடத்தக்கது. 9 ஆவது பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர் ஜனவரி 18 ,ல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்ற குழுக்கள் மீண்டும் புதிதாக நியமிக்கப்படும்.

அரசியலமைப்பின் 70 ஆவது சரத்தின் 1 ஆவது உப சரத்தின் கீழ் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கூட்டவும் கலைக்கவும் கூட்டத் தொடரரை நிறைவு செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்ற கூட்டத் தொடரை முடிவுறுத்தி வெளியிடப்படும் உத்தரவில் மீண்டும் பாராளுமன்றத்தை கூட்டும் திகதி குறிப்பிடப்பட வேண்டும்.அதாவது புதிய அமர்வு ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்பட வேண்டும். இந்த நிலையில் அடுத்த கூட்டத் தொடர் ஆரம்பிக்கும் திகதியும் புதிய வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் தயாசிறி



தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவது பொருத்தமானது என தானும் நம்புவதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில் நாம் IMF உடன் இணைந்து வேலை செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் ஏனைய நாடுகளின் ஆதரவு கொஞ்சம் குறைவாக உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என தனிப்பட்ட முறையில் தான் நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## 27 கோடியை கடந்த... (03ஆம் பக்கம் பார்க்க)

பல்வேறு நாடுகள் அச்சமடைந்தன. இதனால் உலக சுகாதார மையத்தின் அறிவுரையையும் மீறி நாடுகள் பயணத் தடை விதித்தன.

இந்தச் சூழலில், சா்வதேச அளவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை தற்போது 27 கோடியைக் கடந்துள்ளது.

உலகம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 5,321,859 போ் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனா். கொரோனா பலி எண்ணிக்கையிலும் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. இதுவரை அந்த நாட்டில் 817,956 போ் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனா்.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக பிரேஸிலில் 817,956 போ் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

## பைசர் தடுப்பூசி வழங்க...

15 வயதுக்குமிடைப்பட்ட சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 16 வயதுக்கு மேற்பட்ட இதுவரை ஒரு பைசர் தடுப்பூசியை பெற்றுக்கொண்ட சிறுவர்களுக்கு மூன்று மாதங்களுக்குப் பின்னர் மற்றுமொரு பைசர் தடுப்பூசியை வழங்குவதற்கு அந்த விசேட நிபுணர் குழு தீர்மானித்துள்ளது.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ ஆய்வு நிலையத்தின் தலைவர் பேராசிரியர் ஸ்யாமன் ரஜீந்திரஜித் தெரிவிக்கையில்:

12வயதுக்கும் 15 வயதுக்குமிடையில் உள்ள சிறுவர்களுக்கு ஒரு தடுப்பூசியை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் சிலர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பமின்மையைத் தெரிவித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## சக்திவாய்ந்த 81 ரக...

இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட குண்டுகளைச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கையினை வாழைச்சேனை விஷேட அதிரடிப் படையினர் மேற்கொண்டனர்.

இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் கைவிடப்பட்டுள்ள குண்டுகள் பாதுகாப்புத் தரப்பினருக்கு கிடைக்கும் தகவலுக்கமைய மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டு வருவதுடன், இவ்வாறு குண்டுகளை மீட்டு செயலிழக்கச் செய்வதனூடாக சிவிலியன்கள் உயிர்கள் பாதுக்காக்கப்படுகிறது. உயிரை துச்சமென மதித்து இப்பணியில் ஈடுபட்டு வரும் குண்டு செயலிழக்கச் செய்யும் அணியினரின் சேவை பாராட்டத்தக்கதாகும்.

அத்தோடு, இவ்வாறான அனாமோதய குண்டுகள், ஆயுதங்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருப்பதுடன், இவ்வாறான குண்டுகள் மற்றும் வெடிக்கும் பொருட்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும், அது பற்றிய தகவல்களை அருகிலுள்ள பாதுகாப்புத்தரப்பினருக்கு அறியத்தருமாறும் பாதுகாப்பு தரப்பினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## பத்துக்கோடி ரூபா நட்டஈடு...

அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த பெண்ணின் கணவர் உள்ளிட்ட உறவினர்களால், சமையல் எரிவாயு நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

10 கோடி ரூபா இழப்பீடு கோரி குறித்த வழக்கினை தாக்கல் செய்யவுள்ளதாக உயிரிழந்த பெண்ணின் கணவர் எமது செய்தி சேவைக்குத் தெரிவித்தார். 51 வயதுடைய பெண் ஒருவரே சமையல் எரிவாயுடன் தொடர்புடைய வெடிப்பு சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

மாத்தளை வில்கமுவ பகுதியைச் சேர்ந்த குறித்த பெண், தமது பிள்ளையின் மேலதிக கற்றல் செயற்பாடுகளுக்காக குண்டசாலை பகுதியில் உள்ள தற்காலிக வீடொன்றில் தங்கியிருந்த நிலையில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் அரசாங்கமோ, அதனுடன் தொடர்புடைய பொறுப்பு வாய்ந்த நிறுவனமோ எந்தவொரு ஆய்வினையும் இதுவரை நடத்தவில்லையென உயிரிழந்த பெண்ணின் கணவர் எமது செய்தி சேவைக்குத் தெரிவித்தார். அதேநேரம் மட்டக்களப்பிலும் சமையல் எரிவாயுடன் தொடர்புடைய வெடிப்பு சம்பவம் ஒன்று நேற்று பதிவானது.

இந்த சம்பவத்தில் சமையல் எரிவாயு அடுப்பு சேதமடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

## ஒப்சேர்வர் SLT மொபிடெல் பாடசாலை...

பணடாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இன்று 14 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு இடம்பெறுகிறது

கொவிட்19 தொற்றுநோய் உலகெங்கிலும் உள்ள அனைத்து நிகழ்வுகளையும் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக சீர்குலைக்கும் அச்சுறுத்தலைக் கொண்டிருந்தாலும், சண்டே ஒப்சேர்வர் மற்றும் அதன் முதன்மை அனுசரணையாளரான SLT மொபிடெல் 2020 நிகழ்வு மற்றும் இப்போது 2021 களியாட்ட நிகழ்வுகள் இரண்டையும் நடத்துவதற்கு மிகவும் அதிர்ஷ்டசாலிகள்.

சிறப்புமிக்க பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்பவர் வேறு யாருமல்ல, இலங்கையை கிரிக்கெட்டில் மிகவும் விரும்பத்தக்க தருணத்திற்கு வழிநடத்தியவர், “கேப்டன் கூல்” அர்ஜுன ரணதுங்க. 1996 மார்ச் 17, 1996 அன்று பாகிஸ்தானின் லாகூரில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி அவுஸ்திரேலியாவை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது இவரது தலைமையில்தான்.

1980 ஆம் ஆண்டு ஒப்சர்வர் பாடசாலை துடுப்பாட்ட வீரர் விருதை ரஞ்சன் மடுகல்லவிற்குப் பிறகு ரணதுங்க இரண்டாவது வெற்றியாளர் ஆவார், மேலும் இரண்டு முறை கிரேண்ட் பட்டத்தை வென்ற முதல் பாடசாலை மாணவரும் ஆவார்.

ரணதுங்க மற்றும் அவரது உலகக் கோப்பையை வென்ற அணிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், 1996 கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதிப் போட்டியின் சிறப்பம்சங்கள், இன்று செவ்வாய்கிழமை BMICH இல் கிட்டத்தட்ட 450 பேர் கொண்ட பார்வையாளர்களுக்கு சூப்பர் ராட்சத திரையில் காண்பிக்கப்படும், அதன் படி மெகா ஷோ நடத்தப்படும். கடுமையான கோவிட் சுகாதார வழிகாட்டுதல்கள், திறனில் 25 சதவீதம் மட்டுமே.

## பூஸ்டர் தொடர்பான வதந்திகளை...

கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பூஸ்டர் எனப்படும் மூன்றாவது தடுப்பூசியைச் செலுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தடுப்பூசி தொடர்பில் சமூகத்தில் பலர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும், அவற்றில் பல உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ரீதியில் இந்த தொற்று நோய் இன்னும் ஒரு புதிய அனுபவமாக இருப்பதாகவும், கொவிட் தொற்று தொடர்பில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொவிட் வைரஸுக்கு எதிராக உருவாக்கப்பட்ட தடுப்பூசிகள் தொடர்பான அண்மைய பரிசோதனைகளில் நேர்மறையான முடிவுகள் கிடைத்தாலும் அவற்றை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், அவற்றின் செயற்திறன் தொடர்பில் நிபுணர்களினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தனிநபர்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்காக, அனைத்து நாடுகளிலும் வழங்கப்படும் மூன்றாவது தடுப்பூசியை இலங்கையிலும் வழங்குவதற்கு தொற்று நோய்கள் தொடர்பில் ஆராயும் குழுவினால் சுகாதார அமைச்சுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கையில் உள்ள 20 வயதுக்கு மேற்பட்ட 2 தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களுக்கு செயலூக்கி (பூஸ்டர்) தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன், தொழிற்சாலைகள் மற்றும் வெவ்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் 18 வயது பூர்த்தியானோருக்கு நிறுவன ரீதியாக வழங்கப்படும் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

## சமஷ்டி ரீதியிலான அரசியல்...

கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சி தலைவர்கள் ஒன்றிணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இணைந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

புதிய அரசியல் அமைப்பை கொண்டுவருவதாக அரசாங்கம் கூறுகின்றது, ஆனால் புதிய அரசியல் அமைப்பில் 13 ஆம் திருத்தத்தின் முழுமையான சரத்துக்களை உள்ளடக்கினால் கூட அல்லது அதற்கு மேலதிகமாக வேறு காரணிகளை உள்ளடக்கினால் கூட இந்தியாவின் உள்ளீடல் இல்லாது போய்விடும்.

தற்போதைய 13 ஆம் திருத்தச் சட்டம் இருப்பதன் காரணமாகவே இந்தியா இந்த விடயங்களில் கருசனையை காட்டக்கூடியதாக அமைந்துள்ளது

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் சில நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் இந்தியா இலங்கையிடம் கேள்வி எழுப்ப முடியும். இப்போதும் இந்தியாவினால் இந்த கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுவிட்டு அவற்றை இலங்கை புறக்கணிக்கின்றது என்ற குற்றச்சாட்டை இந்தியா முன்வைத்துள்ளது. அவ்வாறான நிலையில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் 13 ஆம் திருத்தச்சட்டம் இருக்கும் வரையில் மட்டுமே இந்தியாவின் தலையீடு காணப்படும்.

அதேபோல் தற்போது சட்ட புத்தகத்தில் இருக்கும் 13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்பதே எமது கோரிக்கையாகும். அது எமது நிரந்தரமான அரசியல் தீர்வுக்கு பதிலான ஒன்றல்ல. அரசியல் தீர்வு எனும் போது அது கூட்டு சமஷ்டி ரீதியிலான ஒரு நிரந்தர தீர்வேயாகும்.

அந்த தீர்வை எடுக்கும் வரையில் தற்போதைய சட்டத்தை நடைமுறைப்படுத்த காரணம் என்னவெனில், அது இல்லாது போய்விட்டால் நிரந்தர தீர்வுக்கு பாடுபடும் மக்களே இல்லாது போய்விடுவார்கள். இன்று எமது மக்கள் நாட்டைவிட்டு செல்கின்றனர், காணிகள் பறிபோகின்றன,வாழ்வாதாரம் பறிபோகின்றது. ஆகவே அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பாராளுமன்ற கூட்டத் தொடர் ...

அரசியலமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தையே அவர் பயன்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார். பொது ஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டிலே அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப்பதிலளித்தஅவர்,

பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் முடிவு திடீரென எடுக்கப்பட்ட ஒன்றல்ல. எமது நாட்டை ஆண்ட சகலஜனாதிபதிகளும்அந்த அதிகாரத்தை பயன்படுத்தியிருக்கிறார்கள். இது அரசியலமைப்பினூடாக நேரடியாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமாகும். இது விசேட சந்தர்ப்பம் கிடையாது.1978 முதல் இன்று வரை ஆட்சி செய்த அனைத்து ஜனாதிபதிகளும் அந்த அதிகாரத்தை பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்த அதிகாரத்தை பயன்படுத்த நேரிடுகிறது.

அரசியலமைப்பின் 70 ஆவது சரத்தின் 1 ஆவது உப சரத்தின் கீழ் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கூட்டவும் கலைக்கவும் கூட்டத் தொடரரை நிறைவு செய்யவும் அதிகாரம் உள்ளது. அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்ற கூட்டத் தொடரை முடிவுறுத்தி வெளியிடப்படும் உத்தரவில் மீண்டும் பாராளுமன்றத்தை கூட்டும் திகதி குறிப்பிடப்பட வேண்டும். அதாவது புதிய அமர்வு ஆரம்பிக்கும்திகதி அறிவிக்கப்பட வேண்டும்.

புதிய அமர்வு இருமாதங்களுக்குள் கூட்டப்பட வேண்டும். அதனை விட நீடிக்க முடியாது. தற்பொழுது வருட இறுதியில் இருக்கிறோம். வரவு செலவுத்திட்ட விவாதம் நிறைவடைந்துள்ளது. அது நிறைவேற்றப்பட்டுள்ளது.வரவு செலவுத்திட்டம் தொடர்பான பாராளுமன்ற செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. புதிய வருடம் ஆரம்பிப்பதால் அவரது அதிகாரத்தை பயன்படுத்த இது உகந்த காலகட்டமாகும்.சட்டபூர்வமான அதிகாரம் இது அரசியலமைப்பின் கீழ் நேரடியாக வழங்கப்பட்டுள்ள அதிகாரம்.எனவே இது புதிய விடயமாக சித்தரிக்கத் தேவையில்லை. அது அடிப்படையற்றது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனவரியில் செலுத்த வேண்டிய கடன் தவணை காரணமாக இவ்வாறான முடிவு எடுக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படுவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்,

இவை இரண்டுக்குமிடையில் எந்தத் தொடர்பும் கிடையாது. வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த வேண்டும். அந்த ஒப்பந்தத்திற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைப்பதும் கடன் தவணை செலுத்துவதும் தொடர்பற்ற இரு விடயங்களாகும். அவற்றுக்குத் தொடர்பு கிடையாது என்றார்.

## வெசாக்கை போன்று நத்தார்... (03ஆம் பக்கம் பார்க்க)

தெரிவித்துள்ளார். சுற்றுலாத்துறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்களுக்கு நத்தார் தினத்தில் மதுபான விற்பனைக்கான அனுமதியைப் பெற்றுத்தருமாறு கோரும் செய்திகளை தாம் பத்திரிகைகளில் காணக்கிடைத்ததாகவும் அதற்கிணங்க அன்றைய தினத்தில் அதற்கான அனுமதியை வழங்கி மதுபானம் அருந்தி உயிர்களை அழித்துக்கொள்ளும் செயற்பாடுகளுக்கு அனுமதியளிப்பது சுபீட்சத்தின் நோக்காகாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## 20 வருடங்களுக்கு பின்னர்...

மிஸ் யுனிவர்ஸ் பட்டத்திற்காக பங்கேற்றனர்.

இந்நிலையில், இந்தியா சார்பில் பங்கேற்ற இளம்பெண் ஹர்னாஸ் கவுர் பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்டார்.

அவருக்கு முன்னாள் பிரபஞ்ச அழகி மெக்சிகோவை சேர்ந்த ஆண்ட்ரியா மெசா வாகையை சூட்டினார்.

ஹர்னாஸ் கவுர் கடந்த 2017ஆம் ஆண்டு மிஸ் சண்டிகராக தேர்வு செய்யப்பட்டார். மேலும் பல்வேறு அழகிப் போட்டிகளில் பங்கேற்று பட்டங்களையும் வென்றுள்ளார்.

இந்தியா சார்பில் லாரா தத்தா 2000ஆம் ஆண்டில் மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை வென்றிருந்தார்.

அதன்பிறகு 20 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியப் பெண் பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷுடன் இருதரப்பு...

உரையாடல் குறித்து பிரதமர் விசேட டுவிட்டர் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

இரண்டு நாடுகளின் மக்களுக்கும் பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில், இலங்கைக்கும் பங்களாதேஷூக்கும் இடையிலான இருத்தரப்பு தொடர்புகளை வலுப்படுத்த வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ச அதில் கூறியுள்ளார்.

பங்களாதேஷ் இலங்கையின் உண்மையான நண்பன் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசு அண்மையில் பங்களாதேஷ் அரசாங்கத்திடம் 200 மில்லியன் டொலர்களை கடனுதவியாக கோரியிருந்தது. இந்த நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், பிரதமர் பங்களாதேஷ் பிரதமரிடம் மேலதிக ஒத்துழைப்புகளை கோரியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## மு.கா அமைப்பாளர் தௌபீக்...

காரணமாக, உடன் அமுலாகும் வகையில் தௌபீக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## 'பொடி லெசி' விரைவில்...

இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பொடி லெசிக்கான தடுப்புக்காவல் இம்மாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

அவருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, குறித்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த மனுவை எதிர்வரும் பெப்ரவரி 9 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

## 10 மாத குழந்தையின்...

வழங்கப்பட்ட வாழைப்பழம் ஒன்று சிக்கிக் கொண்ட குழந்தை கொன்னகஹஹேன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அஹங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, மெதகெட்டுவ பகுதியை சேர்ந்த 11 மாதங்கள் வயசான சலன நிம்சரா எனும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளுக்காக குழந்தையின் சடலம் காலி கராபிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மண்ணெண்ணெய் அடுப்பு...

அதிகரித்துள்ளன. வர்த்தக நிலையங்களில் உரிமையாளர்கள் ஒரு மண் எண்ணெய் அடுப்பை 6 ஆயிரம் 7 ஆயிரம் ரூபாய் வரையான விலையில் விற்பனை செய்வதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டை உட்பட நாட்டின் பல நகரங்களில் மண் எண்ணெய் அடுப்புகள் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

நாட்டின் ஆங்காங்கே சமையல் எரிவாயு கொள்கலன்கள் வெடித்த சம்பவங்களை அடுத்து, மக்கள் எரிவாயு அடுப்புக்கு மாற்றாக மண் எண்ணெய் அடுப்புகளை பயன்படுத்தி சமைக்க ஆரம்பித்துள்ளனர்.

## தடுப்பூசி ஏற்றல் காரணமாக...

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தடுப்பூசியை செலுத்திக்கொண்டு பின்னரும் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டு மக்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதோடு கொரோனா தொற்றினை கட்டுப்படுத்த அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையினால் சிறுவர்கள் உட்பட தத்தமது குடும்ப உறுப்பினர்களை தொற்று நோயில் இருந்து காப்பாற்ற முடியும் என்றும் உபுல் ரோஹன குறிப்பிட்டார்.

## மக்களை ஒருபோதும் அரசு...

இடம்பெற்ற ஊட சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், ஒரு கிலோ அரிசியின் விலையை 300 ஆக உயர்த்த திட்டங்கள் மேற்கொள்பட்டதாக கூறினார்.

இருப்பினும் அந்த திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டதாக தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, தற்போது 1 கிலோ நாட்டு அரிசி 99.50 ரூபாய்க்கு விற்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

# சேதனப்பசளை பயன்பாட்டை ஊக்குவிக்க வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை திட்டம்

## தேசிய அபிவிருத்தி அதிகார சபையுடன் விவசாய அமைச்சு இணைந்து நடவடிக்கை

ஜனாதிபதியின் கொள்கைக்கு ஏற்ப இந்த நாட்டின விவசாயத்தை முழுமையாக சேதனப் பசளை பயன்படுத்தும் பசுமை தொழில்நுட்பத்தை நோக்கி மாறுகின்ற பயணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேசிய அபிவிருத்தி அதிகார சபையும் விவசாய அமைச்சும் இணைந்து 2022 ஆம் ஆண்டு வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை நிகழ்ச்சி ஒன்றினை ஆரம்பித்துள்ளதாக கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

இதன்படி தேசிய அபிவிருத்தி அதிகார சபை “உங்களுக்கு வீடு – நாட்டிற்கு எதிர்காலம்”தேசிய வீடமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக தற்போது 6 இலட்சம் ரூபாவை வழங்குவதிலிருந்து 6 50,000 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

கிராமிய வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சும் தேசிய அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து செயற்படுத்தி வரும் “உங்களுக்கு வீடு –நாட்டிற்கு எதிர்காலம்”தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவில் நிட்டம்புவ,கத்தொட்ட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீட்டினை கையளித்தல் மற்றும் பயனாளிகள் 86பேருக்கு வீடமைக்கும் உதவி மற்றும் வீட்டுக் கடன் காசோலைகள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் படி செயற்படுகின்ற இந்த வேலைத் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் என்ற வகையில் ஜனாதிபதி தனது “சுபீட்சத்தின் நோக்கு”தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக பசுமையான உலகை உருவாக்குவதற்காக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்துவதற்காக கூட்டுப் பொறுப்பாக ஏற்றுக் கொண்ட தமது கிராமிய வீடமைப்பு, மற்றும் நிர்மாணத்துறை கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சும் தனது திட்டத்திலுள்ள “உங்களுக்கு வீடு –நாட்டிற்கு எதிர்காலம்”வேலைத் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளின் கொல்லைப் புறத்தில் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத சேதனப் பசளை பயன்படுத்தும் வீட்டுத் தோட்டங்கள் ஊடாக பசுமையான உலகை நோக்கி பயணிக்கும் பயணத்தின் ஆரம்பத்தை ஆரம்பித்துள்ளது. இந்த நிகழ்வில் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உபுல் மகேந்திர ராஜபக்ஷ, அத்தனகல்ல பிரதேச சபை தலைவர் பிரியந்த புஷ்பகுமார உட்பட பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.










கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஏற்பாடு செய்த madeinsrilanka.org இணையத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்சவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. madeinsrilanka.org என்பது தேசிய உற்பத்திகளுக்கு 52 வீதம் பங்களிப்பு செய்யும் நுண், சிறு மற்றும் மத்திய உற்பத்தியாளர்களுக்காக பங்காற்றும் முதலாவது அரச வர்த்தக இணைய வழியாகும்.

### அநுராதபுர மாவட்டத்தில்

# 22 பிரதேச செயலாளர் பிரிகளிலுள்ள கிராமங்களுக்கு தொடர்பாடல் வசதி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

"சகல கிராமங்களுக்கும் தொடர்பாடல் வசதி" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் அநுராதபுர மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களுக்கும் தொடர்பாடல் வசதி பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது என தெரிவித்த அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர, தற்சமயம் அதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் அநுராதபுர மாவட்டத்தின் முதலாவது கலந்துரையாடல் கூட்டம் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், இரத்தினபுரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வேலைத்திட்டம் 36 திட்டங்களாக செயல்படுகின்றது. இப்போதைக்கு 18 திட்டங்களின் வேலைகள் நிறைவடைந்துள்ளன. 600 கிராமங்களுக்கு 4G இணைப்பு பெற்றுக்கொடுக்கப் படவுள்ளது.இதன் கீழ் அநுராதபுர மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களுக்கும் தொடர்பாடல் வசதி பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.அதற்கான ஆரம்பகட்ட வேலைத்திட்டம் தற்சமயம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இனங்காணப்படும் அனைத்து கிராமங்களுக்கும் மிக விரைவில் தொடர்பாடல் வசதி பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சகல வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு தயாராக இருப்பதாக அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் அலுவலக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கணனிகள் செயலிழப்பால் மாணவர்கள் நிர்க்கதி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அனுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட அசறிக்கம முஸ்லிம் வித்தியாலயத்தில் உள்ள 10 கணினிகளும் கற்றல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாமல் செயலிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த 2012 அனுராதபுரம் ஏலயாபத்துவ பகுதியில் இடம்பெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சி திட்டத்தின் போது குறித்த பாடசாலைக்கு தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க 10 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும் காலத்திற்கு காலம் சரி பார்க்காமையினால் சகல கணினிகளும் செயலிழந்துள்ளன.

இதனால் கணினி தொழில்நுட்பத்தினை மாணவர்களினால் பயன்படுத்த முடியாதுள்ளன. குறித்த பாடசாலை அதிகஷ்ட பிரதேச பாடசாலை திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளதுடன். ஒன்பதாம் தரத்திற்கு மேல் கற்றல் நடவடிக்கைகளுக்காக சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள பாடசாலைக்கு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.கற்றல் செயல்பாடுகளில் கணினி பாரிய பங்களிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையயில் இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கோரிக்கையாகும்.

# அ'புரம் மாநகர சபை பிரிவில் டெங்கு பரவும் அபாயம்

அநுராதபுரம் மா நகர சபை பிரிவில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் பலவற்றை கண்டுபிடிக்க முடிந்ததாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் தொற்று நோய் பிரிவின் டாக்டர் தேஜன சோமதிலக தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் வாராந்த சந்தை அமைந்துள்ள பிரதேசங்கள் பலவற்றில் நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் காணப்படுவதாகவும், கட்டட நிர்மாண பணிகள் மேற் கொள்ளப்படும் இடங்கள் மற்றும் கட்டடங்களை அண்மிய பகுதிகள், நகரத்தின் உப வீதிகள் பலவற்றில் நுளம்பு உற்பத்திக்கான வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி உரிய நபர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு,நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழித்து விடுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அடுத்து வரும் நாட்களில் நகரத்திலுள்ள நிறுவனங்கள் மற்றும் வீடுகள் கட்டடங்கள் அமைந்துள்ள பகுதிகள் பரிசோதனைக்கு உற்படுத்தப்பட வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




தங்காலை பிரதேசத்திலுள்ள முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு நீர்சுத்திகரிப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதன்போது சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர நீர்சுத்திகரிப்பு உபகரணங்களை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

# கிந்தோட்டை இமாம் புகாரி அரபு கல்லூரியில் பட்டமளிப்பு விழா

(வெலிகம தினகரன் நிருபர்)

காலி, கிந்தோட்டை மஹகபுல பிரதேசத்தில் அமைந்துள்ள இமாம் புகாரி அரபுக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா எதிர் வரும் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்தியர் ஏ.எல். ஷாஜஹான் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில், விஷேட பேச்சாளராக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் உப தலைவரும், ஜாமிஆ இப்னு உமர் கல்லூரியின் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் அப்துல் ஹாலிக் (தேவ்பந்தி) மற்றும் வெலிகம பாரி அறபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் அப்துர் ரஹ்மான் (மழாஹிரி) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விழாவில் மூன்று மாணவர்கள் அல்ஆலிம் பட்டம்பெற்று வெளியேறுவதோடு 15 மாணவர்கள் அல்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்த ஹாபிழ்களாக பட்டம் பெறவுள்ளதாக கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.என்.எம். நிப்லான் (பாரி) தெரிவித்தார்.

இதில் உலமாக்கள், மத்ரஸா உஸ்தாதுமார்கள், மாணவர்கள், கல்விமான்கள், ஊர் ஜமாஅத்தினர் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# ஈஸி கேஸ் முறையில் ஹெரோயின் விற்பனை

## திஸ்ஸமகாராம பகுதியில் மூவர் கைது

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

ஈஸி கேஸ் முறையில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட மூவர் திஸ்ஸமகாராமை வீரஹெல பிரதேசத்தில் பொலிஸாரினால் (12) கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் போதைப் பொருளை பக்கற்களில் அடைத்துக் கொண்டிருக்கும் போது அவர்கள் கைது செய்யப்பட்டதாக திஸ்ஸமகாராம பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கற் பண்ணப்பட்ட சிறிய அளவிலான 202 ஹெரோயின் போதைப் பொருள் பொதிகளுடன் மேலும் 15 கிராம் போதைப்பொருளும் சந்தேக நபர்களிடமிருந்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் ஹெரோயின் போதைப் பொருளை பக்கற்களில் அடைத்து மழையில் நனையாதவாறு மின்கம்பங்களில் டேப்களினுடாக ஒட்டிஈஸி கேஸ் முறையில் பணத்தினைபெற்று வியாபாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

### மழை காலங்களில் சேற்று நிலமாகும்

# ஹொரவபொத்தான பஸ் தரிப்பு நிலையம்

திறப்பனை தினகரன் நிருபர்

ஹொரவபொத்தான பஸ் தரிப்பு நிலையம் மழை காலங்களில் சேற்று நிலம் கொண்ட பஸ் தரிப்பு நிலையமாக மாறி வருவதாக பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர். இந்த பஸ் தரிப்பு நிலையம் அமைந்துள்ள பூமியில் ஏற்கனவே கெரவல் மண் இடப்பட்டிருந்தும், மழை காலங்களில் இப் பூமியில் தண்ணீர் தேங்கி நின்று, அவை சேற்று நிலமாக மாறி வருவதாகவும், பயணிகளுக்கு இது பல சிரமங்களை உண்டு பண்ணி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த பஸ் தரிப்பிடத்தை புனரமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இப் பிரதேச மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும், இது வரையில் அது பற்றி யாரும் கவனத்தில் எடுக்கவில்லை எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சீட்டிழுக்கப்பட்ட திகதி 12.12.2021
ஞாயிற்றுககிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4614
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,161,290.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 2 5 8 3 5 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.28,271,388.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 2909
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,277,160.00
திகதி : 05.09.2021
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 05 31 78 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.78,938,610.96

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 962
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,567,560.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 159,552,166.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து A சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 07 10 13 41

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 644
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,247,900.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 11 31 44 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.87,631,296.40

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1645
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.1,964,740.00
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 01 02 20 29
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,208,090.80

12.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 521,470
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு.21,218,650.00
ரு. 2,000,000.00 பரிசு 01 ரு. 1,000,000.00 பரிசு 01
ரு. 100,000.00 பரிசு 16

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

பதவிய பிரதேசத்தில் விநியோகித்த

# திரவ சேதனப்பசளை கொள்கலன் வெடித்ததால் விவசாயிகள் நிர்க்கதி

*அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்*

அரச சேதனப் பசளை வழங்கும் திட்டத்தின் கீழ் கமநல சேவை திணைக்களத்தின் மூலம் பதவிய பிரதேச விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்ட சேதனப் பசளை திரவ கலன்கள் வெடித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதால் விவசாயிகள் கடும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

கமநல சேவை திணைக்கள பதவிய பிரதேச அலுவலக உத்தியோகத்தர் ஒரு லொறி மூலம் வீட்டுக்கு வீடு கொண்டு சென்று பிரதேச விவசாயிகளுக்கு விநியோகித்த திரவ சேதனப் பசளை கலன்கள் வெடித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள திரவ கலன் பலூன் போல் வீங்கி வெடிப்பதனால் விவசாயிகள் அதனை நிராகரித்துள்ளனர். அதனால் திரும்ப அவைகளை பொறுப்பேற்க முடியாது என விவசாயிகள் தெரிவித்ததாக கமநல சேவை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

பதவிய ருவன்புர விவசாய சங்கத்திற்கு 10 லீட்டர் அடங்கிய 100 கலன்களும் 04 லீட்டர் அடங்கிய 275 கலன்களும் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பதவிய கமநல சேவை திணைக்கள உத்தியோகத்தர் தர்ஷிகா செனவிரத்னவிடம் வினவியபோது உள்ளூர் நிறுவனம் ஒன்றினால் இறக்குமதி செய்யப்பட்ட சேதனப் பசளை திரவம் விவசாய திணைக்களத்தின் ஆலோசனைப்படி விநியோகம் செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

விவசாய சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்ட திரவ உர கலன்கள் வெடித்து வெளியேறுவதாக விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மூலம் தனக்கு முறைப்பாடு கிடைத்ததனால் அதனை பொறுப்பேற்றுக் கொண்டு வேறு திரவம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் போன்று மற்றுமொரு சம்பவம் கலென்பிந்துனுவெவ பிரதேசத்திலும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுத்துவக்கு வெடித்து இருவர் உயிரிழப்பு

*அநுராதபுரம் தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்*

அநுராதபுரம் பொலிஸ் வலயத்தின் இரு வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற கட்டுத்துவக்கு வெடிப்புச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் 10 ஆம் திகதி இரவு வேளையிலும் அடுத்த சம்பவம் அதிகாலை வேளையிலும் அநுராதபுரம் நொச்சியாகம மற்றும் ஹிதோகம பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் 32 வயதுடைய வனமள்கம, நொச்சியாகம பகுதியை வசிப்பிடமாக கொண்ட இளம் குடும்பஸ்தர் ஒருவரும் அநுராதபுரம் ஹிதோகம களுஆரச்சிகம பகுதியை வசிப்பிடமாக கொண்ட 72 வயதுடைய விவசாயி ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம மற்றும் ஹிதோகம பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.


## விலைமனுக்களுக்கான அழைப்பு

**திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு சமைக்காத/ சமைத்த உணவுகளை வழங்கல் – 2022**

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பின்வரும் வைத்தியசாலைகளுக்கு சமைக்காத/ சமைத்த உணவுகளை வழங்குவதற்காக கிழக்கு மாகாணத்திலிருந்து தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்களை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் கோருகின்றார்.

| தொ. இல. | நிறுவனத்தின் பெயர் | மீளளிக்கும் வைப்புத்தொகை (ரூபா) | சொத்து சான்றிதழின் பெறுமதி |
|---|---|---|---|
| சமைக்காத உணவுகள் | | | |
| 01 | ஆதார வைத்தியசாலை, கிண்ணியா | 35,000 | 100,000 |
| 02 | ஆதார வைத்தியசாலை, மூதூர் | 35,000 | 100,000 |
| 03 | ஆதார வைத்தியசாலை, புல்மோட்டை | 6,000 | 75,000 |
| 04 | பிரதேச வைத்தியசாலை, சேருவில | 6,000 | 75,000 |
| 05 | பிரதேச வைத்தியசாலை, சேருநுவர | 6,000 | 75,000 |
| 06 | பிரதேச வைத்தியசாலை, தம்பலகாமம் | 4,000 | 75,000 |
| 07 | பிரதேச வைத்தியசாலை, குச்சவெளி | 6,000 | 75,000 |

அ. சமைக்காத விலைமனுக்கோரும் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் G170 படிவத்தில் மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்துச் சான்றிதழுக்கான தொகைக்காக, உரித்தான வைத்தியசாலை அமைந்திருக்குமிடத்து அல்லது ஒப்பந்தக்காரர் வசிக்குமிடத்து பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ், இச் சான்றிதழானது வழங்கப்படும் திகதியில் இருந்து 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

ஆ. விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக உரிய நிறுவனத்தின் தலைப்புக் கடிதத்தில் கோரிப்பெறலாம்.

இ. வியாபார பதிவுச்சான்றிதழ்

| சமைத்த உணவுகள் | | மீளளிக்கும் வைப்புத் தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் |
|---|---|---|---|
| 01 | பிரதேச வைத்தியசாலை, கிளிவெட்டி | 2,000.00 | 1. தனிப்பட்ட கம்பனிகளாயின் விற்பனை நிலையமாயின் வியாபார சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பத்திரப் பிரதி சமர்ப்பித்தல் வேண்டும். (Business Registration Certificate). 2. சங்கங்களாயின் உரிய பிரதேச செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட சிபாரிசுக் கடித்தினையும் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 02 | பிரதேச வைத்தியசாலை, கோமரன்கடவெல | 2,000.00 | |
| 03 | பிரதேச வைத்தியசாலை, நிலாவெளி | 2,000.00 | |
| 04 | பிரதேச வைத்தியசாலை, ஈச்சிலம்பற்று | 2,000.00 | |
| 05 | பிரதேச வைத்தியசாலை, பதவிசிறிபுர | 2,000.00 | |
| 06 | பிரதேச வைத்தியசாலை, சம்பூர் | 2,000.00 | |
| 07 | பிரதேச வைத்தியசாலை, மகாதிவுல்வெவ | 2,000.00 | |

01. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராக இலவசமாக 120, நீதிமன்ற வீதி, திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் அலுவலக நேரங்களில் பரீட்சிக்கலாம்.

02. திருகோணமலை நீதிமன்ற வீதி, 120ஆம் இலக்கத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவை திணைக்களத்தில் 10.12.2021ஆம் திகதியிலிருந்து 29.01.2022ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையும் தலா ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்தி விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

03. விலைமனுக்கள் 30.12.2021ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், 120, நீதிமன்ற வீதி, திருகோணமலை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் / உறையின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான வைத்தியசாலையின் பெயர் தனித்தனியாக குறிப்பிடப்படல் வேண்டும்.

முடிவுத்திகதியன்று உடனடியாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் மாநாட்டு மண்டபத்தில் கூறுவிலைதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

04. மேலதிக விபரங்களை திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120ஆம் இலக்கத்தில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலும் மற்றும் 026-2220103 என்ற தொலைபேசி எண்ணூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.

06. விலைமனுக்களை வழங்குவதற்கான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமை பெறுகைக்குழுவுக்கே உரியது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்**
**120, நீதிமன்ற வீதி,**
**திருகோணமலை.**


# அரசுடன் இணைந்து பயணிப்பதன் மூலமே மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும்

## புத்தளம் மாவட்ட எம்.பி அலிசப்ரி ரஹீம்

*கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்*



மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டுமானால், அரசுடன் இணைந்துதான் பயணிக்க வேண்டும் என புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட இறுதி வாக்கெடுப்பின் போது அரசுக்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் விஷேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அவரின் புத்தளம் அலுவலகத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுமார் 30 வருடங்களுக்குப் பின்னர் புத்தளத்தில் வாழும் சிறுபான்மை மக்கள் தமக்கான ஒரு பாராளுமன்ற பிரதிநிதியைப் பெற்றிருக்கிறார்கள். பாராளுமன்றத்திற்கு அனுப்பி அழகு பார்க்கவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களை அனுபவிப்பதற்காகவோ மக்கள் என்னை தெரிவு செய்யவில்லை.

வீடு, காணி, தொழில்வாய்ப்புக்கள் என்பவற்றோடு வீதி, மின்சாரம், கல்வி என பின்னடைந்து காணப்படுகின்ற பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் மக்கள் என்னை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

எனவே, எனது மாவட்ட மக்களுடைய எதிர்ப்புக்களை நிறைவேற்றுவது எனது கடமையாகும். மக்களின் எதிர்பார்ப்புக்களை புதைத்து விட்டு கட்சியிலுள்ளவர்களை திருப்திபடுத்த எனது மனசாட்சி இடம்கொடுக்கவில்லை.

எனது கட்சியை விட மக்களின் அபிலாஷைகளே எனக்கு முக்கியம் எனக் கருதி, எனது மாவட்ட மக்களின் அங்கீகாரத்தோடு அரசுக்கு ஆதரவு வழங்கி வருகிறேன். அரசுக்கு ஆதரவு உறுப்பினராக செயற்பட்டு வரும் நாள் முதல் புத்தளம் மாவட்டத்தில் இந்த வருடம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன்.

அடுத்த வருடமும் இன்னும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் திட்டமிட்டுள்ளேன். பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களோடும் பேசியிருக்கிறேன். ஆகவே, அடுத்த வருடத்திற்கான வரவு செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களித்தால் எனது மாவட்ட மக்களுக்கு என்னால் எந்த அபிவிருத்தி பணிகளையும் செய்ய முடியாது.

ஒரு எதிர்க்கட்சியில் பெயரளவில் உறுப்பினராக இருப்பதை விட, அரசோடு இணைந்து மக்களுக்கு பணியாற்றுவது ஆத்ம திருப்தியைக் கொடுக்கிறது.

### எதிர்க்கட்சியில் பெயரளவில் உறுப்பினராக இருப்பதை விட, அரசோடு இணைந்து மக்களுக்கு பணியாற்றுவதில் ஆத்ம திருப்தி

அத்துடன், கட்சியில் இருந்து கொண்டு ஒரு சிலர் எடுக்கின்ற தீர்மானங்களுக்கு என்னால் ஒரு போதும் கட்டுப்பட முடியாது. பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், உயர்பீட உறுப்பினர் என்ற வகையிலும் என்னிடம் எந்த ஆலோசனைகளும் கேட்கப்படவில்லை. கட்சி என்னை கணக்கிலேயே எடுப்பதில்லை.

என்னை யாரும் விமர்சித்தாலும் அதற்கு நான் ஒருபோதும் சஞ்சலப்படப்போவதில்லை. நான் வரப்பிரசாதங்களை எதிர்பார்த்து அரசுக்கு ஆதரவு கொடுக்கவில்லை.

நான் பாராளுமன்ற உறுப்பினராகிய நாள் முதல் மாதத்தில் இருந்து எனக்கு கிடைக்கும் கொடுப்பனவு உள்ளிட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு கிடைக்கின்ற அத்தனை வரப்பிரசாதங்கள் மூலம் வருகின்ற நிதியை கல்விக்காகவே செலவு செய்து வருகிறேன்.

பாராளுமன்றத்திற்கு செல்வது, உணவு, தொலைபேசி பாவனை, அலுவலகம் என எல்லாத் தேவைளும் எனது சொந்த நிதியிலிருந்து தான் செலவு செய்து வருகிறேன்.

நான் பணத்துக்கு சோரம் போகவில்லை. மாற்றமாக எனது மாவட்ட மக்களின் அபிவிருத்தி உள்ளிட்ட தேவைகளை நிறைவேற்றவே அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ளேன்.

எனது பயணம் தூய்மையானது. அது எனது மாவட்ட மக்களுக்கும் நன்கு தெரியும். எனவே, பொதுத் தேர்தல் வரும்போது யாருக்கு வாக்களிக்க வேண்டும் என மக்கள் பார்த்துக்கொள்வார்கள். அதனை அந்த சந்தர்ப்பங்களில் பார்த்துக்கொள்வோம் என்றார்.


**பெருந்தோட்டத் துறை அமைச்சு**

**தென்னை, கித்துல் மற்றும் பனைச் செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

**இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனம்**

## ஆர்வத்தினை வெளிப்படுத்துங்கள்

**பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்களை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்**

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட தொழில் நுட்பங்களில் முதலீடு செய்வதற்காக ஆர்வமுடைய உள்நாட்டு (அரச/தனியார்) நிறுவனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து ஆர்வத்தினை வெளிப்படுத்துவதற்கான அழைப்பானது இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து வரவேற்கப்படுகிறது. பின்வரும் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றக்கூடிய ஆர்வமுடைய முதலீட்டாளர்கள் ஆர்வத்தின் வெளிப்பாட்டுக்கு சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்:**

i. முதலீட்டாளர்கள் பீடையினை கட்டுப்படுத்தும் உற்பத்தி பொருட்களை தயாரிக்கக் கூடிய வசதிகள் மற்றும் உற்பத்திகளை விநியோகம் செய்வதற்கான நன்கு உறுதிப்படுத்தப்பட்ட வலையமைப்பொன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

ii. உற்பத்தி பொருட்கள் தயாரிப்பின் போது தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நெறிமுறைகள் மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

iii. தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினது அனுமதியின்றி முதலீட்டாளர்களினால் பரிந்துரைக்கப்பட்ட நெறிமுறைகளில் எதுவித திருத்தங்களும் செய்யப்படக் கூடாது.

iv. உற்பத்திகளின் விளம்பர பிரசாரங்களின் போது முதலீட்டாளர்களால் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தொழில்நுட்ப உருவாக்கத்தில் இணைந்து செயற்பட்ட ஏதேனுமொரு பிரிவினர் குறிப்பிடப்பட வேண்டும். தொழில்நுட்ப உருவாக்கத்தில் இணைந்து செயற்பட்டவர்களின் விபரம் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் முதலீட்டாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

v. உற்பத்திகளானவை முதலீட்டாளர்களினால் தென்னையின் பயிர் பாதுகாப்பு நோக்கத்தினை மாத்திரம் கருத்தில் கொண்டு பாவிக்கப்படுதல் வேண்டும்.

vi. முதலீட்டாளர்களினால் உற்பத்திப் பொருளானது விளம்பரப்படுத்தப்படும் போது தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட பரிந்துரைகளில் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

vii. பீடையினை கட்டுப்படுத்தும் உற்பத்தி பொருள் தயாரிப்புக்கு முழுமையான முதலீட்டினை மேற்கொள்ள போதுமான நிதியினை முதலீட்டாளர்கள் கொண்டிருக்க வேண்டும்.

viii. பீடையினை கட்டுப்படுத்தும் உற்பத்தி பொருள் தயாரிப்புக்கு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் தொழிநுட்ப உதவி வழங்கப்படும்.

ix. உற்பத்தி பொருட்களின் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு பீடையினை கட்டுப்படுத்தும் உற்பத்தி பொருட்களின் தயாரிப்புச் செயன்முறையானது தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் கண்காணிக்கப்படும்.

x. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றுவதற்கு உடன்படுவதாக தென்னை ஆராய்ச்சி நிறுவகத்துடன் ஆர்வமுடையவர்களினால் உடன்படிக்கை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும்.

xi. உடன்படிக்கை ஒப்பந்தமானது ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்பட வேண்டியதுடன் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் கண்காணிப்பு செலவீனங்களுக்காக வருடாந்த கட்டணமும் அறவிடப்படும்.

**தொழில்நுட்ப பட்டியல்**

i. தென்னை செவ்வண்டு(ரின்கோபோரஸ் /பெர்ரோஜினஸ்) கவர்ந்திழுக்கும் பெரோமோன்

ii. தென்னை கருந்தலைப்புழுவின் (ஒபிசீனியா அரினோசெல்லா) ஒட்டுண்ணிகள்

iii. கருவண்டினை (ஒரிக்டஸ் றைனோசிரஸ்) கட்டுப்படுத்தும் பங்கசுகள்(மெட்டார்ஹிசியம் அனிசோபிலியா)

iv. தென்னை சிற்றுண்ணிகளை(நியோசியுலஸ் பராகி) கட்டுப்படுத்தக்கூடிய இரைகௌவிகள் (அசேரியா கெரரோனிஸ்)

ஆர்வமுடைய முதலீட்டாளர்கள் தங்களது ஆர்வத்தின் வெளிப்பாட்டினை "ஆர்வத்தின் வெளிப்படுத்தல் - பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்களை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்" என பிரதான தலைப்பிடப்பட்டு தவிசாளர், தென்னை ஆராய்ச்சி சபை, பண்டிருப்புவ தோட்டம், லுணுவில என்ற முகவரிக்கு தபால் மூலமும் அதன் மேலதிக பிரதியானது chairmancri@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2021 ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக தகவல்களை எமது அலுவலக நேரத்தில் (மு.ப 8.30 - பி.ப 4.30) 031-2255300 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஆராய்ச்சி அலுவலரான திரு. ரோஷான் சில்வாவினை தொடர்பு கொள்ளவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தகைமையுடைய முதலீட்டாளர்கள் மேலதிக தகவல்கள் வழங்கப்பட நிகழ்நிலை பயிற்சி பட்டறைக்கு அழைக்கப்படுவார்கள்.

**வைத்திய கலாநிதி சாரங்க அழகபெரும**
**தலைவர்**
**தென்னை ஆராய்ச்சி சபை**
**திகதி- 2021-12-13**


ஒரு கோடி நிதி மோசடி

# சம்பந்தப்பட்டோரின் வங்கி கணக்கு விபரங்களை வழங்குமாறு நீதிமன்று உத்தரவு

*அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்*

பொலன்னறுவை ஹிங்குராக்கொட கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களின் சுகாதார மற்றும் சத்துணவை மேம்படுத்தும் நோக்கில் ஒதுக்கப்பட்டிருந்த 100 இலட்சம் ரூபா நிதி மோசடி சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பாக ஹிங்குராக்கொட வலய கல்வி அலுவலக முகாமைத்துவ உதவியாளர், நீதிமன்ற முக்கிய ஆய்வகத்தில் கடமையாற்றுபவர் மற்றும் கால்நடை வைத்திய பணியாளர் ஆகியோரின் வங்கி கணக்கு அறிக்கைகளை ஹிங்குராக்கொட சிறப்பு குற்ற தடுப்பு பிரிவினருக்கு வழங்குமாறு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி முகாமையாளர்களுக்கு ஹிங்குராக்கொட நீதவான் சனத் நாணயக்கார உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நிதி மோசடி தொடர்பில் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு அது தொடர்பில் முன்னேற்ற அறிக்கையினை அடுத்த விசாரணை தினத்தன்று நீதி மன்றில் சமர்பிக்குமாறு நீதவான் சிறப்பு குற்றதடுப்பு விசாரணை பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஹிங்குராக்கொட கல்வி வலய பாடசாலை மாணவர்களின் சுகாதார மற்றும் போஷாக்கு திறனை மேம்படுத்தும் வகையில் ஒதுக்கப்பட்ட நிதியில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து வலய கல்வி பணிப்பாளர் சிறப்பு விசாரணை குற்ற தடுப்பு பிரிவில் தாக்கல் செய்துள்ள புகார் தொடர்பில் முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும். மேலதிக விசாரணைகளுக்காக அரச உத்தியோகத்தர்கள் மூவரின் வங்கி கணக்குகள் தொடர்பில் விவரங்கள் தேவைப்படுவதாகவும் சிறப்பு விசாரணை பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

பொலிசாரின் குறித்த விவகாரத்தில் கவனம் செலுத்திய நீதவான் பொலிசாரினால் கோரப்படுகின்ற வங்கி கணக்கு அறிக்கைகளை வழங்குமாறு இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி முகாமையாளர்களுக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நிதி மோசடி தொடர்பில் வடமத்திய மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களம் தனியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# அநுராதபுரம் மாவட்டத்தில் கொரோனா தொற்றில் தொடர்ச்சியான அதிகரிப்பு

*திறப்பனை தினகரன் நிருபர்*

அநுராதபுரம் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் தொடர்ச்சியான அதிகரிப்பு காணப்படுவதாக மாவட்ட சுகாதார சேவைகளின் பிரதேச பணிப்பாளர் டாக்டர் என்.சி.டி.ஆரியரத்ன தெரிவித்துள்ளார். ஒவ்வொரு நாளும் சுமார் 300 பேர் வரை தொற்றுக்குள்ளாவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நகர சபை பிரதேசம், மத்திய நுவரகம் பளாத்த, நெகனஹிர நுவரகம் பளாத்த, தலாவ மற்றும் கெக்கிராவ ஆகிய பிரதேசங்களில் கூடுதலான நோயாளர்கள் இனங்காணப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அக்கரப்பத்தனை பெருந்தோட்டங்களில் தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு








**ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி, தலவாக்கலை குறூப் நிருபர்கள்**

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனிக்கு கீழ் இயங்கும் 12 தோட்டங்களை கொண்ட 42 பிரிவுகளை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (13.12.2021) தொழிலுக்குச் செல்லாமல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதற்கு கட்சி பேதமின்றி அனைவரும் பணிப்பகிஷ்கரிப்புக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

தொழிலாளர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதி வழங்கப்பட்ட ஆயிரம் ரூபாய் சம்பளம் பாரிய பிரச்சினையாக இருப்பதாகவும், தற்போது தேயிலை மலைகள் காடாகி கிடப்பதால் 20 கிலோ கொழுந்து பறிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தே பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

அத்தோடு, வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களே வேலை வழங்குவதனால் பெரும் சிரமத்திற்கு மத்தியில் நிம்மதியற்று தாம் வாழ்வதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தொழிற்சங்கங்கள் தமக்கு சாதகமான பதிலை பெற்றுத் தருமாறு கோரியும், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் கட்டாயமாக வேண்டும் என வலியுறுத்தியும், பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் தேயிலை தொழிற்சாலைகளும் மூடப்பட்டு அதன் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ராமேஸ்வரன் மற்றும் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் சச்சிதானந்தன் ஆகியோர் இதுதொடர்பில் ஆராய்வதற்காக நேற்று (13) அக்கரப்பத்தனை அல்டோரி மற்றும் போட்மோர் ஆகிய தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று தொழிலாளர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

## மலையகத்தில் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள்



**ஹற்றன் விசேட, பலாங்கொடை, தலவாக்கலை குறூப் தினகரன் நிருபர்கள்**

### பலாங்கொடை

பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெஹிகஸ்தலாவை மஹவத்த பகுதியில் வீடொன்றில் சமையல் எரிவாயு அடுப்பில் வெடிப்புச் சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலையில் வீட்டில் உள்ள பெண் எரிவாயு அடுப்பை பற்ற வைக்க முற்பட்ட போதே வெடித்து சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் எரிவாயு சிலிண்டர் வாங்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

### கொட்டகலை

கொட்டகலை பகுதியில் மற்றுமொரு லிற்றோ எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளதாக திம்புல்ல பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புல்ல பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் கே.ஓ. பிரிவில் பழைய வீடமைப்பு திட்டத்திலுள்ள ஆசிரியை ஒருவரின் வீடொன்றிலேயே நேற்று முன்தினம் அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த வெடிப்பு சம்பம் தொடர்பாக ஆராய்வதற்காக அடுப்பு பகுதிகளையும் எரிவாயு வினையும் பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### நுவரெலியா

நுவரெலியா கெலேகால கிராமத்திலுள்ள வீடொன்றில் நேற்று ( 13) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் சமையல் எரிவாயு சிலிண்டரில் கசிவு ஏற்பட்டுள்ளது.

இதனை கண்ட வீட்டு உரிமையாளர் உடனடியாக எரிவாயு சிலிண்டரின் நெக்லேடரை அகற்றிவிட்டு வெளியில் எடுத்து சென்று தீ பிடிப்பதிலிருந்து காப்பாற்றியுள்ளார்.

சிலிண்டரில் எரிவாயு கசிவு காரணமாக சமையலறை முழுவதும் ஒரே புகைமூட்டம் சூழ்ந்தது.

இச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.



கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டம் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சரத் ஏக்கநாயக்கவின் நெறிப்படுத்தலுடன் கண்டி கெட்டம்பையிலுள்ள ரோயல் மோல் ஹோட்டலில் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் சிவபாலனுக்கு இந்து சமய விவகார செயலாளர் நியமனக் கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கி வைப்பதையும் அருகில் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிரி ஜயசேகர மற்றும் ஏனைய அரசியல் உயர்பீட உறுப்பினர்கள் அங்கத்தவர்கள் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

படம்: மாவத்தகம தினகரன் நிருபர்

**அக்கரப்பத்தனை தோட்டங்களின் பணிப்பகிஷ்கரிப்பு**

## நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவு

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனி தோட்ட தொழிலாளர்களுக்கு இழைத்து வரும் அநீதிக்கு எதிராக முன்னெடுக்கும் பணிப்பகிஷ்ரிப்புக்கு நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி ஆதரவு வழங்கியுள்ளனர்.

நுவரெலியா பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான சபை அமர்வு தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் நேற்று (13) காலை இடம்பெற்றது.

இதன்போது மேற்படி விடயம் குறித்து சபை தவிசாளர் வேலு யோகராஜ் தனது விசேட பிரேரணையை முன்வைத்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது, பெருந்தோட்ட நிர்வாகங்களின் தான்தோன்றி செயற்பாடுகளினால் தோட்ட தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக அநீதிகள் இழைக்கப்பட்டு வருகின்றன.

ஆயிரம் ரூபாய் சம்பள பிரச்சினை உள்ளிட்ட தொழில் கெடுப்பிடிகள், தேயிலை கொழுந்து நிறுவையில் சுரண்டல், கூட்டு ஒப்பந்தம் இல்லாமையை காரணம் காட்டி தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுதல், போன்றவற்றுடன் அரசாங்கம் வெளியிட்டுள்ள ஆயிரம் ரூபாய் சம்பளம் தொடர்பான வர்த்தமானி மீறல் என பல உரிமை கோரிக்கைகளில் அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட 53 தோட்டங்கள் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனி நிர்வாகத்திற்கு எதிராக தீர்வு கிடைக்க வேண்டும் என தற்போது பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் நுவரெலியா பிரதேச சபைக்குள் உள்வாங்கப்பட்டுள்ள தோட்டங்களிலும் தோட்ட முகாமைத்துவ கம்பனிகள் தொழிலாளர்களுக்கு அநீதிகளை இழைத்து வருகின்றனர்.



இதனை கருத்திற் கொண்டு அக்கரப்பத்தனை பிரதேச தோட்ட தொழிலாளர்கள் முன்னெடுக்கும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு கட்சி வேறுபாடுகள் இன்றி ஆதரவை வழங்க வேண்டும் என சபை உறுப்பினர்களை கேட்டுக் கொள்வதுடன் சபை தவிசாளர் என்ற வகையில் இது தொடர்பில் தான் முன்வைத்துள்ள பிரேரணைக்கு ஆதரவு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு அமைவாக நுவரெலியா பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் 23 உறுப்பினர்களில் வருட கடைசி மாதத்திற்கான சபை அமர்வில் கலந்து கொண்ட தவிசாளர் உள்ளிட்ட 21 பேர் பிரேரணையை ஆதரித்தனர்.

அதேநேரத்தில் இம்மாத சபை அமர்வில் ஒரு உறுப்பினர் வருகை தரவில்லை. அத்துடன் உறுப்பினர் அஜித் உயன்கொட என்பவருக்கு மூன்று மாத சபை அமர்வுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது ஆகையால் அவரும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சேதன பசளை பாவனைக்கு நாம் எதிரானவர்கள் அல்ல

**நளீன் பண்டார எம்.பி**

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

சேதன பசளை பாவனைக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் இது நடைமுறைப்படுத்தப்பட்ட முறையே தவறானது என்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார தெரிவித்துள்ளார்.

நுவரெலியா – வலப்பனையில் நேற்று (13.12.2021) விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், “சரியான விவசாய ஆலோசனைகளை வழங்க முடியாதவர்களே ஜனாதிபதியுடன் உள்ளனர். தற்போது அவர்கள் இது தொடர்பில் பிறப்பித்த வர்த்தமானி முன்பு போல் வாபஸ் பெறபட்டுள்ளது. எனினும் பெரும்போகச் செய்கை தற்போதைய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.



அப்படியானால் நெல் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் பூச்சியமாக மாறும். மரக்கறி உற்பத்தியும் அப்படிதான். விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாகவே மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. தேயிலை உற்பத்தியும் அவ்வாறுதான். எமது தேயிலை வெளிநாடுகளுக்கே அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

எனவே இவர்களின் செயற்பாடுகளால் தேயிலை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜனாதிபதியுடன் இருக்கும் ஒரு சில மன நலம் குன்றியவர்களின் ஆலோசனைகளே காரணம்.

எனவே எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படகூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

## லக்கல பிரதேசசபை வரவு செலவுத் திட்டம் தோல்வி

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை லக்கல பிரதேச சபையில் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோல்வியடைந்துள்ளது.

இரண்டாவது தடவையாகவும் வரவுசெலவுத் திட்ட அறிக்கையை லக்கல பிரதேச சபைத் தலைவர் புத்திக சேனாரத்னவினால் கடந்த 11ஆம் திகதி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் முன்வைக்கப்பட்டது இதன்போது வரவுசெலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 6 உறுப்பினர்களும் எதிராக 16 பேரும் வாக்களித்தனர். இதனால் பெரும்பான்மை வாக்குகளினால் வரவுசெலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

லக்கல பிரதேச சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மூன்று உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி 5 உறுப்பினர்களும் ஜே.வி.பி கட்சியைச் சேர்ந்த ஒருவர் என்ற அடிப்படையில் மொத்தமாக 11 பேர் எதிராகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 6 பேர் மாத்திரமே ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன் முதலாவது வரவு செலவுத் திட்டம் கடந்த மாதம் 25ஆம் திகதி இடம்பெற்று தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## சபரிமலை கோவில் தேவஸ்தானத்திற்கு செந்தில் தொண்டமான் நன்றி தெரிவிப்பு





ஒன்லைன் மூலம் முன்பதிவின்றி நேரடியாக கடவுசீட்டை பயன்படுத்தி இலங்கையர்களுக்கு ஐயப்பன் யாத்திரை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்கியமைக்காக சபரிமலை ஐயப்ப கோவில் தேவஸ்தானத்திற்கு நன்றி தெரிவிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உப தலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஐயப்ப பக்தர்களுக்கு ஒன்லைன் மூலம் முன்பதிவினை மேற்கொண்டு யாத்திரை செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் குழுவாக ஐயப்பன் யாத்திரையை மேற்கொள்ளும் போது குழுவின் அங்கத்தவர்கள் அனைவருக்கும் முழுமையாக பதிவினை மேற்கொள்ள முடியாத சூழ்நிலையினால் ஐயப்ப தரிசனத்தை மேற்கொள்ள சிரமம் ஏற்பட்டதோடு, சிலர் நிர்க்கதிக்குள்ளாகியிருந்தனர். தொடர்ச்சியான கோரிக்கையை ஏற்று ஐயப்ப கோவில் தேவஸ்தானத்தினால் வெளிநாட்டவர்களுக்கு கடவு சீட்டினூடாக ஐயப்பன் யாத்திரையை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

ஐயப்ப பக்தர்கள் ஒன்லைன் முன் பதிவின்றி கடவு சீட்டினூடாக பயணத்தை மேற்கொள்ள ஐயப்ப கோவில் தேவஸ்தானம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளமைக்காகவும் அதற்கு உதவி வழங்கிய சபரிமலை மேல் சாந்தி நம்போதரிகள் மற்றும் கோவில் தேவஸ்தான அதிகாரிகளுக்கும் செந்தில் தொண்டமான் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துள்ளார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 டிசம்பர் 14
செவ்வாய்க்கிழமை

# தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் முல்லைத்தீவு செயலகம் இரண்டாமிடம்!

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற 2020க்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முதன் முறையாக இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டி 2020க்கான தொலைநிலை(Zoom) மதிப்பீட்டுத் தேர்வில் களவிஜயத்திற்கான சாதகமான மதிப்பெண்ணைப் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் பெற்றநிலையில் கடந்த 25.11.2021ம் திகதியன்று நேரடியான களவிஜயம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திலிருந்து வருகைதந்த மதிப்பீட்டுக் குழுவினர் மாவட்ட செயலகத்திலுள்ள ஒவ்வொரு கிளைகளையும் பார்வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளனர்.

அதனடிப்படையில் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டுள்ளது.

அதேவேளை கடந்த முறை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியில் அரச பிரிவில் விண்ணப்பித்து மூன்றாமிடத்தினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சேஜய நுண்நிதி நிறுவனம்



மாங்குளம் குறுாப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேஜய நுண்நிதி நிறுவன கிளை நேற்று கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைக்கு அருகாமையில் இன்று காலை பத்து மணிக்கு குறித்த சேஜய நுண்நிதி நிறுவன கிளை திறந்து வைக்கப்பட்டது

முல்லைத்தீவு சேஜய நுண் நிதி நிறுவன கிளை முகாமையாளர் யதுர்சன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சேஜய நுண்நிதி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரின்ஸ்நாயகம் கலந்து கொண்டு கிளையினை நாடாவை வெட்டி திறந்து வைத்தார்

நிகழ்வில் சேஜய நுண்நிதி நிறுவனத்தின் வட பிராந்திய முகாமையாளர் கணபதிப்பிள்ளை ஏகலைவன் கரைதுறைப்பற்று பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் சண்முகராஜா கயூரதன் யாழ் போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட மருத்துவர் வைத்திய கலாநிதி சண்முகராஜா சேஜய நுண்நிதி நிறுவன கிளிநொச்சி முகாமையாளர் சேஜய நுண்நிதி நிறுவன ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# அலுவலக முகாமைத்துவப் போட்டியில் அனிச்சியன்குளம் கிராம அலுவலர் முதலிடம்



கிராம அலுவலர்களின் அலுவலக முகாமைத்துவப் போட்டி 2021 இன் மதிப்பீடுகள் மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது கிராம அலுவலர் சேவை ஊடாக நிறைவேற்ற எதிர்பார்க்கும் மக்கள் சேவைகளை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களின் தரத்தினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

அதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் கீழுள்ள ஆறு பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய மதிப்பீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனிச்சியன்குளம் கிராம அலுவலர் முதலாவது இடத்தினைப் பெற்றுளார் .

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டுக்குளம் கிராம அலுவலர் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளார். கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு வடக்கு கிராம அலுவலர் மூன்றாவது இடத்தினை பெற்றுள்ளார். மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான் கிராம அலுவலர் நான்காவது இடத்தினைப் பெற்றுள்ள அதேவேளை கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை வடக்கு கிராம அலுவலர் ஐந்தாவது இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளார்.

# மிருசுவில் ஏ9 வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் ஏ9 வீதியில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து வீதியோரம் காணப்பட்ட தூணுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் படுகாயமடைந்துள்ளார். இதில் மிருசுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த 34வயதான சுபாஸ்கரன் என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சங்கானை பகுதியில் வாள்வெட்டு குழு அட்டகாசம்

யாழ். விசேட நிருபர்

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்றிரவு புகுந்த வாள்வெட்டு குழு அங்கு அட்டகாசம் செய்துள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட குறித்த குழு அங்கு சென்று வீட்டின் கதவுகள், முச்சக்கர வண்டி, மீன் தொட்டி, தண்ணீர் குழாய், கதிரைகள் மற்றும் வேலி தகரங்கள் என்பவற்றினை வாளினால் வெட்டி சேதப்படுத்தியுள்ளது. அக் கும்பல் முச்சக்கர வண்டிக்கு தீ மூட்டியுள்ளது. முச்சக்கர வண்டியினை மூடியிருந்த பொலித்தீன் எரிந்துகொண்டிருந்த வேளை வீட்டிலிருந்தவர்கள் அந்த பொலித்தீனை கீழே இழுத்து விழ்த்தினர்.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தலைமன்னார் மேற்கில் காணி அளவிடும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு

(மன்னார் குறுப் நிருபர்)



மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தலைமன்னார் மேற்குப் பகுதியில் வன வளத்திணைக்களத்தினரின் காணி அளவிடும் நடவடிக்கைகளுக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

மன்னார் – தலைமன்னார் மேற்குப் பகுதியில் வனவளத்திணைக்களத்தினரின் காணி அளவிடும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை (13) காலை இடம்பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த பகுதிக்கு வனவளத்திணைக்களத்தினர் காணிகளை அளவிடுவதற்காக சென்றிருந்தனர். இதன்போது அங்கு ஒன்றுகூடிய குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர். குறிப்பாக காணி அளவிடும் பணிகளை கைவிட்டு அங்கிருந்து செல்ல வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து வன வளத்திணைக்களத்தினருக்கும், தலைமன்னார் பங்குத்தந்தை அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கிடையில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலினைத் தொடர்ந்து வன வளத்திணைக்களத்தினர் காணி அளவீட்டு பணிகளை கைவிட்டு அங்கிருந்து சென்றுள்ளதாக அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

# கவிதை நூல்களின் வெளியீட்டு விழா

கரவெட்டி தினகரன் நிருபர்

கவிஞர் ஐயாத்துரை பிரபு எழுதிய அரிமா நோக்கு மற்றும் மகரந்தத் தூறல் எனும் இரண்டு கவிதை நூல்கள் வெளியீட்டு வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலர் கு. பிரபாகரமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் மங்கள விளக்கை பிரதேச செயலாளர் கு. பிரபாகரமூர்த்தி, உதவி பிரதேச செயலர் பசுபதி தயானந்தன், நிருவாக கிராம அலுவலர் தவராசா, பிரதேச கலாசார பேரவை தலைவரும், கலாசார உத்தியோகத்தருமான பெ.செல்வசுகுணா, நூலாசிரியரின் பெற்றோரான திரு திருமதி ஐயாத்துரை தம்பதியினர் உட்பட பலரும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து வரவேற்புரையினை பிரதேச செயலக முதன்மை கிராம அலுவலர் தவராசா நிகழ்த்தியதை தொடர்ந்து வெளியீட்டுரையினை வடமராட்சி கிழக்கு உதவி பிரதேச செயலர் பசுபதி தயானந்தன் வழங்கினார்.

தொடர்ந்து அரிமா நோக்கு எனும் நூலினை பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி வெளியீட்டு வைக்க அதற்கான முதற் பிரதியினை திரு திருமதி தயாளன் மாதங்கி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மகரந்த தூறல் எனும் நூலினை உதவி பிரதேச செயலர் பசுபதி தயானந்தன் வெளியிட்டு வைக்க முதற் பிரதியினை இராமலிங்கம் சிற்றம்பலம் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அரிமா நோக்கு எனும் நூலின் மதிப்பீட்டு உரையினை ஓய்வு நிலை ஆசிரிய கல்வியியலாளரான க.தர்மராசா, மகரந்த தூறல் நூலுக்கான மதிப்பீட்டு உரையினை கவிஞர் த.யாசகன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# வீதியை சீரமைக்குமாறு பிரதேச செயலாளருக்கு மகஜர்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா கள்ளிக்குளம் சிதம்பரம் பகுதியை சேர்ந்த மக்கள் தமது அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைக்குமாறு வவுனியா பிரதேச செயலாளருக்கு மகஜர் கையளித்தனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அவர்கள் குறித்த கிராமத்தில் இருந்து பிரதான வீதிக்கு செல்லும் 10 கிலோமீற்றர் நீளமான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாதது டன் குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றது.

தற்போது மழையுடனான காலநிலை நிலவி வருகின்றமையால் அந்த வீதியினை பயன்படுத்தும் கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களிற்கு மத்தியிலேயே தமது பயணத்தைத் தொடர்கின்றனர். பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் முதல் வைத்தியசாலை செல்லும் நோயாளர்கள் வரை அனைவரும் சொல்லொணா துன்பங்களுடனேயே தமது பயணத்தை தொடர்கின்றனர்.

இதேவேளை எமது கிராமத்துக்கு பேருந்துச் சேவையும் நீண்டகாலமாக இல்லாத நிலமை காணப்படுகின்றது. கூலித்தொழிலை நம்பி வாழ்க்கை நடாத்தும் நாம் நகருக்கு செல்ல வேண்டுமானால் 1000 தொடக்கம் 1500 ரூபாய் வரையான பணத்தினை முச்சக்கரவண்டிக்கு வழங்கியே சென்று வருகின்றோம், எனவே எமது நிலமையை உணர்ந்து உரிய அதிகாரிகள் வீதியை சீரமைப்பதுடன், பேருந்து சேவையினையும் ஏற்படுத்தி தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களது கோரிக்கையினை பரிசீலித்த உதவிப்பிரதேச செயலாளர் ச.பிரியதர்சினி அடுத்த வருடம் வகுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களில் குறித்த கிராமத்தின் வீதியினை திருத்துவதற்கான நடவடிக்கையினை எடுப்பதாக தெரிவித்தது டன், பேருந்துச்சேவை தொடர்பாக தொடர்புடைய திணைக்களத்துடன் கலந்துரையாடுவதாக தெரிவித்தார்.

# தனியார் காணியொன்றில் துப்பாக்கி ரவைகள் மீட்பு

(பரந்தன் குறுப் நிருபர்)

கிளிநொச்சிக்கு கோரக்கண் கட்டுப்பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன் கட்டு பூங்காவனம் சந்திப்பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் நேற்று குழி ஒன்றை வெட்டிய போது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து கிளிநொச்சி பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் இருந்து துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர். இதேவேளை மேலும் குறித்த குழியினுள் வெடிபொருட்கள் இருக்கலாம் என்ற கோணத்தில் கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# வவுனியாவில் மின் தடை

வவுனியா பிரதேசத்தில் வைரவபுளியங்குளம், ஆதி விநாயகர் கோவிலடி, நெடுங்குளம். சூரிய மின் உற்பத்தி நிலையம். மரக்காரம்பளை கணேசபுரம், ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை காத்தான் கோட்டம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது . உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று (14) ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்படவுள்ளது.

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கலந்துரையாடல்

பருத்தித்துறை விசேட நிருபர்

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட தரப்புக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்ளுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த கலந்துரையாடலில் 43 நபர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களான உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஓய்வு பெற்ற பொலிஸ் மா அதிபர் சந்திரா பெனாண்டோ, ஓய்வு பெற்ற மாவட்டச் செயலாளர் நிமல் அபேசிறி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுடைய கருத்துக்களை கேட்டறிந்தனர்.

# பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு

இரண்டு இலட்சம் மனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜனின் பிரத்தியேக செயலாளரும், பிரதேச சபை உறுப்பினருமான ச.இராமநாதன் கலந்துகொண்டு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்தார். நிகழ்வில் இளவாளை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட பனை சார் சௌபாக்யா உற்பத்திக் கிராம பயனாளிகளுக்கு அங்கத்துவச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.




# கொடுப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி பிறக்கிறது

## திருவருகைக் காலத்தின் மூன்றாம் வாரம் தரும் சிந்தனை

திருவருகைக் காலத்தின் மூன்றாம் வாரத்தை மகிழ்ச்சியின் வாரமாக கொண்டாடுகிறோம்.

கொடுப்பதில்தான் உண்மையான மகிழ்ச்சி பிறக்கிறது. உண்மையாகக் கொடுப்பவர்களும் உவகைப் பொங்க கொடுப்பவர்களும் தாங்களும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்கிறார்கள். கடவுள் தன்னை முழுவதுமாக இம்மனுக்குலத்திற்குக் கொடுத்தார். இந்தக் கொடுத்தலில்தான் அவர் மகிழ்ச்சி அடைந்தார்.

கடவுளின் கனிந்த அன்பைப் புறக்கணித்து பாவச் சேற்றில் மூழ்கியதால், இஸ்ரேல் மக்கள் அந்நிய நாடுகளுக்கு கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கே அவர்கள் தங்களின் உரிமை வாழ்வை இழந்து அகதிகளாக நடத்தப்பட்டனர். அப்போது தங்களின் பாவநிலையை உணர்த்த இஸ்ரயேல் மக்கள், தங்களின் மீட்புக்காகக் கடவுளை நோக்கிக் கண்ணீர்க் குரல் எழுப்பினர்.

அவர்களின் அழுகுரலைக் கேட்ட இறைவன், அவர்களை மீட்பதற்காகத் தன் ஒரே மகனை அனுப்புவதாக அவர்களுக்கு வாக்களிக்கிறார்.

இதுவே திருவருகைக் காலத்தின் மகிழ்ச்சி ஞாயிறின் முதல்வாசகத்தின் பின்னணியாக அமைந்துள்ளது. .

“மகளே சீயோன்! மகிழ்ச்சியால் ஆர்ப்பரி;

இஸ்ரயேலே! ஆரவாரம் செய்; மகளே எருசலேம்! உன் முழு உள்ளத்தோடு

அகமகிழ்ந்து அக்களி. ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்;

உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார்; இஸ்ரயேலின் அரசராகிய ஆண்டவர்.

உன் நடுவில் இருக்கின்றார்; நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய்”

அவர் மாவீரர்; மீட்பு அளிப்பவர்; உன்பொருட்டு அவர் மகிழ்ந்து களிகூருவார்.

தம் அன்பினால் உனக்குப் புத்துயிர் அளிப்பார்; உன்னைக் குறித்து மகிழ்ந்து ஆடிப்பாடுவார்.” இரண்டாம் வாசகத்தில் “ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்” என்கிறார் புனித பவுலடியார்.



கொடுப்பதில்தான் நிறைவான மகிழ்ச்சி இருக்கின்றது என்று கண்டோம். இறைவன் இம்மனுக்குலத்திற்காகத் தன்னைக் கொடுப்பதில் மகிழ்ந்தார். அன்னை மரியாள் இம்மனுக்குலத்திற்காக அந்த மனுமகனைத் தன் கருவில் சுமப்பதிலே மகிழ்ந்தார்.

புனித சூசையப்பர் இறைத்திட்டத்திற்காக மரியாவையும் அந்த மனுமகனையும் முழு மனதுடன் ஏற்றுக்கொள்வதிலே மகிழ்ந்தார்.

திருமுழுக்கு யோவான், “நான் மெசியா அல்ல, அவரது வழிகளை ஆயத்தப்படுத்த வந்தவன்” என்று தன்னைத் தாழ்த்திக்கொள்வதிலே மகிழ்ந்தார். இவ்வாறு நிறைமகிழ்ச்சி என்பது, பிறருக்காகத் தன்னையே முழுமையாகக் கொடுப்பதிலும், தன் நிலையிலிருந்து விட்டுக்கொடுப்பதிலும், தாழ்ச்சிநிறை உள்ளத்தோடு தன்னை ஏற்றுக்கொவதிலும்தான் அடங்கியிருக்கின்றது.

அந்த நற்செய்தியில் பொதுமக்கள், வரி தண்டுவோர், படைவீரரர் என மூன்று குழுவினர் திருமுழுக்கு யோவானைச் சந்திக்க வருகின்றனர்.

மகிழ்ச்சியாய் இருக்க , “நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கூட்டத்தினர் அவரிடம் கேட்டனர். அதற்கு அவர் மறுமொழியாக, “இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்;

உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்” என்றார்.

வரி தண்டுவோரும் திருமுழுக்குப் பெற வந்து , “போதகரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று அவரிடம் கேட்டனர். அவர், “உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்” என்றார்.

படைவீரரும் அவரை நோக்கி, “நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டனர். அவர், “நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள்; யார்மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள்; உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்” என்றார்.

நமது சூழலில் ஒருவேளை திருமுழுக்கு யோவான் நம் மத்தியிலே தோன்றுகிறார் என வைத்துக்கொள்வோம். நாம் அவரிடத்திலே போய், “நாங்கள் என்ன செய்ய வேண்டும்” என்று கேட்டால் அவருடைய பதில் என்னவாக இருக்கும்? “நீங்கள் ஓட்டுக்குப் பணம் வாங்காதீர்கள், இலஞ்சம் கொடுக்காதீர்கள், உங்கள் அண்டை வீட்டாரின் தேவைகளைக் கவனியுங்கள்” என்று தொடங்கி இன்னும் என்னவெல்லாமோ சொல்லியிருப்பார். அவ்வாறே வரி தண்டுவோரைப் பார்த்து, “ எண்ணிலடங்கா சுங்கச்சாவடிகளை அமைத்து நாடு முழுவதும் மக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பதை முதலில் நிறுத்துங்கள். வரி என்பதன் பெயரில் மக்கள்மேல் அநியாயமாகச் சுமைகளை சுமத்தாதீர்கள்” என்று கூறியிருப்பார். இறுதியாக, படைவீரர்கள் அவரிடம் கேட்டிருந்தால் அந்தப் படை வீரர்களுக்குக் கூறிய பதிலையே நமக்கும் சொல்லி இருப்பார். காரணம், ‘வேலியே பயிரை மேய்ந்த கதையாக’ காவலர்களே நூதன வேடமிட்டு மக்களின் பணத்தைப் பறித்ததையெல்லாம் எத்தனையோ முறை செய்தித்தாள்களில் வாசித்திருக்கிறோம். பணத்தின்மீதான பேராசையே மனிதனின் எல்லா தீமைகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைகிறது. “மண்ணுலகின் நலன்கள் அனைத்து மனிதருக்கும் பொதுவானவை” என்று வத்திக்கான் சங்கஏடுகளும் எடுத்துரைக்கின்றன. ஆனால், இப்பூவுலகிலுள்ள பலரின் சொத்துக்கள் சிலரின் கரங்களில் மட்டுமே அடங்கியிருக்கின்றன. அதனால் ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகிக்கொண்டே போகிறார்கள்.

பணக்காரர்கள் மேலும் மேலும் பணக்காரர்களாகிக்கொண்டே போகிறார்கள்., இங்கே இருப்பவர்கள் மட்டுமே பிழைத்துக்கொள்ள முடியும்.

இவ்வாண்டு எப்படிப்பட்ட கிறிஸ்து பிறப்பு விழாவைக் நான் கொண்டாடப்போகிறேன் என்ற, ஒவ்வொருவரின் உண்மையான உள்மனத் தேடல்தான், மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட வழி காட்டும். ‘பகிர்வின் அடையாளமே பாலன் இயேசுவின் பிறப்பு. இதுவே உலக மாந்தருக்கெல்லாம் மகிழ்ச்சி தரும் சிறப்பு’ என்பதை நம் நினைவில் நிறுத்துவோம்.

செல்வராஜ் சூசைமாணிக்கம்...

மறையாசிரியர்களுக்கான தேர்வுப் பரீட்சை:

## எதிர்வரும் 18ஆம் திகதி நாடளாவிய 57 பரீட்சை நிலையங்களில்

தேசிய மறைக்கல்வி நடு நிலையத்தினால் நடத்தப்படும் மறையாசிரியர்கள் தேர்வு எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ளன.நாடு முழுவதிலும் 57 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள இந்த தேர்வுகளில் மறையாசிரியர் முதல் தேர்வுக்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பிரிவுகளில் முறையே 810, 940, 100 பரீட்சார்த்திகளும் மறையாசிரியர் இடை நிலைத் தேர்வுக்கு முறையே 576, 760,52 பரீட்சாத்திகளும் மறையாசிரியர்களும் இறுதித் தேர்வுக்கு தமிழில் 332 பேர், சிங்கள பிரிவில் 468 பேருமாக மொத்தம் 4038 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அவர்களின் மறைமாவட்ட இயக்குனர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தகவல்:
அருட்சகோதரி ரஞ்சி போல்துரை

# திருவருகைக்காலம்

## நான்காம் வாரத்தில் அன்பை குறிக்கும் மெழுகுவர்த்தி



திருவருகைக் காலத்தின் நான்காவது வாரத்தை எதிர் கொண்டுள்ளோம். அடுத்த ஞாயிற்றுக்கிழமை நான்காவது வாரத்தில் நாம் ஏற்றும் மெழுகுவர்த்தி 'அன்பு' என்பதைக் குறிக்கின்றது.

இந்த அன்பின் மெழுகுவர்த்தி அன்னை மரியாளையும் அவர் கணவரான இயேசுவின் வளர்ப்புத் தந்தை புனித சூசையப்பரையும் குறிக்கின்றது.

லூக்கா நற்செய்தியானது "அவர் பெரியவராக இருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்"( லூக்கா 1:3233) என தெரிவிக்கின்றது.

ஆண்டவராம் மீட்பரை சந்திப்பதற்காக புனித சூசையப்பரும் அன்னை மரியாளும் எவ்வாறு தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தனரோ அவர்களைப் போன்று நம்மை மீட்க நமக்காக இந்த உலகில் பிறந்த இயேசு பாலனை வரவேற்க நம்மை எவ்வாறு தயார்படுத்த வேண்டும் என்பதை சிந்திக்கும் காலமாக இக் காலத்தை நாம் எடுத்துக் கொள்வோம்.

அதற்காக எம்மை தயார்ப்படுத்தும் இந்த காலத்தில் அன்னை மரியாளின் எதிர்நோக்கையும் புனித சூசையப்பரின் நேர்மைத் தன்மையையும் நம் வாழ்வில் பதித்து நம் வாழ்க்கையை முன்னெடுத்துச் சொல்ல முயல்வோம்.

திருவருகைக்கால மெழுகுவர்த்திகள் நான்கு முக்கிய சிந்தனைகளை நமக்குத் தருகின்றன.

முதலாம் வாரத்தில் 'எதிர்நோக்கு' மீட்பரின் வருகைக்காக காத்திருந்த நம் ஆதிப் பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைக் குறிக்கின்றது.

இரண்டாம் வாரத்தின் மெழுகுவர்த்தி 'அமைதி' யைக் குறிக்கின்றது. நம் ஆண்டவராகிய மீட்பரின் வருகை, அவர் வரும் காலம் அவரின் இயல்புகள் போன்ற செய்திகளை எமக்குத் தந்த இறைவாக்கினர்களான ஏசாயா, எரேமியா தானியல், போன்ற தீர்க்கதரிசிகளை இந்த மெழுகுவர்த்தி குறிக்கின்றது.

மூன்றாம் வாரத்தின் மெழுகுவர்த்தி 'மகிழ்ச்சி'என்பதனை குறிக்கின்றது. இது மீட்பரின் முன்னோடியான புனித திருமுழுக்கு யோவானை குறித்து நிற்கின்றது." பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது.

ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள். அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள். பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும். மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும். கோணலானவை நேராக்கப்படும். கரடுமுரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பை காண்பர்." என அதைக்குறித்து லூக்கா நற்செய்தியின் மூன்றாம் அதிகாரம் நமக்கு தெரிவிக்கின்றது.(லூக்கா 3:46) நான்காம் வார மெழுகுவர்த்தி 'அன்பு 'என்பதைக் குறிக்கின்றது.

இந்த வாரங்கள் குறிப்பாக நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக நம்மை தயார்படுத்துகின்ற காலமாக அமைந்துள்ளது.இது விழித்திருந்து நமது மீட்பரை நாம் காண்பதற்காக நம்மை தயார்படுத்து கின்ற காலமாகும். இருளின் பிடியில் இருந்தும் அடிமையின் பிடியிலிருந்தும் அழிவிலிருந்தும் துன்பத்தில் இருந்தும் நம்மைக் காத்துக் கொள்வதற்காக மீட்பரை சந்திப்பதற்காக அவரை நம் உள்ளத்தில் ஏற்று அவரையே எம்மில் அணிந்துகொள்ள அழைக்கும் அன்பின் காலம் இது.

இஸ்ரயேல் மக்கள் மெசியாவின் வருகைக்காக காத்திருந்தது போல,நாமும் விழித்திருந்து காத்திருப்போம்.விளக்குகளுடன் அன்று இயேசு மொழிந்த 10 தோழியர் உவமையில் அக் கன்னியர் காத்திருந்தது போன்று நாமும் விளக்குகள் ஏற்றி மீட்பரின் வருகைக்காக நம்மை தயார் செய்வோம்.

(ஸ)

எல்.செல்வா...

# புனித பேதுரு பேராலய பிரதிஷ்டை திருவிழா



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிலிவர்ஸ் ஈஸ்டன் சர்ச்சின் புனித பேதுரு பேராலய பிரதிஷ்டை திருவிழா நவம்பர் 23ம் திகதியன்று அதிவணக்கத்துக்குரிய சாமுவேல் மோர் தியோபிலஸ் ஆண்டகையினதும் அதிவணக்கத்துக்குரிய கீவர்கிஸ் மோர் மகாரியோஸ் ஆண்டகையினதும் தலைமையில் வண. குருமார்களினது பங்கேற்புடன் கந்தானையில் வெகு விமரிசையுடன் நடைபெற்றது.

பிலிவர்ஸ் ஈஸ்டன்; சர்ச சுமார் 2000ம் ஆண்டுகள் பழமையான கிறிஸ்தவ பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டதொரு ஓத்தோடொக்ஸ் திருச்சபையாகும்.

இன்றளவில் பிலிவர்ஸ் ஈஸ்டன் சர்ச்சில் மெற்றோபொலிட்டன் ஆண்டகை உள்ளிட்ட 25 பேராயர்கள் 16 நாடுகளில் 80 அத்தியட்சாதீனங்கள் மற்றும் 2.7 மில்லியன்களுக்கு மேற்பட்ட விசுவாசிகள் உள்ளார்கள்.



பிலிவர்ஸ் ஈஸ்டன் சர்ச்சின் உயரிய ஆன்மீகத் தலைவர் அதிவணக்கத்துக்குரிய மோரன் மோர் அத்தனேசியஸ் யோஹான் முதலாவது மெற்றோபொலிட்டன் ஆண்டகை ஆவார். பிலிவர்ஸ் ஈஸ்டன் சர்ச்சின் கொழும்பு அத்தியட்சாதீனம் சுமார் 30 ஆண்டு காலவரலாற்றைக் கொண்டுள்ளது.

# புதிய அன்னை வேளாங்கண்ணி ஆலயம் மட்டு.ஆயரினால் திறப்பு







மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் கரடியனாறு சிவத்தபோக்கடி கிராமத்தில் புதிதாக நிர்மாணி க் கப்பட்டுள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு
ஜோசப் பொன்னையா ஆண்டகையினால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.
அதனைடுத்து நடைபெற்ற விஷேட திருப்பலியில் பங்குத்தந்தை ஜெமில்டன் அடிகளார் மற்றும் அருட்தந்தை மகிமைதாஸ் அடிகளார் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். ஆயித்தியமலை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்தும் பக்தர்கள் இந்த திருப்பலிப் பூசையில் கலந்து கொண்டனர்.
(படங்கள்: தகவல், பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

# திருநங்கைகளின் வாழ்க்கை சவால்களூடாக விழிப்புணர்வும் தொழில் வாய்ப்புக்களும்

**சாதாரணமாக பாலினம் எனும் போது பலர் அறிந்தது ஆண், பெண் ஆகிய இரண்டையுமே இதைத் தாண்டி LGBTIQ எனும் சமூகமும் காணப்படுகின்றது. இச்சமூகத்தில் ஆண், பெண் பாலினத்தைத் தாண்டி பாலினப்புதுமையினராகக் LGBTIQ சமூகத்தினரும் *Lesbian, Gay, Bisexual, Transgender, Intersex, Queer* வாழ்ந்து வருகின்றனர்.**

**சாதாரணமாக ஒரு குழந்தையை பிறப்பிலேயே அதன் பாலுறுப்பை வைத்து பாலினத்தை அடையாளம் காணமுடியும். அவ்வாறு பிறப்பிலே ஆண் என அடையாளம் காணப்பட்டு வளரும்போது தன்னை ஒரு பெண்ணாக உணரும் பாலினத்தைச் சார்ந்தோரை திருநங்கைகள் ஆகவும் பிறப்பின் போது பெண்ணாக அடையாளம் காணப்பட்டு வளரும்போது தன்னை ஒரு ஆணாக உணரும் பாலினத்தைச் சார்ந்தோரை திருநர்கள் எனவும் கூறலாம். ஆண், பெண் என பிறப்பிலே ஒரு குழந்தையை அடையாளப்படுத்த மனித உடலின் ஹோர்மோன்கள் காரணமாகின்றன. இவ்வாறு அவர்களிடம் திருநங்கை மற்றும் திருநம்பி எனும் உணர்வு ஏற்படுவதற்கு இயற்கையாகவே உடலில் காணப்படும் பாலின ஹோர்மோன்களின் தளம்பல் நிலையே அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது.**

**இயற்கையாக ஏற்படும் இம்மாற்றங்களின் நிறைவில் ஓர் ஆண் ஒரு பெண்ணாக அடையாளப்படுத்தப்படும்போது ஆரம்பத்தில் பல சிக்கல்களிற்கும் மனக்குழப்பங்களிற்கும் உள்ளாகி இறுதியில் தானொரு பெண்ணென உணரும் போது அதற்கான *hormone replacement therapy* மற்றும் *Sex reassignment surgeries* ஐ மேற்கொண்டு தம்மை ஒரு பெண்ணாக உருவாக்குகின்றனர்.**

**சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளில் ஒன்றாக இப்பாலினப் புதுமையினரை முழுமையாக ஏற்றுக்கொள்ளாமையே நிலவுகிறது. சாதாரணமாக மனிதர்களுக்குக் கொடுக்கப்படும் சில உரிமைகளை திருநங்கைகளுக்கு கொடுக்க சமூகம் மறுக்கிறது. அந்தவகையில் திருநங்கைகள் தமது வாழ்வில் எதிர்கொண்ட சவால்கள் அவற்றை எவ்வாறு தகர்த்தெறிந்து தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளனர் என்பதை உணர்வுபூர்வமாக குறிப்பிடும் நேர்காணல்...**

திருநங்கைகளாக இச்சமூகத்திற்கு அடையாளப்படுத்தும் போது பல சவால்களை எதிர்கொண்டுள்ளனர். அவற்றை பின்வருமாறு பகிர்ந்து கொண்டனர்.

'ஒரு சிலபேர் தங்களை queer என்று சொல்லி வெளில வாராங்க சிலபேருக்குச் சொல்லுறதுக்குப் பயம்.' நான் நம்மட சமூகத்துக்குள்ள அவ்வளவா போறதில்ல. ஏன்னா நமக்கு எண்டொரு life வந்திடும் female life start பண்ண உடன அதுக்குள்ள போயிற்று நாங்களே போற வாற இடமெல்லாம் நானொரு திருநங்கை எண்டு சொல்லிக் கொண்டு இருக்கிறதில ஒரு அர்த்தம் இல்லத் தானே. என்று தன்னுடைய விருப்பை இச்சமூகத்திற்கு வெளிப்படுத்தினார்.

'வேலைக்குப் போறது எண்டா நான் இப்ப female identic card ஓட போகப்போறேன் எண்டாப் பிரச்சனை இல்ல நான் change பண்ணாமப் போனாத்தான் பிரச்சன வரும். தெரிஞ்சவங்க இருந்து அவங்க வேலை குடுக்கிறாங்க எண்டா ok இப்ப தெரியாத இடத்தில நான் ஒரு interview குப் போறேன் என்னோட identic card different ஆ இருக்குது எண்டு கேள்வி கேப்பாங்க.' என்று யாழ்ப்பாணச் சமூகத்தில் வாழும் திருநங்கையான ஈழநிலா தன்னுடைய வாழ்க்கையில் எதிர்கொண்ட சவால்களைக் கூறினார்.

'எங்கள குடும்பம் ஏற்றுக்கொள்ளனும். நாங்கெல்லாம் வேணுமெண்னே பண்ணுறதில்ல. வேணுமென்னே உருவாக்கிற பிரச்சனையும் கிடையாது. அதுவாவே வாற பிரச்சனை. இதுக்கு நாங்க காரணம் கிடையாது எண்டு பெற்றோர் புரிஞ்சக்கணும். புரிஞ்சிக்கிட்டு ஏத்துக்கிட்டா அந்த லைப் நல்லாருக்கும். புரிஞ்சிக்காம அடிச்சு உதைச்சு செய்யிற கொடுமையெல்லாம் ரொம்பக் கஷ்டமானது. Teenage பருவத்தை நாங்க கடக்கிறது ரொம்பக் கஷ்டமானது. எங்களாள அப்பா அம்மாக்கு நிம்மதி இருக்காது. நாங்களும் நிம்மதியா இருக்கமாட்டம் எங்கட அப்பா அம்மாவையும் நிம்மதியா இருக்கவிடமாட்டம். சரியான ஒரு போராட்டகாலம் அந்த Teenage என்றது.' இவ்வாறாக ஒரு திருநங்கையாக கட்டிளமைப்பருவத்தில் கடந்து வந்த வடுக்களை ஈழநிலா பகிர்ந்து கொண்டார்.

ஆரம்பத்தில் பாடசாலை வாழ்க்கையில் திணிக்கப்பட்ட சவால்கள் பலவற்றைக் கடந்து தன்னை ஒரு பெண்ணாக அடையாளப்படுத்தியதில் இருந்து குடும்பத்தின் ஒத்துழைப்புடனும் நண்பர்களின் ஒத்துழைப்புடனும் தனது வாழ்க்கைப் பயணத்தை புதிதாக ஆரம்பித்து NGO இல் வேலை பார்த்து குடும்பத்திற்கு அதனூடாக உதவிபுரிந்துள்ளார். எதிர்காலத்திலும் குடும்பத்துடனே வாழ ஆசைப்படும் ஈழநிலா தற்போது புதிய தொழில் ஒன்றை முழுமையாகத் தெரிந்து அதனை தானே முன்னெடுக்க பகுதி நேர வேலையாகச் செய்து வருகிறார்.

தங்களிற்கான hormone replacement therapy மற்றும் Sex reassignment surgeries ஐ மேற்கொள்ள அதிக செலவுகள் ஏற்படுவதாகவும் இதற்காக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஈழநிலா மேலும் கூறினார் .

எங்கள் சமூகத்தினருக்கு இப்படிப் பல சவால்கள் காணப்பட்டாலும் எமது நாட்டின் பிறப்புச் சான்றிதழில் தங்களது பெயர், பாலினத்தை மாற்றுவதற்கான சில மசோதாக்கள் காணப்படுகின்றன. அத்துடன் NTA எனப்படும் NGO வில் மசோதாவொன்றை வரையறை செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த மசோதாவை ஹரேந்திரன் எனும் பாலினப் புதுமையினரிற்கான செயற்பாட்டாளர் முன்வைத்துள்ளார்.

அதில் சாதாரணமாக ஒரு மனிதனுக்கு காணப்படும் மனித உரிமைகளை பாலினப்புதுமையினராக தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் பாலினத்திற்கு ஏற்றது போல பெற்றுக்கொள்ளும் வகையில் திருத்தங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளதாகவும் ஈழநிலா குறிப்பிட்டார். சாதாரண மக்களுக்கு காணப்படும் மனித உரிமைகள் தங்களிற்கும் கிடைக்க வேண்டும் என்ற ஆதங்கங்களை தனது வாழ்க்கையின் அனுபவத்தில் கற்றுக் கொண்டதாகக் கூறுகின்றார்.

நமக்குத் தெரியாத ஒன்னப் பற்றி நாம கதைக்கக் கூடாது. முதல் இது என்ன ஏது எண்டு தெரிஞ்சு கதைக்கப்பழகணும். நம்மட சமூகம் சரியாப் புரிஞ்சிக்கணும். அப்பதான் நம்மட பிரச்சினை அவங்களுக்கு புரியும். யாழ்ப்பாணச் சமூகமானது LGBTIQ சமூகம் பற்றிய புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டுமென்கின்றார். அத்துடன் முக்கியமாக ஆண்கள் பாடசாலைகளில் திருநங்கைகள் தொடர்பான விழிப்புணர்வை வழங்கவேண்டும். ஏனெனில் அந்தப்பிள்ளைகளை அவர்களின் நண்பர்கள், ஆசிரியர்கள் கூட துஷ்பிரயோகம் செய்ய முற்படுவார்கள். விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு LGBTIQ சமூக நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டும்.தான் கடந்துவந்த பாதையிலிருந்த சவால்களையும் திருநங்கைகளுக்கான முழு நிர்ணயம் தகுந்த வகையில் கிடைக்கப் பெறவேண்டும் என்றும் தொழில் வாய்ப்புக்களை நாமே தேடிக் கொள்ளவேண்டும் அதற்காக உதவிகள் புரியும் LGBTIQ சமூக தொண்டமைப்புக்களை அணுகமுடியும் என்றும் தனது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டார்.

திருநங்கைகளில் தொழில் வாய்ப்பு ரீதியாக முன்னுதாரணமாகத் திகழும் மேரி அப்புத்துரை அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைத்தது.

தன்னுடைய இளமைப்பருவத்தில் பல சவால்களை எதிர்கொண்டு சுயதொழில் வாய்ப்புக்களை தன் முயற்சியின் மூலம் ஏற்படுத்தி தன்னால் முடிந்தளவு சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி பல பெண் தலைமைத்துவம் குடும்பங்களுக்கு கொடுக்குமளவு வலுவுடையவராகக் காணப்படுகின்றார்.

ஒவ்வொரு திருநங்கைகளும் தங்கள் வாழ்க்கையில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ள நேரிடும். அதேபோல் மேரியும் சிறு வயதில் சவால்களை எதிர்கொண்டுள்ளார். அவருக்குத் தற்போது 53 வயதாகின்றது. தன்னையொரு திருநங்கையாக அடையாளம் கண்ட காலப்பகுதியில் இன்றைய காலம் போல பால்நிலை தொடர்பான விழிப்புணர்வு இல்லை. இதனால் பல்வேறு சஞ்சலங்களுக்கு உட்பட்டுள்ளார்.

'நான் 8ம் வகுப்பு மட்டும் தான் படிச்சேன். சின்னசின்ன வேலைகள் செய்வேன். தோட்ட வேலைக்குப் போவேன், வீட்டுவேலைக்குப் போவேன். முந்தி கோயிலுக்குப் போகமாட்டேன், ஊரில நாடகம் போடுவினம் பாக்கப் போகமாட்டேன் போனா வெட்கம் பெடியங்கள் என்ன சொல்றாங்களோ எண்டு. அந்தக் காசெல்லாம் செலவழிக்காமப் பொத்தி வைப்பேன். 500 ரூபா சேந்தோன்ன ஒரு மாசத்துக்கு 20 ரூபா படி வட்டிக்குக் குடுப்பேன்'.

மேரி தனது சுயதொழில் முயற்சியாலே இன்று அனைவருக்கும் ஓர் முன்னுதாரணமாக திகழ்கின்றhர்

'கோழி வளக்கிறது சீட்டுப் பிடிக்கிறது காணியள வேண்டி விக்கிறது இதில தான் நான் முன்னேறினான். நான் இலங்கைல தான் முதல் hormone replacement therapy, Sex reassignment surgeries செஞ்சேன். முதல் செஞ்ச Sex reassignment surgeries எனக்கு திருப்தியா இருக்கேல பிறகு தாய்லாந்து போய் Sex reassignment surgeries செஞ்சேன். ரெண்டையும் சொந்தச் செலவில தான் செஞ்சேன்' குடும்பத்தில மாத்திரமில்லாமல் ஊரிலும் அனைவராலும் வரவேற்கத்தக்க வகையில் மேரி இன்று இருக்கின்றார்.

'எனக்கு இப்ப பிரச்சன இல்ல நானாச் சொன்னாத்தான் தெரியும் நானொரு திருநங்கையெண்டு. குடும்பத்தில எல்லாரும் எனக்கு ஆறுதலா இருக்கினம். அவையலாள எனக்குக் கரச்சல் இல்ல. குடும்பத்தில ஏதன் நடந்தா என்னத்தான் முன்னுக்கு கூப்பிடுவினம். சிலநேரம் சண்டையலும் வரும்' என்றபடி சிரித்தார்.

கல்வியுடனான வேலைவாய்ப்பு மூலம் தான் முன்னேறலாம் என்பதில்லை சுயதொழில் மூலம் கூட வாழ்க்கையில் சரியான இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என சுயதொழில் வியாபாரங்கள் மீது கொண்ட அனுபவத்தை மேரி பகிர்ந்து கொண்டார்.

'எங்கட சமூகத்தில முதல் அடி ஏறுறது தான் கஷ்டம் அதுக்குப் பிறகு எங்கட முயற்சியால இன்னும் முன்னுக்கு வரலாம். திருநங்கைகள் சாதாரணமா படிப்புக் காலத்தில சரியாப் படிக்கேலாமப் போடும். ஆனா எங்கட சுயதொழில் முயற்சியலுக்கு படிப்புப் பெரிசாத் தேவ இல்ல. மூளை தான் தேவ அதோட வல்லமையும் ஆக்களோட அனுகுமுறை எல்லாம் சரியாச் செஞ்சா முன்னேறலாம் வாழ்க்கேல'

மேரி தன்னுடைய சொந்த வாழ்க்கையுடன் ஊரில் பல நல்ல விசயங்களைச் செய்து கொண்டு இருக்கின்றார். திருநங்கைகள் மாத்திரம் இல்லாது பெண் தலைமைத்துவம் குடும்பங்களில் கூட சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்

'எங்கட திருநங்கைகளப் பொறுத்த வரேல யாழ்ப்பாணத்தில எனக்குத் தெரிஞ்ச சில பிள்ளையல் கோழிக்குஞ்சு வளர்ப்பு செய்யினம். அதோட கோழிப்பண்ணையும் வைச்சிருக்கினம்.

LGBTIQ சமூகத்தில் சுயதொழில் வியாபாரங்கள் தான் பெருமளவில் சாத்தியப்படத்தக்க விதத்தில் இருப்பதாகவும் அதைத் தவிர கல்வி கூட இந்தக் காலத்தில கற்று சரியா முன்னேறலாம் என்றும் கூறினார்.

'சமுதாயம் ஒரால் திருநங்கை எண்டு வெளிவரேக்க ஏற்றுக் கொள்ளாதுதான் ஆனா நாங்க எங்கட முயற்சீல முன்னேறேக்க சமுதாயம் எங்களக் கொஞ்சம் ஏற்றுக்கொள்ள முயலும். யாழ்ப்பாணத்த பொறுத்த வரேல திருநங்கைகளுக்கு இந்தியாவப் போல கஷ்டமெண்டில்ல. நல்ல படிப்பிருக்கு நல்ல முன்னேற்றமிருக்கு. யாரா இருந்தாலும் எங்கட வலுவுக்கு ஏற்றபோல சுயதொழில் வியாபார முயற்சிகள மேற்கொள்ளலாம்'.

அப்புத்துரை மேரி தனது வாழ்க்கையில் கடந்து வந்த பாதையையும் அதற்குள்ளே முடங்கிக்கிடக்காமல் சுயதொழில் வியாபார முயற்சிகளுடன் முன்னேறி சமூகத்தில் நிலையான வாழ்க்கையை மேற்கொள்வது மட்டுமில்லாமல் சிலருக்கு தொழில் முயற்சி உதவிகளையும் சரிவர மேற்கொள்கின்றார் என்பது வரவேற்கத்தக்க செயற்பாடாகும். இவற்றுடன் நின்றுவிடாமல் LGBTIQ சமுதாயத்தின் சங்கமான யாழ்ப்பாணச் சங்கத்திலும் இத்தொழில் வாய்ப்பு ரீதியான வலுவுட்டல் செயற்பாட்டில் உறுப்பினராக உள்ளார். உண்மையில் திருநங்கைகளுக்கு சிறந்தவொரு முன்னுதாரணமாவார்.

LGBTIQ சமூக செயற்பாட்டாளரும் Pharmacist ஆன தேன்மொழி மார்க்ட் அவர்களுடன் திருநங்கைகளின் வாழ்க்கைச் சவால்களூடாக எப்படி தொழில்வாய்ப்புக்கள் காணப்படுகின்றது என்று கலந்துரையாடலை மேற்கொள்ள முடிந்தது. உண்மையில் LGBTIQ சமூகம் சார்ந்த அபிலாசைகளை அறியக்கூடியதாக இருந்தது. சாதாரணமாக கடந்து செல்லும் கட்டிளமைப் பருவத்தில் LGBTIQ சமூகம் முகங்கொடுக்கும் சவால்களுக்கூடாக கல்வியை சரிவர பூர்த்திசெய்ய முடியாமல் இருக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் பாரிய சிக்கல்களுக்குள் உள்ளாகின்றனர். கல்விக்கூடாக கிடைக்கும் தொழில் வாய்ப்புக்கள் சரிவரக் கிடைப்பதில்லை.

இவ்வாறாக தன்னை அறிமுகப்படுத்திய தேன்மொழி மார்க்ட் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கும் தான் யாரென்ற விடையைத் தேடவும் 3,4 வருடங்கள் ஆகிவிட்டதாகக் கூறினார். அதற்குள் தன்னுடைய கல்வியை முடித்து தற்போது ஒரு Pharmacist ஆக இருக்கின்றார். தன்னை trans queer என அடையாளப்படுத்தி தனக்கான கல்விக்கேற்ற வேலையைத் தொடர முனையும் போது பால்நிலை அடையாளங்களை கேள்விக்கு உட்படுத்தி அந்த அடையாளங்களுடன் வேலை செய்யமுடியாமல் போனதாகக் கூறினார்.

எல்லா சமூகமும் எதிர்பார்ப்பது படித்த சமூகம் வரவேண்டும் என்பதையே. இருந்தாலும் சில காரணங்களால் படிப்பைத் தொடர முடியாமற் போனவர்களும் சில வியாபாரங்களைச் செய்து நல்லா வார சமூகமும் இருப்பதாகக் கூறுகின்றார். திருநங்கைகள் சமூகத்திலும் தொழில் வாய்ப்புக்களுடன் பலர் இருக்கின்றனர் என்பதையும் குறிப்பிட்டார்.

LGBTIQ சமூகத்தை ஏற்றுக்கொள்ள கல்வி தொழில் அவசியம் என்று கூறும் தேன்மொழி, கல்வியுடனான தொழில் வாய்ப்பு சாதாரணமாக ஒரு சமூகத்தை முன்னேற்றுகின்ற அதேவேளை அச் சமூகம் கூறுவதை அனைவரும் ஏற்றுக்கொள்ளுவார்கள். இது தொடர்பான விழிப்புணர்வைச் சமூகத்திற்குச் செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

LGBTIQ சமூகத்தினருக்கு சரியான தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதற்கு பாடசாலைக்கல்வி பல்கலைக்கழக கல்வியில் சீர்திருத்தங்கள் வேண்டுமென்று கூறிய தேன்மொழி தங்களுடைய யாழ்ப்பாணச் சங்கம் சில தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதாகக் கூறினார்.

பல திருநங்கைகள் சொந்தமாக தொழில் வாய்ப்புக்களை மேற்கொள்ளாது எப்போதும் பிறரையே தங்கியிருக்கிறார்கள். உதவியை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களை தாமாகவே செயற்பட விட வேண்டும் அப்போது தான் அவர்கள் தாமாக யோசித்து வேலை வாய்ப்பை ஏற்படுத்துவினம் அத்தோடு முன்னேற முயலுவார்கள் என்பதை வலியுறுத்திக் கூறினார்.

தாமாகவே சமூகத்துக்குள் வரும் போது தான் அவர்களின் பலம் வெளிக்காட்டப்பட்டு சரியான தொழில்வாய்ப்புக் கிடைக்கும் அதனால் அடுத்து வரும் எம் சமூகத்தினரை சமூகம் ஏற்றுக்கொள்ளும்.

இவ்வாறு தான் எதிர்கொண்ட வாழ்க்கைச் சவால்களையும் கல்விக்கூடான வேலைவாய்ப்பு தமது LGBTIQ சமூகத்தை எவ்வாறு தொழில் வாய்ப்புக்களுக்குள் சரியான முறையில் கொண்டு செல்லலாம் என்றும் LGBTIQ சமூகம் சார்ந்த எண்ணப்பாங்கில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

குடும்பம், சமூகம் ஊடாக பாரிய சவால்களுக்கு உட்பட்டு தற்போது சுயதொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி வாழ்க்கைச் சவால்களை படிப்படியாக தகர்த்துவரும் திருநங்கையான தர்சினியின் கலந்துரையhடலில்.

தனக்கான கல்வியை முடித்து வெளியூர் சென்று தன்னை திருநங்கையாக அடையாளப்படுத்தினார். தொழில் வாய்ப்புக்கள் தேடிப் போன நிறுவனங்களில் பால்நிலையை சுட்டிக்காட்டி திறமையை வெளிப்படுத்த மறுத்துப் பல புறக்கணிப்புக்களை எதிர்கொண்டார். பின்னர் அதிக ஆவல் கொண்ட தையல் தொழிலை தற்போது மேற்கொண்டு வருகின்றார்.

அவருடைய வாழ்க்கையில் பள்ளிக் காலம் தொட்டு உளவியல் ரீதியாக பல சவால்களுக்கு உட்பட்டு தனித்து நிற்கவேண்டும் என்ற நிலையில் தனக்கான சுயதொழில் வாய்ப்புக்களை மேற்கொண்டதாக தர்சினி கூறினார்.

எதிர்காலத்தில் தங்களுடைய சமூகம் சார்ந்து சாதாரணமாக அனைவருக்குமான சுயதொழில் வாய்ப்புக்களை தனது தையல் நிலையத்தில் கொடுப்பதற்கும் பலருக்கு தான் எதிர்கொண்ட சவால்கள் போல் வராமல் தடுக்க இயன்ற அளவில் முயற்சிக்க இருப்பதாகவும் கூறினார்.

சமூகம் என்பது படித்தவர்கள் சொன்னால் அல்லது பணம்படைத்தோர் கூறினால் தான் ஏற்றுக் கொள்வதாக இருக்கிறது. இவ்வாறாக தான் எதிர்கொண்ட சவால்களையும் அதற்கூடாக தனக்கான சுயதொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொண்ட வழியையும் பகிர்ந்து கொண்டார்.

சாதாரணமாக ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் சவால்கள் ஒவ்வொரு விதமாக காணப்படும். பால்நிலை என்று வரும்போது பல தடைகளை தகர்க்க நேரிடும். அந்த வகையில் குடும்பத்தால் நிராகரிக்கப்பட்டு தனக்கான தொழில் வாய்ப்பை தானாகவே மோனிகா மேற்கொண்டுள்ளார்.

பொரும்பாலும் குடும்பத்தில் இருந்து பாசம் பாதுகாப்பு ஒருவருக்கு கிடைக்கவேண்டிய காலப்பகுதியில் சரியாக புரிந்து கொள்ளாமல் புறக்கணிப்புக்கள் பலவற்றை எதிர்கொண்ட அனுபவங்களை மோனிகா பகிர்ந்து கொண்டார். அந்தப் புறக் கணிப்புக்களிலும் கல்வியறிவு கொண்டதால் தனக்கான ஆவணங்களிலிருந்து தொழில் வாய்ப்புக்கள் வரை தானாகவே தனித்து நின்று அலைந்து திரிந்து பெற்றுக் கொண்டதாகவும் கூறினார்.

சாதாரணமாக இளமைப்பருவத்தில் அனைவருக்கும் வெளிப்படும் காதலால் பல சவால்களை எதிர் கொண்டதாகவும் அவற்றுக்கான சரியான வழிவகைகளை திருநங்கையாகப் பெற்றுக் கொள்ள முடியாமல் தனக்கான இருப்பை முதலில் தக்கவைத்துக் கொள்ள ஒரு தொழில் வாய்ப்பை தேடியபோது அழகுக்கலையில் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக அழகுக்கலைக் கல்வியைத் அரசாங்கத்திற்கு இட்ட மனு மூலம் இலவசமாகப் பெற்றுக்கொண்டு அழகுக்கலைப் படிப்பை முடித்து தற்போது பிரபல அழகுக்கலை நிறுவனமொன்றில் வேலை புரிகின்றார்.

திருநங்கைகளுக்கு அரசாங்கத்தால் கிடைக்கும் சில அனுகூலங்கள் தெரிவதில்லை. அது தெரிந்தால் பல திருநங்கைகள் சுயமாகவே முன்னேறி விடுவார்கள். என்று கூறினார்.

இவ்வாறாக கூறிய மோனிகா தான் தொழிலில் ஈடுபட்டாலும் இன்று வரை திருநங்கையாக இருப்பதை சிலர் கேலி செய்கின்றனர். தனக்கான புறக்கணிப்பிலும் துவண்டு போகாமல் தொழில் முறையில் முன்னேறுவதை திடமாகக் கூறினார்.

இவ்வாறாக ஒவ்வொரு திருநங்கைகளும் தமக்கான வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு வகையில் கல்வி குடும்பம், நண்பர்கள் தொழில்வாய்ப்புக்கள் காதல் என பல கோணங்களில் சவால்களை எதிர்கொண்டு தமக்கான தொழில் வாய்ப்புக்களை சுயமாக ஏற்படுத்தியுள்ளனர். இவர்களின் கருத்தியல்கள் மூலம் அவர்களுக்கான தொழில் வாய்ப்பை பெற முயன்றும் சமூகம் ஒத்துழைக்க முன்வராமை வரவேற்கத்தக்க செயலாகக் கூற முடியாது.

ஏனெனில் சாதாரணமாக பால்நிலையை முன்னிறுத்திக் காட்டாமல் எல்லோரும் மனிதர்கள் என்ற வகையில் அனைவருக்கும் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும்.

கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்ட திருநங்கைகள் ஒவ்வொருவரின் வாழ்க்கைப் பயணத்திலும் பலர் கடந்து வந்த பாதைகள் பலருக்கு விழிப்புணர்வாகவும் ஓர் முன்னுதாரணமாகவும் காணப்படுகின்றமை உண்மை ஆகும். அவற்றில் முன்னுதாரணமான வெளிப்படுத்தல்கள் இன்னமும் வேலைவாய்ப்பின்றி இருக்கும் பல திருநங்கைகளுக்கு சுயதொழில் முயற்சிக்கு வித்திடும்.

**கிரிஷா சுரேந்திரன்**
4 ஆம் வருட ஊடக கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

# திண்டுக்கல் வாழ் இலங்கை தமிழர்களுக்கு ரூ.17.17 கோடி நிதியில் 321 வீடுகள்

## 120 நாள்களில் கட்டித்தருவதாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் தெரிவிப்பு

திண்டுக்கலில் வாழும் இலங்கைத் தமிழர்கள் 321 பேருக்கு ரூ.17.17 கோடி மதிப்பீட்டில் 120 நாள்களில் வீடுகள் கட்டித்தரப்படும் என்று தமிழக சிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் கே.எஸ். மஸ்தான் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் தோட்டனூத்தில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் அமையவுள்ள இடம், திண்டுக்கல் பேகம்பூர் பகுதியில் உள்ள அரண்மனைகுளம் ஆகியவற்றை அமைச்சர்கள் இ.பெரியசாமி, மஸ்தான் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

திண்டுக்கல்லை அடுத்த தோட்டனூத்து, அடியனூத்து மற்றும் கோபால்பட்டியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமை ஒருங்கிணைத்து, தோட்டனூத்து கிராமத்தில் ரூ.17 கோடியே 17 இலட்சத்தில் புதிதாக இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டுவிழா மற்றும் இலங்கை தமிழர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.இதற்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மஸ்தான் ஆகியோர் தலைமை தாங்கினர். புதிதாக அமைக்கப்பட உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமுக்கு அமைச்சர்கள் அடிக்கல் நாட்டினர்.

அதன்பிறகு அமைச்சர் மஸ்தான் பேசுகையில், தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றதும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறையை உருவாக்கினார். பின்னர் தமிழகத்தில் உள்ள 106 இலங்கை அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க உத்தரவிட்டார். அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 321 பயனாளிகளுக்காக தற்போது இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் அமைக்கப்பட உள்ளது. இங்கு கட்டப்படும் ஒவ்வொரு வீடும் ரூ.4 லட்சத்து 75 ஆயிரத்தில் கட்டப்படுகிறது என்றார்.

நிகழ்ச்சிக்கு பின் அமைச்சர் கே.எஸ். மஸ்தான் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் 106 இடங்களில் உள்ள முகாம்களில் வாழும் புலம்பெயர்ந்த இலங்கை தமிழர்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில் 3510 வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் திண்டுக்கல் மாவட்டத்தில், தோட்டனூத்து, அடியனூத்து மற்றும் கோபால்பட்டி ஆகிய 3 முகாம்களில் வாழும் 321 இலங்கை தமிழர்களுக்கு, தோட்டனூத்து பகுதியில் தலா ரூ.4.75 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இந்த கட்டுமானப் பணிகள் 120 நாள்களில் முடித்துக் கொடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் உறுதி அளித்துள்ளார். அதன் பின்னர், மாவட்டத்தில் மேலும் 3 இடங்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என தெரிவித்தார்.

# நல்லூரான் பணிக்கென்றே வாழ்நாளை அர்ப்பணித்தவர் மாப்பாண முதலியார்

கடந்த 2021 ஐப்பசி மாதம் 9 ஆம் திகதி அமரத்துவம் அடைந்த சண்முகதாஸ மாப்பாண முதலியார் தன் வாழ்நாளில் பெரும் பகுதியில் நல்லூர் முருகப் பெருமானுக்காகவே சேவை செய்தார். சாந்த முகமும், வெறும் மேனியராக, நெற்றி தொடக்கம் மேல் மேனி முழுவதும் சமய தீட்சையின் அடையாளமான முக்கீற்று விபூதிக் குறிகளுடனும், அரையில் ஒரு சாதாரண கரையில்லாத வெள்ளை வேட்டியுடனும், எந்தப் பொழுதானாலும் சரி, கூடுதலான வேளைகளில் நல்லூரான் சந்நிதியில் காணப்படுவார் அவர்.

நல்லூர் முருகனுக்கே வாழ்நாள் அறங்காவல் சேவை புரிந்து வந்த மாப்பாணர் பரம்பரையில் தோன்றிய இரகுநாத மாப்பாண முதலியாருக்கும் அவரது மனைவியாருக்கும் இரண்டாவது மகனாக 1929 ஆம் ஆண்டு பிறந்த குமாரதாஸ மாப்பாண முதலியார் 1964 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் பராமரிப்புப் பொறுப்பைப் பெற்றுக் கொண்டார்.

இம்மஹாபுருஷர் ஆலய பராமரிப்பைப் பொறுப்பேற்ற நாளில் இருந்து அளப்பரிய சேவைகளைச் செய்து வந்தார். கோயிலைத் தற்போதைய நிலைக்குக் கொண்டு வந்த பெருமை அன்னாரைச் சார்ந்ததாகும். இவர் காலத்தில்தான் கோயில் வெளிவாயில் வில் மண்டபம், கர்ப்பக்கிரகம், (மூலஸ்தானம்) அர்த்த மண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம் இடிக்கப்பட்டு நவீன அலங்கார முறையில் புதுப்பித்துக் கட்டப்பட்டது.

ஆறுமுகப் பெருமானின் வாசல் கோபுரம் கட்டப்பட்டது. கேணியும், அதனைச் சுற்றியுள்ள உள்வீதி மண்டபங்களும் புதுப்பித்துக் கட்டப்பட்டன. அதன் பின்னர் சகல உள்வீதி மண்டபங்களும் கட்டப்பட்டன. மஞ்சம், வேல் விமானம் புதிதாகச் செய்யப்பட்டுள்ளன. புதிய தேர் செய்யப்பட்டு, 1964 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20ம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டது. அது மாத்திரமல்ல பழைய தேர் முட்டி இடிக்கப்பட்டு புதிதாக சிறந்த முறையில் கட்டப்பட்டுள்ளது. பழனி ஆண்டவர் சந்நிதியும் இடம் மாற்றப்பட்டு தென்மேற்கு மூலையில் சிறந்த முறையில் கட்டப்பட்டுள்ளது.

கோயிலின் தல விருட்சமாக மூன்று மாங்கன்றுகள் இந்தியாவின் காஞ்சிபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்டு நடப்பட்டன. அவை தற்பொழுது பெரிய விருட்சங்களாக வளர்ந்து விட்டன. தினமும் அவைகளுக்கும் பூசை செய்து, தீபம் காட்டப்படுகின்றது.

தெற்கு வீதியில் பிரம்மாண்டமான நவதளக் கோபுரம் (களிக்கோபுரம்) கட்டப்பட்டு 2011.08.21 ஆம் திகதியன்று நவகலாபிஷேகம் செய்யப்பட்டது. இக்கோபுரத்தின் எதிரே வீதிக்கு அப்பால் முருகப் பெருமா



னால் ஆட்கொள்ளப்பட்ட அருணகிரி நாதருக்கான ஒரு சந்நிதானமும் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து வடக்கு வீதியில் குபேரவாசல் கோபுரம் கட்டப்பட்டு (நவமள கோபுரம்) 2015.08.04 ஆம் திகதி கும்பாபிஷேகப் பெரும் சாந்தி நடைபெற்றது.

இத்தனை வேலைகளைச் செய்வதற்கு இம்மஹாபுருஷர் அடியவர்களிடம் நிதியுதவியோ, சரீர உதவியோ கேட்டுப் பெற்றுக் கொள்ளவில்லை. அடியவர்கள் விரும்பிக் கொடுக்கும் பணத்தையும், சீமெந்து, மண், கல் மற்றும் சரீர உதவிகளையும் மறுக்க முடியாத நிலையில் பெற்றுக் கொண்டுள்ளார். இவை தவிர முழுப் பொறுப்புச் செலவுகளும் கோயில் வருமானத்திலிருந்தே செய்யப்பட்டுள்ளன.

கோயில் திருவிழாக்களைச் செய்யும் அடியார்களிடம் குறைந்த கட்டணத்தையே பெற்று திறம்படச் செய்துள்ளார். ஏழை அடியவர்களின் நலன் கருதி அர்ச்சனை செய்வதற்குரிய கட்டணமாக ஒரு ரூபா மாத்திரம் பெற்றுக் கொள்ளும் முறையை கொண்டு வந்தவரும் இப்பெருந்தகையேயாவார்.

பூஜைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள் எல்லாம் அந்தந்த குறிப்பிட்ட நேரங்களிலேயே நடைபெற வேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டு வந்தவரும் இவரே.

பூஜைகள், அபிஷேகங்கள், தீபாராதனைகள் நடைபெறும் பொழுது பக்தர்களோடு தானும் ஒருவராக அதுவும் சற்று பின்னால் நின்று வழிபடுவது இவரின் சிறப்பு அம்சமாகும். இறைவன் சந்நிதியில் யாவரும் சமமே என்ற கொள்கையை கடைசிவரை கடைப்பிடித்து வந்துள்ளார்.

கோயில் பூஜைகள் முடிந்த பின்னர் தானே முன்னின்று வேலை ஆட்களைக் கொண்டு அல்லது பூசகர்களைக் கொண்டு கோயில் சந்நிதிக் கதவுகளையும், பிரதான கதவுகளையும் பூட்டிச் சாவிகளை எடுத்துச் செல்வார். இவர் கையில் எப்பொழுதும் சாவிக்கொத்தை காணக் கூடியதாக இருக்கும்.

தனது பொறியியலாளர் பதவியையும் துறந்து முருகப் பெருமானுக்கே சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் கடந்த ஒருசில வருடங்கள் முன்பு வரை தனிமனிதனாக நின்று கோயிலின் நிர்வாக சேவைகளைச் செய்து வந்துள்ளார். அதிக அளவில் தினமும் காலை, மதியம், மாலை என்று மூன்று வேளைகளிலும் முருகன் சந்நிதியில் காணப்படும் இப்பெரியார் பேதம் பொருட்படுத்தாமல் வாழ்ந்து வந்தார். இவர் தனது 92வது வயதுதில் அண்மையில் காலமானார்.

சைவப் புலவர், சைவ சித்தாந்த பண்டிதர்
**அம்பலவாணர் இராஜரட்ணம்...**

# நாட்டாமை தொழிலாளர்களின் தள்ளுவண்டிகளால் புறக்கோட்டையில் மக்களின் போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு நகரில் விசேடமாக புறக்கோட்டை மற்றும் குறுக்கு வீதிகளில் நாட்டாமை தொழிலாளர்களின் வண்டிகள் (தள்ளு வண்டிகள்) ஒழுங்கின்றி பயணம் செய்வதன் காரணமாக புறக்கோட்டை பிரதேசத்தில் நடந்து செல்லும் மக்கள் மற்றும் முச்சக்கரவண்டி, லொறி, வான் உரிமையாளர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அதனால் இது தொடர்பாக சரியான வழிமுறை ஒன்றை அதற்காக தயாரித்து மக்களின் சிரமத்தை குறைக்குமாறு நகரசபை உறுப்பினர் ரெங்கசாமி ஜெய்சங்கர் நகர போக்குவரத்து குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பான விசேட குழுவால் நாட்டாமை வண்டிகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று வாகன போக்குவரத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் புறக்கோட்டை போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி, நாட்டாமை தொழிலாளர் சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தள்ளு வண்டி உரிமையாளர்கள் சிலருடனான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அங்கு கீழே குறிப்பிட்டுள்ள விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அனைத்து வண்டிகளையும் கொழும்பு மாநகர சபையின் கீழ் பதிவு செய்வது மற்றும் அவற்றிற்கு இலக்கம் இடுவது. நாட்டாமை வண்டியாளர்களை பதிவு செய்வது தொடர்பாக புறக்கோட்டை சமூக பொலிஸ் பிரிவு மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்களை செயல்படுத்துவது. நாட்டாமை தொழிலாளர்களை அடையாளம் காண்பதற்காக மேலங்கி ஒன்றை வழங்குவது. நாட்டாமை தொழிலாளர்களுக்கு வண்டிகள் வழங்கும்



போது அவர்கள் தொடர்பான தகவல்களை வண்டி உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வண்டிகளை கொண்டு செல்லும் போது தனிவழிப் பாதைகளில் பயணிக்கும் போது வீதி போக்குவரத்து விதிகளை பின்பற்ற வேண்டியதோடு, அவ்வாறு செய்யா விட்டால் அது தொடர்பாக பொலிசார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்கனவே வண்டிகளுக்காக கட்டணம் செலுத்தப்படுவதாக தள்ளுவண்டி உரிமையாளர்களால் கூறப்பட்டதோடு, இவ்வாறு ஒதுக்கப்படும் போது வாகன தரிப்பிட ஒப்பந்ததாரர்களுக்கு குறிப்

## உரிய வழிமுறைகளை பின்பற்றுவதற்காக கலந்துரையாடல்

பிட்ட கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளதோடு வீதிகளில் ஒழுங்கற்ற முறைகளில் வண்டிகளை நிறுத்துவதன் காரணமாக வாகன நெரிசல் ஏற்படுவதால் தள்ளுவண்டிகளுக்காக பாதையில் தனியான இடம் ஒன்றை ஒதுக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

வண்டிகளில் ஏற்றப்படும் பொருட்களின் உயரத்தின் அளவு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியதோடு, அது தொடர்பில்பொலிசார் கவனம் செலுத்த வேண்டும்.

வண்டிகளை பதிவு செய்வதற்கு மற்றும் பதிவு செய்த இலக்கங்கங்களுடன் கூடிய தகட்டை பெற்றுக் கொள்வது தொடர்பாக செலவிடப்படும் பணம் தொடர்பில் நகர திறைசேரியில் வினவவும், மேலங்கி ஒன்றை பெற்றுக் கொடுக்கக் கூடிய வாய்ப்பு அல்லது அதற்காக அனுசரணையாளர்கள் ஒருவரை தேடுவது தொடர்பாக மேயர் உள்ளிட்ட சபை மற்றும் நகர ஆணையாளருக்கு அறியத் தர வேண்டும்.

தற்போது நாட்டில் நிலவும் தொற்று நிலைமை காரணமாக அனுசரணையாளர்கள் ஒருவரை கண்டுபிடிப்பது சிரமம் என்பதாலும் பதிவு செய்யப்பட்ட இலக்கத் தகடுகளை பெற்றுக் கொடுப்பது மற்றும் மேலங்கி ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான பணத்தை ஒதுக்குவது தொடர்பாக நகர சபை திறைசேரியிடம் வேண்டுகோள் வினவ முடிவு செய்யப்பட்டது.

**ஆரியரத்ன கனேகொட...**
(மத்திய கொழும்பு குறூப் நிருபர்)

# பாரம்பரிய கலைகளுக்கு புத்துயிரூட்டும் திட்டம்

ஒவ்வொரு மனிதனும் தனது இனத்துக்குரிய தனித்துவ அடையாளங்களைாக திகழும் பாரம்பரிய வரலாற்று ரீதியான மரபுகளை பேணிப் பாதுகாத்து அதனை அடுத்த தலைமுறையினருக்கு கற்றுக் கொடுப்பது அவனுக்குரிய கடமையும் பொறுப்புமாகும்.

அந்த வகையில் எதிர்கால சமூகத்தின் நன்மை கருதி ஒவ்வொரு சமூகத்தினதும் மறைந்து போயுள்ள பாரம்பரிய மரபு ரீதியான பண்பாட்டுக் கலைகளுக்கு புத்துயிர் கொடுத்து அதனை ஊக்குவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் அமைச்சின் கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





இத்திட்டத்தின் அடிப்படையில் கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் 'தொலஸ் மகே பஹன' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் வளர்ந்து வரும் இளம் கலைஞர்களை பாரம்பரிய மரபு ரீதியான கலைகளின் பால் ஈர்க்கச் செய்யும் நோக்கத்தின் கீழ் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

தற்பொழுது ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் மறைந்து போயுள்ள பாரம்பரிய மரபு ரீதியான கலைகளை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு பயிற்சி செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இத்திட்டம் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைவாக இஸ்லாமியர்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான சீனடி மற்றும் சிலம்படி தொடர்பாக அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கான பயிற்சி செயலமர்வை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச கலாசார பிரிவின் ஏற்பாட்டில் அண்மையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி ஏ.கே.ரொசின் தாஜ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவப்பிரியா பிரசாந்தன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.எம்.முக்தார் ஹீ ஸை யின் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச கலாசார பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இத்திட்டத்தின் வளவாளர்களாக உலக சீனடி சம்மேளனம் மற்றும் இலங்கை சிலம்பம் சம்மேளனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்றுவிப்பாளர்களான கலைஞர் எம்.எம்.றியாசுடீன், கலைஞர் ஐ.எல்.எம்.நப்றீஸ் ஆகியோர் பங்கேற்று வருகின்றனர். இதன் போது இஸ்லாமியர்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான சீனடி மற்றும் சிலம்பு கலை தொடர்பாக தெளிவான செயன்முறை மற்றும் விளக்கங்களை அளித்தனர்.

ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் மறைந்து போயுள்ள பாரம்பரிய கலைகளை அடுத்து வரும் இளம் தலைமுறையினரிடம் கையளிக்கும் வகையில் இத்திட்டம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஐ.ஏ.ஸிறாஜ்...**
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)


# டெல்டா போன்று பாரதூரமான பாதிப்பு ஒமிக்ரோனில் இல்லை!

## -மருத்துவ நிபுணர்கள் தரும் ஆறுதல் தகவல்

ஒரு வைரஸ் நோய்த் தொற்றின் மிகவும் ஆபத்தான அம்சம் அதன் தீவிரத் தன்மை. ஒரு வைரஸ் மிகவும் பரவக் கூடியதாக இருந்தாலும், அதன் வீரியம்தான் மக்களிடையே இறப்பு வீதத்தை வரையறுக்கிறது. கொவிட் 19 ஐ பொறுத்தவரை, டெல்டா மாறுபாடு உலகம் முழுவதும் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் ஆபத்தான தொற்றுநோயாக மட்டுமில்லாமல், அதிக காய்ச்சல், தொடர்ந்து இருமல், மூச்சுத் திணறல், மார்பு வலி மற்றும் குறைந்த இரத்த ஒக்ஸிஜன் அளவுகள் வரை கடுமையான அறிகுறிகளைத் தூண்டுகிறது. இப்போது, கொவிட்டின் ஒமிக்ரோன் மாறுபாட்டின் தோற்றத்துடன், தீவிரத்தன்மை, பரவும் தன்மை மற்றும் அதன் அறிகுறிகளில் சில மாற்றங்கள் நிபுணர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

புதிய திரிபு ஸ்பைக் புரதத்தில் 30 க்கும் மேற்பட்ட பிறழ்வுகளைக் கொண்டிருப்பதால், இது வேறு எந்த முந்தைய விகாரத்தையும் போலல்லாமல், வல்லுநர்கள் தடுப்பூசி நோய் எதிர்ப்பு சக்தியிலிருந்து தப்பிக்க முடியும் என்று நம்புகிறார்கள், அதனால்தான் இது காட்டுத்தீ போல் வேகமாக பரவுகிறது. இருப்பினும், இப்போது வரை, உலகம் முழுவதும் தொற்றுகள் 'இலேசானதாக' உள்ளன. உலக சுகாதார அமைப்பு (WHO) SARSCoV2 இன் புதிய மாறுபாடு, ஏற்கனவே வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களை எளிதில் பாதிக்கலாம் என்று பரிந்துரைக்கிறது. இருப்பினும், டெல்டா மாறுபாட்டுடன் ஒப்பிடும் போது இந்த நோய் இலேசானதாக இருக்கும் என்றும் உலகளாவிய சுகாதார நிறுவனம் கூறுகிறது.



ஒமிக் ரோன் மாறுபாடு தென்னாபிரிக்காவில் முதன்முதலில் கண்டறியப்பட்ட போது, தென்னாபிரிக்க மருத்துவ சங்கத்தின் தலைவரும், ஒமிக் ரோன் மாறுபாட்டைக் கண்டுபிடித்த முதல் நபருமான டொக்டர் ஏஞ்சலிக் கோட்ஸி, இந்த நோய் இலேசானது மற்றும் மக்கள் பயப்படத் தேவையில்லை என்று கூறினார். பாதிக்கப்பட்டவர்கள் எந்த கடுமையான அறிகுறிகளையும் தெரிவிக்கவில்லை, மேலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அல்லது குறைந்த ஒக்ஸிஜன் அளவு போன்ற பிரச்சினைகளும் இல்லை. இருப்பினும் ஒமிக் ரோன் மாறுபாட்டின் சில அறிகுறி களை நிபுணர்கள் பரிந்துரைத்து உள்ளனர்.

முந்திய மாறுபாடுகளைப் போலவே, கொவிட் ஒமிக் ரோன் சோர்வு அல்லது தீவிர சோர்வுக்கு வழி வகுக்கும். ஒரு நபர் அதிக சோர்வாக உணரலாம், குறைந்த ஆற்றலை அனுபவிக்கலாம் மற்றும் ஓய்வெடுக்க ஒரு வலுவான ஆசை இருக்கலாம், இது அன்றாட நடவடிக்கைகளை சீர்குலைக்கும். இருப்பினும், சோர்வு மற்ற காரணங்கள் மற்றும் உடல்நலப் பிரச்சினைகளால் ஏற்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். உங்கள் நிலையை உறுதிப்படுத்த உங்களை பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

தென்னாபிரிக்க மருத்துவரான ஏஞ்சலிக் கோட்ஸியின் கூற்றுப்படி, ஒமிக் ரோனால் பாதிக்கப்பட்ட நபர்கள் தொண்டூ புண்ணுக்கு பதிலாக தொண்டையில் அரிப்பு ஏற்படுவதாக புகார் கூறுகின்றனர். இது அசாதாரணமானது. இரண்டும் ஓரளவிற்கு ஒரே மாதிரியானதாக இருந்தாலும், முந்தியது தொண்டை எரிச்சலுடன் அதிகம் தொடர்புபடுத்தலாம், பிந்தியது மிகவும் வேதனையாக இருக்கும்.

தற்போதைய மாறுபாடு மிதமான உடல் வெப்பநிலையைத் தூண்டுகிறது, அது தானாகவே சரியாகி விடுகிறது என்று கோட்ஸி கூறுகிறார்.

புதிய ஒமிக் ரோன் மாறுபாடு இரவில் வி யர்வையை ஏற்படுத்தலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இரவில் வியர்த்தல் ஏற்படுகிறது, நீ ங்கள் குளிர்ந்த இடத்தில் படுத்திருந்தாலும் உங்கள் உடைகள் மற்றும் படுக்கைகள் ஈரமாகி விடும். இதனுடன் உடல் வலியும் ஏற்படலாம்.

ஒமிக் ரோன் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வரட்டு இருமலாலும் பாதிக்கப்படலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். முந்திய வி காரங்களிலும் இது மிகவும் பொதுவான அறிகுறிகளில் ஒன்றாகும். வரட்டு இருமல் என்பது மூச்சுக்குழாய்களின் தொண்டையில் ஏதேனும் எரிச்சலை நீக்குவதற்கு ஒலியை கட்டாயப்படுத்தி ஏற்படுத்துவதாகும்.

புதிய ஒமிக் ரோன் மாறுபாடு இலேசான அறிகுறிகளை மட்டுமே தூண்டுகிறது என்று சான்றுகள் தெரிவிக்கின்றன. முந்திய வகைகளின் அறிகுறிகளுக்கு மாறாக, ஒமிக் ரோன் மாறுபாடு வாசனை அல்லது சுவையை இழப்பதற்கான அறிகுறிகளைக் காட்டவில்லை என்று நம்பப்படுகிறது. மேலும் மூக்கில் அடைப்பு போன்ற அறிகுறிகள் எதுவும் இல்லை.

# சர்வதேச செய்திகள்

## தென்னாபிரிக்க ஜனாதிபதி ரமபோசாவுக்கு கொரோனா



தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசாவுக்கு கொரோனா நோய்த் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி டி கிளார்க்கின் நினைவஞ்சலி நிகழ்ச்சிக்குச் சென்றதைத் தொடர்ந்து, அவருக்கு மிதமான அறிகுறிகள் தென்பட்டதாக தென்னாபிரிக்க ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது.

ரமபோசாவுக்கு ஓமிக்ரோன் வைரஸ் தொற்றியுள்ளதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

அவர் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளதாகவும் தற்போது தென்னாபிரிக்க தலைநகர் கேப் டவுனில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவருக்குப் பதிலாக உப ஜனாதிபதி டேவிட் எம்புஸா ஜனாதிபதி பொறுப்புகளைத் தற்காலிகமாகக் கவனித்துக்கொள்வார்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான நைஜீரியா, ஐவரிகோஸ்ட், கானா மற்றும் செனகல் நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட ரமபோசா கடந்த புதன்கிழமையே நாடு திரும்பினார். தாம் பயணித்த அனைத்து நாடுகளினதும் பிரதிநிதிகள் மீது கொரோன சோதனை மேற்கொள்ளப்பட்டதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

உலகெங்கும் வேகமாக பரவிவரும் ஓமிக்ரோன் திரிபு தென்னாபிரிக்காவிலேயே முதல் முறை கண்டுபிடிக்கப்பட்டது.

## தாய்வானுடன் உறவை துண்டித்த நிகரகுவாவுக்கு சீனா அன்பளிப்பு



சீனாவுக்கு ஆதரவாக தாய்வானுடனான இராஜதந்திர உறவுகளை துண்டித்துக் கொண்ட சில நாட்களிலேயே நிகரகுவா நாட்டுக்கு சீனாவிடம் இருந்து ஒரு மில்லியன் கொவிட் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன.

இந்த அன்பளிப்புடன் அரச பிரதிநிதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்த மத்திய அமெரிக்க நாட்டுக்கு திரும்பியுள்ளனர்.

முதல் கட்டமாக 200,000 டோஸ் சைனோபார்ம் தடுப்பூசிகளை ஏற்றிய எயார் சைனா விமானம் தரையிறங்கும் காட்சியை உள்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. சீனா இராஜதந்திர உறவை ஏற்படுத்தியதற்காக அதிகாரிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

"நிகரகுவா மக்களுக்கு ஒரு மில்லியன் தடுப்பூசிகளை அன்பளிப்பாக நாம் பெற்றிருக்கிறோம் என்ற நல்ல செய்தியுடனேயே நாம் திரும்பியுள்ளோம்" என்று நிகரகுவா ஜனாதிபதி டனியேல் ஓர்டெகாவின் மகனும் அவரது ஆலோசகருமான லோரியானோ ஓர்டேகா தெரிவித்துள்ளார்.

நிகரகுவாவின் வயதான மக்களில் 98 வீதத்தினர் மாத்திரமே முழுமையாக தடுப்பூசி பெற்றுள்ளனர். ஆனால் 67 வீதமானவர்கள் குறைந்தது ஒரு டோஸை பெற்றுள்ளனர்.

## இந்தியாவின் அழகிக்கு பிரபஞ்ச அழகிப் பட்டம்



இஸ்ரேலில் இடம்பெற்ற 70ஆவது பிரபஞ்ச அழகிப் போட்டியில் இந்திய அழகி ஹர்னாஸ் சாந்து வாகை சூடியுள்ளார். 21 ஆண்டுகளுக்கு பின்னரே இந்தியா இந்தப் பட்டத்தை வென்றுள்ளது.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக இந்த அழகிப் போட்டியை புறக்கணிப்பதற்கான அழுத்தங்கள் வந்த நிலையிலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலின் எய்லாட் நகரில் இந்தப் போட்டி நடைபெற்றது.

2020ஆம் ஆண்டுக்கான பட்டம் வென்றவரான மெக்சிகோவை சேர்ந்த பிரபஞ்ச அழகி ஆண்ட்ரியா மேசா, ஹர்னாஸ் சாந்துவுக்கு அழகிப் பட்டத்தை வென்றதற்கான கிரீடத்தைச் சூட்டினார்.

இதற்கு முன் இந்தியாவுக்காக 2000ஆவது ஆண்டில் லாரா தத்தா பிரபஞ்ச அழகிப் பட்டத்தை வென்றார். அதற்கு முன் சுஸ்மிதா சென் இந்தப் பட்டத்தை 1994இல் வென்றிருந்தார்.

21 வயதான சாந்து பொது நிர்வாக முதுகலைப் பட்டம் கற்று வருகிறார். 2017இல் சண்டிகர் அழகிப் பட்டத்தை வென்றவர் ஹர்னாஸ் சாந்து. மேலும் 2021ஆம் ஆண்டில் லிவா மிஸ் திவா யுனிவர்ஸ் பட்டத்தையும் வென்றுள்ளார்.

17 வயது முதலே மொடலிங் செய்து வரும் ஹர்னாஸ் சாந்து, சில பஞ்சாபி மொழிப் படங்களிலும் நடித்துள்ளார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளன. இவரது குடும்பம் சண்டிகரில் வசிக்கிறது.

இப்போட்டியில் பராகுவேவைச் சேர்ந்த நாதியா பெர்ரெய்ரா (வயது 22) இரண்டாமிடத்தையும், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த லலேலா ஸ்வான் (வயது 24) மூன்றாமிடத்தையும் பிடித்தனர்.

தேர்வாளர்கள் குழுவில் இந்தியாவைச் சேர்ந்த 2015ஆம் ஆண்டின் மிஸ் யுனிவர்ஸ் இந்தியா பட்டம் வென்ற ஊர்வசி ரவுதாலா இடம் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா சூறாவளி: உயிரிழப்பு உயர்வு; அவசர நிலை அறிவிப்பு



அமெரிக்காவின் கென்டக்கி மாநிலத்தை தாக்கிய சக்திவாய்ந்த சூறாவளியால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 100ஐ தாண்டக்கூடும் என்று அந்த மாநில ஆளுநர் கூறியிருப்பதோடு, உயிர் தப்பியோரை கண்டுபிடிக்கும் வாய்ப்பும் குறைந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

மாநில வரலாற்றில் இடம்பெற்ற பேரழிவு கொண்ட சூறாவளியாக இது உள்ளது என்று குறிப்பிட்டிருக்கும் அதன் ஆளுநர் அன்டி பெஷயர், குறைந்தது 80 பேர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

"சூறைக்காற்று நேரடியாக தாக்கிய பகுதிகளில் எதுவும் எஞ்சியிருக்கவில்லை" என்று அவர் கூறினார்.

இந்த சூறாவளியால் ஏனைய மாநிலங்களில் மேலும் பதினான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜனாதிபதி ஜோ பைடன், கென்டக்கியில், தேசிய அவசர நிலையை அறிவித்திருப்பதோடு மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மத்திய அரசின் உதவிகளை வழங்க உத்தரவிட்டுள்ளார்.

மீட்புப் பணியாளர்கள் இடிபாடுகளை அகற்றி உயிர் தப்பியோரை தேடி வருகின்றனர். தவிர குடியிருப்பாளர்களுக்கு குடிநீர் மற்றும் மின்பிறப்பாக்கி வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. 300க்கும் அதிகமான தேசிய காவல் படையைச் சேர்ந்தவர்கள் வீடு வீடாக சென்று இடிபாடுகளை அகற்றி வருகின்றனர்.

"உயிர்தப்பியவர்களை கண்டுபிடிக்கும் அதிசயம் ஒன்றை நம்பி நாம் தொடர்ந்து இயங்கி வருகிறோம்" என்று மோசமாக பாதிக்கப்பட்ட இடங்களில் ஒன்றான மேய்பீல்டுக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் தெரிவித்தார்.

எனினும் கடந்த சனிக்கிமை காலை தொடக்கம் உயிருடன் எவரும் காப்பற்றப்படவில்லை.

இந்த சூறாவளி பயணித்த 227 மைல் தடத்தின் அனைத்து இடங்களும் அழிவடைந்திருப்பதாக ஆளுநர் கூறினார். ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்திருக்கும் நிலையில் அதன் சரியான எண்ணிக்கை இன்னும் கணக்கிடப்படவில்லை.

முன்னதாக 1925 மார்ச் மாதம் மிசூரியில் 219 மைல்கள் பயணித்த சூறாவளியே அமெரிக்காவில் நீண்ட தூரம் பயணித்த சூறாவளியாக இருந்தது. இதில் 695 பேர் உயிரிழந்தனர். எனினும் வசந்தம் அல்லது கோடை காலத்திற்கு அப்பால் இவ்வாறான இயற்கை அனர்த்தம் மிக அரிதானதாகவே பார்க்கப்படுகிறது.

மேய்பீல்ட் நகரில் தீயணைப்பு நிலையம் மற்றும் நகர மண்டபம் சூறாவளியால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

இதில் 110 ஊழியர்கள் உள்ளே இருக்க சூறாவளி தாக்கியதாக நம்பப்படும் மெழுகுவர்த்தி தொழிற்சாலையில் எட்டு பேர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் எட்டுப் பேர் தொடர்ந்து காணாமல்போன நிலையில் உள்ளனர்.

அமேசன் களஞ்சியம் ஒன்று உடைந்த நிலையில் இல்லினொயிஸில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலர் காணாமல்போயிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

டென்னசியில் நால்வர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதோடு அர்கான்சாஸ் மாநிலத்தில் இருவர் பலியாகி உள்ளனர். இதில் ஒருவர் முதியோர் பராமரிப்பு இல்லம் ஒன்று பகுதி அளவு உடைந்ததில் பலியாகியுள்ளார். மிசுரியில் ஒருவர் உயிரிழந்திருப்பது உறுதியாகியுள்ளது.

இந்த சூறாவளிகளுக்கு காலநிலை மாற்றம் தாக்கம் செலுத்தியுள்ளதா என்பது பற்றி ஆய்வு செய்யும்படி சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனத்தை ஜனாதிபதி பைடன் கேட்டுள்ளார்.

அமெரிக்காவின் 6 மாநிலங்களில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் இந்த சூறாவளிகள் அடுத்தடுத்து தாக்கி இருந்தன.

## டாடா மோட்டர்ஸ் நிறுவனம் ஒரு பில். டொலர் முதலீடு




இந்தியாவின் மிகப்பெரிய டிரக் தயாரிப்பாளர்களான டாடா மோட்டர்ஸ் நிறுவனம் மின்சார வாகனங்களுடன் வர்த்தக வாகன வியாபாரத்திற்கான திட்டத்தை மீளமைப்பதற்கு எதிர்வரும் 4–5 ஆண்டுகளில் ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான முதலீட்டை மேற்கொள்ளவுள்ளது.

பயணிகள் மின்சார வாகன தயாரிப்பில் முன்னிலையில் இருக்கும் நிறுவனம் வர்த்தக வாகனத்தின் புதிய யுகத்திலும் எதிர்கால மின்சார வாகனங்களின் வடிவமைப்புகளை வழங்க எதிர்பார்த்துள்ளது. புதைபடிவ எரிபொருள் வாகனங்கள் மின்சார வாகனங்களாக மாற்றியமைக்கப்படும்போது இந்த வாகனம் கடந்த காலத்தில் இருந்து குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தி சி.என்.ஜி., எல்.என்.ஜி. மற்றும் டீசல் பவட்ரைன்ஸ் வசதியை வழங்க முடியுமாக வடிவமைக்கப்படும்.

டாடா மோட்டர்ஸ் நிறுவனம் பல மாநிலங்களிலும் இதுவரை வழங்கி இருக்கும் 650க்கும் அதிகமான பஸ் வண்டிகள், வீதிகளில் 20 மில்லியன் கிலோமீற்றர் மின்சார வாகன செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரு கொரியாக்களின் போரை முடிவுக்கு கொண்டுவர ஒப்புதல்



அமெரிக்கா, சீனா, வட கொரியா ஆகியவை இரு கொரியாக்களுக்கும் இடையிலான போரை அதிகாரபூர்வமாக முடிவுக்குக் கொண்டுவரவுள்ளன.

அதற்குக் கொள்கை அளவில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் கூறியுள்ளார். அதனை நிறைவேற்றத் தமது அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றார் அவர்.

எனினும் வட கொரியாவின் நிபந்தனைகளால் இந்த பேச்சுவார்த்தைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

கொரிய தீபகற்பம் இரண்டாக பிளவுபட்ட நிலையில் கொரியப் போர் 1950 தொடக்கம் 1953 வரை நீடித்தது.

வட மற்றும் தென் கொரியாக்கள் முறையே சீனா மற்றும் அமெரிக்காவின் ஆதரவுடன் தொடர்ந்து போர் சூழலிலேயே இருந்து வருகின்றன. இதனால் இரு தரப்புக்கும் இடையே பதற்ற நிலை நீடிக்கிறது.

இந்தப் போரை உத்தியோகபூர்வாக முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் தென் கொரிய ஜனாதிபதி தொடர்ந்து கடுமையாக முயன்று வருகின்றபோதும் அது சிக்கலான ஒன்றாக நீடித்து வருகின்றது.

## ஜனநாயக மாநாட்டுக்கான அழைப்பை பாக். நிராகரிப்பு



அமெரிக்காவின் ஜனநாயகத்திற்கான மாநாட்டில் பங்கேற்க விடுத்த அழைப்பை பாகிஸ்தான் நிராகரித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த டிசம்பர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் மெய்நிகர் முறையில் இடம்பெற்ற இந்த மாநாட்டிற்கு அமெரிக்கா நூறுக்கும் அதிகமான நாடுகளுக்கு அழைப்பு விடுத்திருந்த போதும், சீனா மற்றும் மேலும் சில நாடுகள் அதில் சேர்க்கப்படவில்லை.

அமெரிக்காவின் அழைப்புக்கு நன்றி தெரிவித்திருக்கும் பாகிஸ்தான், எதிர்காலத்திற்கான வாய்ப்புகளுக்காக பரந்த அளவிலான விவகாரங்களுடன் ஈடுபட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளது என்று அந்நாட்டின் வெளிவிவகார அலுவலகத்தை மேற்கொள்காட்டி ஜியோ நியுஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனநாயத்தை பலப்படுத்துவதற்கு பாகிஸ்தான் உறுதியுடன் இருப்பதாக குறிப்பிட்டிருக்கும் அந்நாட்டு வெளிவிவகார அலுவலகம், ஊழலுக்கு எதிரான செயற்பாடுகள், அனைத்து குடிமக்களினதும் மனித உரிமையை பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவதற்கு பரந்த அளவில் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த மெய்நிகர் மாநாட்டில் 100க்கும் அதிகமான அரசுகள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பல்டிக் கடலில் இரு சரக்கு கப்பல்கள் மோதி விபத்து



சுவீடன் கடற்கரைக்கு அப்பால் பல்டிக் கடலில் இரு சரக்குக் கப்பல்கள் மோதி ஒரு கப்பல் கவிழ்ந்த நிலையில் தீவிர தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்தில் குறைந்தது இருவர் நீரில் மூழ்கி இருலாமென அஞ்சப்படுவதாக சுவிடிஷ் கடல்சார் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

இதில் டென்மார்க்கில் பதிவு செய்யப்பட்ட கரின் ஹொயேஜ் என்ற கப்பலே கவிழ்ந்துள்ளது. மற்றைய கப்பல் பிரட்டிஷ் கொடியுடன் இருந்த ஸ்கொட் கரியர் என்ற கப்பலாகும்.

மிகக் குளிர்ந்த நீரில் அலறும் சத்தங்கள் கேட்டதாக சுவிடிஷ் கடல்சார் நிர்வாகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். "இங்கு மிகக் குளிர் மற்றும் இருண்டதாக உள்ளது. அந்த நீர் 4 செல்சியஸ் குளிராகவும் காற்று 6 செல்சியஸ் குளிராகவும் உள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கப்பல்கள் மோதியதற்கான காரணம் மற்றும் அவைகளில் என்ன இருந்தது என்பது உறுதி செய்யப்படவில்லை.

## இஸ்ரேலிய படை துப்பாக்கி சூடு: பலஸ்தீனர் உயிரிழப்பு



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படையினருடன் இடம்பெற்ற ஆயுத மோதலில் பலஸ்தீனர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நப்லுஸ் நகரின் ராஸ் அல் அயின் என்ற பகுதியில் நேற்று திங்கட்கிழமை ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையை அடுத்து தலையில் துப்பாக்கி குண்டு பாய்ந்த 33 வயதான ஜமீல் அல் கய்யால் என்பவரே கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

அந்தப் பகுதியில் இருந்து இஸ்ரேலிய படைகள் வெளியேறிய பின் இரத்தம் கொட்டிய நிலையில் கய்யால் தரையில் கிடக்கும் காட்சி ஒன்லைன் வீடியோக்களில் வெளியாகியுள்ளன.

படையினரின் உதவியோடு சிறப்புப் படையினர் நப்லுசில் சந்தேக நபர்களை கைது செய்ததாகவும் ஆயுதங்களை பறிமுதல் செய்ததாகவும் இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"தமது படை நடவடிக்கைகளை முடித்து சிறப்புக் படையினர் அங்கிருந்து வெளியேறும்போது, கலகக்காரர்கள் வெடிபொருட்களை வீசியும் சூடு நடத்தியும் உயிருக்கு ஆபத்து விளைவிக்க முயன்றனர்" என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது மேலும் இரு பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



# அரச சேவையாளர்களின் சம்பளத்தை 18,000 ரூபாவால் அதிகரிக்க வேண்டும்

## ஒன்றிணைந்த அரச சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை

**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

அரச சேவையாளர்களின் மாதாந்த சம்பளத்தை 18 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என, ஒன்றிணைந்த இலங்கை அரச சேவையாளர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை முன்வைத்துள்ளது. தொழிற்சங்க கூட்டமைப்பு ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் மாநாடு ஞாயிற்றுக்கிழமை (12) கல்முனையில் நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவிக்கும் பொழுதே தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த கோரிக்கையை முன்வைத்தனர். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம், இலங்கை அரசாங்க பொது சேவைகள் சங்கம், வடக்கு கிழக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம், விவசாய போதனாசிரியர்கள் தொழிற் சங்கம், கிழக்கு மாகாண சமூகசேவைகள், கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம், ஆகிய தொழிற் சங்கங்கள் இதில் கலந்து கொண்டன. தொடர்ந்து தொழிற்சங்க பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கும் போது, தற்போது நாட்டில் உள்ள அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அதிகளவில் உயர்ந்துள்ளன. எரிபொருள் விலை உயர்ந்து போக்குவரத்து செலவு அதிகரித்து விட்டது.




கேஸ்விலை , மாவிலை , அரிசி விலை என்பன உயர்ந்து பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியவசிய பொருட்களின் விலைகளும் அதிகரித்துவிட்டன. அனைத்தினதும் விலைகள் உச்சத்திற்கு சென்றுள்ளன .

எனவே அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 18,000 இற்கு குறையாத சம்பள அதிகரிப்பு ஒன்றினை 2022.01.01 இல் இருந்து வழங்குவதற்கு ஆவண செய்யுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# மூதூர் பள்ளிக்குடியிருப்பில் நடமாடும் மருத்துவ சேவை



**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியன இணைந்து முற்றிலும் இலவசமான சுதேச மருத்துவ நடமாடும் சேவை வெள்ளிக்கிழமை (10) திருகோணமலை மூதூர் பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற்ற இந் நடமாடும் வைத்திய சேவையில், வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ், எம்.எம்.பாத்திமா இஷாரா, எஸ்.தமிழரசி, எஸ்.நவரத்தினம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பிரசாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த நடமாடும் சேவையில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வருகை தந்து வைத்திய சிகிச்சைகளை பெற்று சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காடுகளை வெட்டிய குற்றச்சாட்டில் மூவர் கைது

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் அனுமதி இல்லாமல் காடுகளை வெட்டிய குற்றச்சாட்டில், மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேப்பங்குளம் பகுதியில் திங்கட்கிழமை (12) கிரவல் வெட்டுவதற்காக காடுகளை வெட்டி துப்புரவு செய்யும் போது,கிராமஉத்தியோகத்தருக்குவழங்கப்பட்ட தகவலையடுத்து குறித்த இடத்துக்கு விஷேட பொலிஸ் அதிரடி படையினர் வருகை தந்து காடுகளை வெட்டிக்கொண்டிருந்தமூன்றுசந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் மொரவெவ 10ஆம் கட்டை பகுதியைச்சேர்ந்த 45 வயதுக்கும் 52 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடிப்படையின் மொரவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். குறித்த சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

## மூதூர் நாணல்சேனை கிராம வீதி புனரமைப்பு

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உப்புக்காச்சிமடு நாணல்சேனை கிராம கரைச்சை வீதி அக்கிராம தோட்டக்காரர்களினதும் மற்றும் பொது மக்களினதும் பல வருட கால வேண்டுகோளுக்கிணங்க புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மழை காலங்களில் அழுக்கு நீர்களுடன் சேறும், சகுதியும் கொண்ட இவ்வீதியால் இக்கிராமத்து மக்கள் பயணிப்பதில் பெரும் கஸ்டப்பட்டு போக்குவரத்து செய்து வந்த நிலையில், மூதூர் பிரதேச சபை உறுப்பினர் நசார் பாத்திமா அகீதா, தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸின் கவனத்திற்கு கொண்டு வந்த நிலையில் தற்போது இவ்வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

# இந்து அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு

**(காரைதீவு குறூப் நிருபர் )**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், மண்முனை தென் எருவில் பற்று மற்றும் போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் களுவாஞ்சிகுடியில் இடம்பெற்றது.

இந்த கருத்தரங்கின் வளவாளர்களாக இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீமத் சுவாமி தக்சஜானந்தாஜி மற்றும் அம்பாறை மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. ஜெயராஜி ஆகியோர் கலந்து கொண்டு அறநெறி பாடசாலை மூலம் மேற்கொள்ள வேண்டிய செயற்திட்டங்கள் ஒழுக்க விழுமிய பண்புகள் தொடர்பாக கருத்துரை வழங்கியதுடன், தியானம் மூச்சுப்பயிற்சி போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக் கருத்தரங்கின் போது மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சங்கத்தினரால் புத்தக கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

# அகில இலங்கை முஸ்லிம் லீக் ஏற்பாட்டில் பாராட்டு நிகழ்வு

**(ஒலுவில் கிழக்கு தினகரன்,பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)**

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இவ்வாண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பாராட்டும் நிகழ்வு, சனிக்கிழமை (11) சம்மேளனத்தின் அக்கரைப்பற்று மாவட்டக் காரியலாயத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் தலைவரும்,ஒய்வு பெற்ற கிராம உத்தியோகத்தருமான எம்.எம். அஜ்வத் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசியத் தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பை பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் குடும்ப உறுப்பினர்களில் இருந்து இவ்வாண்டு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மற்றும் பாடசாலை மட்டத்தில் விசேட திறமை காட்டிய மாணவர்கள் இதன்போது பதக்கம் அணிவித்து நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



இந்நிகழ்வில் இறையடி எய்திய அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் பெண்கள் பிரிவிற்கான மாவட்ட ஆலோசகரும்,ஓய்வு பெற்ற ஆசிரியையுமான மர்ஹூம் றசீனா உம்மா உதுமாலெப்பைக்கு விசேட துஆப்பிரார்த்தனையை கிழக்கு இலங்கை அரபுக் கல்லூரியின் பொதுச் செயலாளர் மௌலவி யூ.எம். நியாஸியினால் நிகழ்த்தப்பட்டது. இதன்போது அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய தலைவர் எம்.ஐ.றியாஸ்,செயலாளர் எம்.ஐ.சிறாஜுதீன்,பொருளாளர் கே.எல்.சுபையிர்,ஊடகப்பணிப்பாளராக ஐ.அஹமட் ஸிறாஜ் உட்பட 26 பேர் பதவி வழி உத்தியோகத்தர்கள் இதன்போது அறிவிக்கப்பட்டு சபையில் அனுமதி பெறப்பட்டதுடன், போசகராக தொடர்ந்தும் நீதிபதி அல்ஹாமிழ் என். எம்.அப்துல்லா செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிவலய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் அநீதியானது

## கல்முனை பிராந்திய கல்வியியலாளர்கள் தெரிவிப்பு

கிழக்கு மாகாண கல்வி திணைக்களமானது ஆசிரியர் சமப்படுத்தல் 2022 என்ற பெயரில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் தமிழ் மொழி மூலம் (பதிலீடு), மேலதிகம் என்ற அடிப்படையில் இம்மாதம் 06 ம் திகதி இணைய வழியாக வெளியிட்ட இடமாற்ற பட்டியலில் ஏற்கனவே வெளி வலயங்களில் சேவையாற்றிய ஆசிரியர்கள் பலரின் பெயர்கள் மீண்டும் இவ் வெளிவலய சேவை பட்டியலில் உள்வாங்கப்பட்டு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது மிகவும் அநீதியானதும், அடிப்படை உரிமையினை மீறும் செயலாகும் என கல்வியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாண கல்வி திணைக்களமானது ஆசிரியர் சமப்படுத்தல் என்ற பெயரில் மேற்கொள்ளும் இந் நடவடிக்கையானது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பிரதேசங்களுக்கு ஆசிரியர்களை வழங்குவது மாகாண கல்வித் திணைக்களத்தின் பணியாகும். ஆனாலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஏற்கனவே தமது சேவை காலத்தினுள் பல வருட வெளிவலய சேவையினை பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்களின் பெயர்களும் உள்வாங்கப்பட்டுள்ளமை மிகவும் கவலையளிக்கும் விடயமாகும்.

இருந்தபோதிலும், இதுவரையில் வெளிவலய சேவையினை பூர்த்தி செய்யாத பல ஆசிரியர்களினுடைய பெயர்கள் இப்பட்டியலில் உள்வாங்கப்பட்டு இருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. ஆனாலும் தமது சேவை காலத்தினுள் இதுவரையில் வெளி வலய சேவையினை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் பலர் அதிபர்களின் ஒத்துழைப்புடன் பாடசாலைகளில் ஒளிந்திருப்பதனை மாகாணக் கல்வித் திணைக்களம் அறியாமல் இருப்பது வேதனைக்குரியது. எனவே கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமானது இதுவரையில் வெளிவலய சேவையினை பூர்த்தி செய்யாத, பல வருடங்களாக ஒரே பாடசாலையில் அல்லது ஒரே வலயத்தில் தொடர்ச்சியாக எவ்வித இடமாற்றமுமின்றி கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் தரவுகளினை ,உடனடியாக வலயக்கல்வி அலுவலகங்களினூடாக பெற்றுக் கொள்வதுடன் இவ்வாறு மறைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றவர்களினுடைய பெயர்களை இவ்விடமாற்றப் பட்டியலில் உள்வாங்குவதன் மூலம் இவ் விடமாற்றத்தினை மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியும் என கல்வியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 04 எரிவாயு அடுப்புகள் வெடிப்பு

**கல்குடா தினகரன் நிருபர்**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களில் நான்கு எரிவாயு அடுப்புகள் வெடித்துள்ளதாக, வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் இரண்டு எரிவாயு அடுப்புகள், ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பகுதியில் தலா ஒரு கேஸ் அடுப்புகள் என நான்கு எரிவாயு அடுப்புகள் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை வெடித்து சேதமாகியுள்ளன.

இந்த நிலையில் குறித்த வீட்டில் இருந்தவர்கள் எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும், அடுப்புக்கள் மாத்திரமே வெடித்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.



எரிவாயு அடுப்புக்கள் அண்மைக்காலமாக நாடளாவிய ரீதியில் வெடிப்பதால் மக்கள் அவதானமாகவும், முன் எச்சரிக்கையுடனும் இருந்தமையால் உயிர் பாதிப்புக்கள் இடம்பெறாத வண்ணம் காணப்படுகின்றது.

# சந்தனவெட்டை கிராம மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை

**தோப்பூர் குறூப் நிருபர்**

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சந்தனவெட்டை கிராம மக்கள் குடிநீர் வசதியில்லாமல் இப்பகுதி மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் நிலையில், குறித்த கிராம மக்களை ஜனநாயக இடதுசாரிகள் கட்சியின் திருகோணமலை மாவட்ட மகளிர் அமைப்பாளர் திருமதி. றயிஸா றியாஸ் ஞாயிற்றுக்கிழமை (12) சந்தித்து பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டார்.

சந்தனவெட்டை கிராமத்தில் 93 தமிழ் , முஸ்லிம் குடும்பங்கள் வசித்து வருவதாகவும், தாங்கள் யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டாலும் இன்னும் தமக்கான குடிநீர் வசதிகள் ஏற்படுத்தி தரப்படவில்லை என மக்கள் தமது கோரிக்கையை மகளிர் அமைப்பாளரிடம் முன்வைத்தனர்.



அத்தோடு நாளாந்த குடிநீர் தேவையின் போதும் ,அத்தியவசிய தேவைகளுக்காகவும் குடிநீரை பெறுவதில் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டினர். குடிநீரை பெறுவதற்கு சுமார் 04 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள அம்மன் நகர், அறபா நகர் கிராமங்களுக்கு செல்ல வேண்டும் எனவும் மக்கள் இதன்போது தெரிவித்தனர்.

இது விடயத்தில் தமது கட்சியின் தலைவரும்,நீர் வழங்கள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார அவர்களிடம் பேசி குடிநீர் பிரச்சினையை நிவர்த்தி செய்துதர தான் நடவடிக்கை மேற்கொள்வதாக ஜனநாயக இடதுசாரிகள் கட்சியின் திருகோணமலை மாவட்ட மகளிர் அமைப்பாளர் சந்தனவெட்டை கிராம மக்களிடம் வாக்குறுதியளித்தார்.

# அரச விருது பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

**(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)**

கவிதாலய கலை இலக்கிய மண்டல பேரவையின் ஏற்பாட்டில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2021இல் சாஹித்திய மண்டல சான்றிதழ் பெற்ற எழுத்தாளர் பிரதி கல்வி பணிப்பாளர் அ.ஸ.அகமது கியாஸ், கலாபூஷண விருதுபெற்ற கவிஞர் சொல்லண்பன் நசுறுத்தீன், அரச வானொலி விருதுபெற்ற ஊடகவியலாளர் கலைப்பிறை ஜே.வஹாப்தீன் ஆகியோர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (12) அட்டாளைச்சேனை கவிதாலய கலை இலக்கிய மண்டல மண்டபத்தில் இடம்பெற்றது.

கவிதாலய கலை இலக்கிய மண்டல பேரவையின் தலைவர் கலாபூஷணம் ஆசுகவி அன்புடீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா பிரதம அதிதியாகவும், ஓய்வுநிலை வெளிநாட்டு தூதரக அதிகாரி எம்.சிறாஜ் அஹமத், தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் துறை தலைவர் விரிவுரையாளர் கலாநிதி எஸ்.எம்.ஐயூப், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் ஒய்வு நிலை மாவட்ட பணிப்பாளர் அக்கரையூர் அப்துல் குத்தூஸ், நில அளவையாளர் கலைநேசன் ஏ.எல்.முகைதீன் பாவா, சமூகசேவகர் பி.ரி.செய்னுலாப்தீன் கவிதாயினி கே.நப்லா, கலைஞர் கே.எல்.நஜாத் ,கவிஞர் சாஜித் உட்பட கவிதாலய கலை இலக்கிய மண்டல உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



இதன் போது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் எழுத்தாளர் பிரதி கல்விப் பணிப்பாளர் அ.ஸ.அகமது கியாஸ், கவிஞர்சொல்லண்பன்நசுறுத்தீன், ஊடகவியலாளர் கவிஞர் ஜே.வஹாப்தீன் ஆகியோர்களை பாராட்டி அதிதிகளினால் பொன்னாடை போர்த்தி பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கிழக்கின் குரல்



# காரைதீவு பிரதேச சபை வரவுசெலவு திட்டம் வெற்றி

## ஆதரவாக 7வாக்குகள், எதிராக 5 வாக்குகள்

(காரைதீவு குறூப் நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்த காரைதீவு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டு (2) மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட அமர்வு திங்கட்கிழமை (13) சபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச சபையில் மொத்தமாக 12 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் ஏழு தமிழ் உறுப்பினர்களும் ஐந்து முஸ்லிம் உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

வரவுசெலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 7 வாக்குகளும், எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 2 மேலதிக வாக்குகளால் வரவுசெலவுத் திட்டம் வெற்றிபெற்றது.

இக்கூட்டத்தில் தவிசாளர் உரையைத் தொடர்ந்து 11 உறுப்பினர்களினதும் வரவுசெலவுத் திட்ட கருத்துரைகள் நிகழ்த்தப்பட்டன.

அதன்பின்பு 12 மணியளவில் 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை தவிசாளர் கி.ஜெயசிறில் முன்மொழிந்தார். அதனை ஸ்ரீல. மு.காங்கிரசின் மூத்த உறுப்பினர் எம்.எச்.எம்.இஸ்மாயில் வழிமொழிந்தார். எதிர்ப்புகள் இருக்கிறதா எனக் கேட்டபோது உப தவிசாளர் எ.எம்.ஜாகீர் எதிர்ப்பதாக கூறினார்.

அதனையடுத்து வாக்கெடுப்பிற்கு தவிசாளர் பணித்தார். சபைச் செயலாளர் அ.சுந்தரகுமார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். பகிரங்கவாக்கெடுப்பாக நடாத்தப்படவேண்டும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெற்றது.



வரவுசெலவுத் திட்டத்திற்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான கி.ஜெயசிறில் (தவிசாளர்), ச.நேசராசா, த.மோகனதாஸ், சி.ஜெயராணி, ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் உறுப்பினர்களான எம்.எச்.எம்.இஸ்மாயில், என்.எம்.எம். றனீஸ், காரைதீவு சுயேச்சைக்குழு உறுப்பினர் சதாசிவம் சசிகுமார் ஆகியோர் வாக்களித்தனர்.

எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களான எ.எம்.ஜாகீர் (உப தவிசாளர்), கே.ஜெயதாசன், சுயேச்சைக்குழு உறுப்பினர்களான எ.ஆர். எம்.பஸ்மீர், கே.குமாரசிறி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ்.ஜலீல் ஆகியோர் வாக்களித்தனர்.

அதன்படி ஆதரவாக 7 வாக்குகளும் எதிராக 5வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஆதலால் 2 மேலதிக வாக்குகளால் வரவுசெலவுத்திட்டம் வெற்றிபெற்றது. அதனையடுத்து தவிசாளரின் பதிலுரை இடம்பெற்றது.

சபையில் பார்வையாளர்களாக த.தே.கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன், முன்னாள் காரைதீவு பிரதேச சபை உறுப்பினரான எம்.காண்டீபன், கனடா சமுகசெயற்பாட்டாளர் மதி, மு.கா.மாளிகைக்காடு அமைப்பாளராக எம்.எச்.எம்.நாசர், மதியுரைக்குழு உறுப்பினர்கள் வெ.ஜெயகோபன், ச.சுரேஸ்குமார் ஆலய தர்மகர்த்தாக்கள் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சமகாலத்தில் சபைக்கு வெளியே ஆதரவாளர்கள் பாரிய பட்டாசுகளை வெடிக்கவைத்து வெற்றியை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

# வீதிகளில் குப்பைகளை வீசுவோர் மீது நடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள முக்கிய கேந்திர நிலையங்கள் மற்றும் வீதிகளில் குப்பைகளை வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

வீடுகளில் அகற்றப்படும் கழிவுகள் மற்றும் வீதியோர வியாபாரிகள் குப்பைகளை வாகனத்தில் ஏற்றி வந்து மக்கள் நடமாடும் பிரதான வீதிகளில் இரவு நேரங்களில் கொட்டுவதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

குப்பைகளை அகற்றுவதற்கு உள்ளூராட்சி மன்றங்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் சில வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் இதனை மீறி செயற்படுவதாக தெரிவித்தார்.

வியாபாரிகள் வீதிகளில் குப்பைகளையும், கழிவு பொருட்களையும் அங்கும் இங்கும் அலங்கோலமான முறையில் குப்பைகள் வீசுவதனால் பிரதேசத்தின் அழகிய தோற்றம் மாசுபடுவதோடு, மக்கள் நோய்களுக்கும் ஆளாகி வருவதாகவும் தெரிவித்தார்.

நடைப்பாதை வியாபாரத்திற்கு வரும் வியாபாரிகள் வீதி ஓரங்களில் கழிவுப் பொருட்களை வீசிவிட்டு செல்கின்றனர்.

இவை சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுவத்துவதாக குறிப்பிட்டார்.

வியாபார நிலையங்களில் சேருகின்ற கழிவுப் பொருட்களையும், குப்பைகளை ஒரு இடத்தில் சேமித்து வைத்து பாதுகாப்பான முறையில் அகற்றுமாறு கேட்டுள்ளார். இதனை மீறுவோர் மீது நீதிமன்றின் 2008 ஆம் ஆண்டின் 44 இலக்க தேசிய பொது வழிகள் சட்டம் 73 (1) இன் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# காத்தான்குடி பிரதேச செயலகத்துக்கு இரண்டாமிடம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற 2020க்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டியில் காத்தான்குடி பிரதேச செயலகம் இரண்டாம் தடவையாக இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

இதன்போது தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திலிருந்து வருகைதந்த மதிப்பீட்டுக் குழுவினர் செயலகத்திலுள்ள ஒவ்வொரு கிளைகளையும் பார்வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொண்டனர். அதனடிப்படையில் இந்தப் போட்டியில் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால்.

சனிக்கிழமை (11) அதிகாலை வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய ரீதியில் காத்தான்குடி பிரதேச செயலகம் இரண்டாமிடத்தை பெற்றுள்ளது.

# ஜனாஸா குளிப்பாட்டும் கட்டில்கள் அன்பளிப்பு

(கல்முனை விசேட நிருபர்)

நிந்தவூர் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு கல்முனை ரஹ்மத் பவுண்டேஷனால் ஜனாஸாக்களை குளிப்பாட்டும் கட்டில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் ஜனாஸா நலன்புரி அமைப்பின் நிருவாகிகள் விடுத்த வேண்டுகோளையேற்று ரஹ்மத் மன்சூர் குறுகிய காலத்திற்குள் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்.

ஞாயிற்றுக்கிழமை (12) நிந்தவூரில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இதனை வழங்கி வைத்தார். இதன்போது ஜனாஸா நல்லடக்கத்துடன் தொடர்புடைய பல விடயங்கள் சம்மந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் ஜனாஸா நலன்புரி அமைப்பின் தேவைகள் தொடர்பான கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் இதன்போது அவரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ரஹ்மத் பவுண்டேஷன் மற்றும் ஜனாஸா நலன்புரி அமைப்பு என்பவற்றின் முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

ஏலவே கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை உட்பட அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலுமுள்ள பள்ளிவாசல்களுக்கு ஜனாஸாக்களை குளிப்பாட்டும் கட்டில்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரின் வேண்டுகோளுக்கிணங்க, இராணுவத்தின் 242வது படைப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (12) கோமாரி பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவத்தின் 242வது படைப்பிரிவில் இடம்பெற்றது. 242வது படைப்பிரிவின், கட்டளை அதிகாரி பிரிகேடியர் டீ.சி. பீரிஸின் தலைமையில், சிவில் விவகார அதிகாரி லெப்டினன் கேணல் ஜானக விஜயரத்னவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பொத்துவில் ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பு வைத்தியர் டொக்டர் டீ.என்.எம்.தர்மதிலக மற்றும் டொக்டர் எஸ்.பெர்ணான்டோ ஆகியோர் கலந்து கொண்ட போது. (படம்: பாலமுனை விசேட நிருபர்)

# ஆயுர்வேத மருந்தகத்திற்கு காணி பத்திரம் கையளிப்பு

கல்குடா தினகரன் நிருபர்

அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச திணைக்களங்களுக்கு அரச காணிகளை கையளிக்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாஞ்சோலை ஆயுர்வேத மத்திய மருந்தகத்திற்கான காணி கையளிக்கும் நிகழ்வு ஓட்டமாவடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (13) இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி. ஆர்.சிறிதர், ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌபர், மாஞ்சோலை ஆயுர்வேத மத்திய மருந்தக பொது வைத்திய அதிகாரி ஏ. நளீம்டீன், செயலக நிருவாக உத்தியோகத்தர் எஸ். அப்துல் ஹமீட், பிரதேச செயலக காணிக்கிளை உத்தியோகத்தர்கள், மாஞ்சோலை கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இதன்போது ஓட்டமாவடி பிரதேச செயலாளர்பிரிவிலுள்ள மாஞ்சோலை ஆயுர்வேத மத்திய மருந்தகத்திற்கான காணி ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜாவினால், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி. ஆர்.சிறிதரனிடம் கையளிக்கப்பட்டது.

# இறக்காமம் பிரதேச சபை வரவு செலவு திட்டம் ஏகமனதாக நிறைவேற்றம்

இறக்காமம் தினகரன் நிருபர்

இறக்காமம் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் இம்முறை எவ்வித எதிர்ப்புமின்றி ஏகமனதாக திங்கட்கிழமை (13) நிறைவேற்றப்பட்டது.

இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எஸ்.ஜெமீல் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற அமர்வில் 13 உறுப்பினர்களில் 11 பேர் ஏகமனதாக ஆதரவை நல்கியதுடன், இரண்டு உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாயிருக்கவில்லை.



இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் 100 மில்லியன் ரூபா வருமானத்தில் 60 சதவீதமான பணம் முழுக்க முழுக்க மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான உத்தேச வருமானம் சுமார் 100 மில்லியன் ரூபாவில் 60வீதமான தொகை மக்கள் நலனுக்கு முன்னுரிமை வழங்கி இறக்காமம் பிரதேச சபைக்குட்பட்ட 08 வட்டாரங்களுக்கும், உள்ளக வீதி, வடிகான் புனரமைப்பு பணிகளுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபா வீதமும், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்திற்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும், வீதி விளக்கு பொருத்துவதற்கு ஒரு மில்லியன் ரூபாவும், கல்வி அபிவிருத்தி, கலாசாரம், வறுமை ஒழிப்புக்கு மூன்று இலட்சம் ரூபாவும், சுயதொழில் ஊக்குவிப்புக்கு இரண்டு இலட்சம் ரூபாவும், இயற்கை அனர்த்தத்திற்கு இரண்டரை இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



தேசிய பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தையொட்டி, அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சைக்கிள் பவனி அண்மையில் திருகோயிலில் ஆரம்பிக்கப்பட்டு அக்கரைப்பற்று மணிக்கூட்டு கோபுர சந்தி வரை இடம்பெற்றது. இதனூடாக பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது.

தே.அ.அ.இல. 873350881V எனும் எம்.என். மொஹமட் சர்ஜுன் ஆகிய நான், 2021-7-20ஆம் திகதிய சிலா/நீ/நீ/7862/18ஆம் இலக்க வழக்கின் முறைப்பாட்டிற்கு இயைபான குற்றத்தை ஏற்றுக் கொள்கின்றேன். மீண்டும் அந்தக் குற்றத்தை செய்யமாட்டேன் என உறுதிகூறி இலங்கையின் சகல பிரஜைகளிடமும் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன் என இத்தால் அறிவிக்கின்றேன்.

**Repeat Your ad For Better Offers**

### அற்றோனி தத்துவ அதிகாரம் இரத்து செய்தல்

இத்தால் அறியத்தருவது கம்பொலை, ஐயமாலபுர 3ம் தெரு, இல- 305/2/A என்ற விலாசத்தில் வசிக்கும் நமசிவாயம் சத்யேந்திரன் (தே.அ. இல - 802161549வீ) ஆகிய என்னால் நமசிவாயம் நல்லேந்திரன் அவர்களுக்கு டோஹா கத்தாருக்கான இலங்கை தூதரக மூன்றாவது செயலாளர் திரு ட அமானுல்லா அவர்களால் 2016.09.25ம் திகதி சான்ருறுதி செய்து வழங்கிய பொதுவான வெளிநாட்டு அற்றோனி தத்துவ அதிகாரத்தை இரத்து செய்து மீள பெறுகிறேன்.

**நமசிவாயம் சத்யேந்திரன்**

### அற்றோணி தத்துவ அதிகாரம் இரத்து செய்தல்

இத்தால் அறியத்தருவது கம்பொலை, கஹடபிடிய, இல- 358/1A என்ற விலாசத்தில் வசிக்கும் மொஹமட் நஸீர் மொஹமட் நவுஸான் (தே.அ. இல - 920972403வீ) ஆகிய என்னால் மொஹமட் நஸீர் பாதிமா நப்லா அவர்களுக்கு கம்பொலை பிரசித்த நொத்தாரிசு மொஹமட் பரூஸ் ஹீஸைன் அவர்களால் உறுதி இல.12415 மற்றும் 2019.11.11ஆம் திகதி சான்றுறுதி செய்து வழங்கிய அற்றோணி தத்துவ அதிகாரத்தை இரத்து செய்து மீள பெறுகிறேன்.

**மொஹமட் நஸீர் மொஹமட் நவுஸான்**

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

காலி மாவட்டம், பெந்தோட்டை, மிரிஸ்வத்த, பன்சல வீதி, இல.320/G (தபால் பெந்தோட்டை) எனும் முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியன்செலாகே அதுல விக்கிரமரத்ன ஆகிய நான், காலி மாவட்டம், பெந்தோட்டை, மிரிஸ்வத்த, பன்சல வீதி, இல.320G (தபால் பெந்தோட்டை) எனும் முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியன்செலாகே அமாளி விக்கிரமரத்ன என்பவருக்கு, பிரசித்த நொத்தாரிசு செமீ ஜயமாண்ண என்பவரால் 2010.12.10ஆம் திகதிய எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 10954ஆம் இலக்க, காலி மாவட்டம் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் தொகுதி 26 இருமடித்தால் 36, நாள் குறிப்பேட்டு இலக்கம் 141 இன்கீழ் 2011.01.31பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2021.10.15 ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் மற்றும் அற்றோணித் தத்துவகாரரால் 2021.10.15 ஆம் திகதியிலிருந்து மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

**ஹேரத் முதியன்செலாகே அதுல விக்கிரமரத்ன**
**2021.10.15**




# அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் நிலபர மாற்றத்தினால் ஏற்பட்ட பெயர் மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : எக்ஸ்-பெக் கொருகேட்டட் கார்ரூட்ன்ஸ் லிமிட்டட் |
| பதிவு இலக்கம் | : பீவீ 3294 பீபி |
| பதிவு அலுவலக முகவரி | : இல. 11ஏ, மைல்போஸ்ட் அவெனியு, கொழும்பு-03. |
| கம்பனியின் புதிய பெயர் | : எக்ஸ்-பெக் கொருகேட்டட் கார்ரூட்ன்ஸ் பிஎல்சி |
| நிலபர மாற்றத்தினால் ஏற்பட்ட பெயர் மாற்ற முன்மொழிவுத் திகதி | : 2021 நவம்பர் 10 ஆம் திகதியன்று |

**மேலேயுள்ள கம்பனியின் சார்பாக**
**பிஸ்னஸ் இண்டெலிஜென்ஜ் (பிறைவட்) லிமிட்டட் - செயலாளர்கள்**
**இல. 08, ரிக்கல் பாதை,**
**கொழும்பு-08.**

afc தங்கக் கடன் சேவை
தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 30.08.2020 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 28.12.2021 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, சங்கானை, சாவகச்சேரி, கடவத்தை, கிளிநொச்சி, கிரிபத்கொடை, கொஹுவல, மாலபே, மன்னார, நீர்கொழும்பு, புதுக்குடியிருப்பு, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
722, கோட்டை வீதிஇராஜகிரிய
28.12.2021

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

## கடுவெல மாநகர சபை

### 2022 ஆம் ஆண்டிற்கான ஆதன மதிப்பீட்டு பதிவேட்டினை பரிசீலனை செய்வதற்கு இடமளித்தலும் மதிப்பீடுகள் பற்றிய ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளுதலும்

2022 ஆம் ஆண்டில் கடுவெல மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் வரிப்பணம் செலுத்தப்படுவதற்கு கட்டுப்பட்ட ஆதனங்களின் மதிப்பீடுகளை உள்ளடக்கிய மதிப்பீட்டுப் பதிவேடு கடுவெல, பத்தரமுல்ல மற்றும் அத்துருகிரிய ஆகிய மாவட்ட அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளது. 2022 சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வாரநாட்களில் அலுவலக நேரங்களில் மேற்படி மதிப்பீட்டு பதிவேட்டினை பார்வையிட முடியும். சம்பந்தப்பட்ட ஆதன உரிமையாளர் அல்லது அதில் வதிபவருக்கு தனது அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னர் மாத்திரமே சம்பந்தப்பட்ட ஆதனத்தின் விபரங்களை பரிசீலிக்க முடியும் என்பதுடன் தனக்கு சொந்தமில்லாத எந்தவொரு ஆதனத்தின் விபரங்களையும் பரிசீலிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாதென தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

2022 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மேற்படி வருடாந்த மதிப்பீடு சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2022 சனவரி மாதம் 31 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் "மாநகர ஆணையாளர், கடுவெல மாநகர சபை, கடுவெல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவோ அல்லது கடுவெல பத்தரமுல்ல மற்றும் அத்துருகிரிய மாவட்ட அலுவலகங்களில் அதற்கென வைக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு ஆட்சேபனை புத்தகத்தில் குறிப்பிடவோ முடியும். ஆட்சேபனை தெரிவிக்கும் போது அதனை தனது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆதன உரிமையாளருக்கு அல்லது அதில் வதிபவருக்கு மாத்திரமே தெரிவிக்க முடியும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். மேற்படி ஆதனத்துடன் தொடர்புடைய அற்றோணித் தத்துவத்தைக் கொண்டவரும் இவ்விடயத்தில் ஆதன உரிமையாளராக உள்ளடக்கப்படுகின்றார். ஆகவே, அற்றோணி தத்துவத்தைக் கொண்டுள்ளவர் சட்டத்தரணி ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோணி பத்திரத்துடன் அற்றோணி தத்துவம் வழங்கியவர் உயிருடன் இருக்கின்றார் என்பதையும் அற்றோணி பத்திரம் இரத்துசெய்யப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டு சத்தியக் கடதாசியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**2021.12.14**

**மாநகர ஆணையாளர்**
**கடுவெல மாநகர சபை.**

சிறு விளம்பரம்
மோட்டார் வாகனங்கள்
122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

NW YB-4571 Bajaj 2010, NW YM-1090 Bajaj 2011 three-wheel. கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலி பல் பினான்ஸ், பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 071 1210810. 080215

WP-BHH-0513 Honda, 2018, motor cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ், பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 071 1210810. 080219

### 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் (திருத்தப்பட்டது) 66 (உ ) பிரிவுடன் இணைத்து வாசிக்கப்படவுள்ள உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் கட்டளைச் சட்ட 66 (ஆ) பிரிவின் கீழான அறிவித்தல்

பதுளை உள்ளூராட்சி ஆணையாளர் எம்.எம். விஜேநாயக்க ஆகிய நான் 2012 ஆம் ஆண்டின் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் (திருத்தப்பட்டது) 66(ஆ) பிரிவுடன் இணைத்து வாசிக்கப்படவுள்ள கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவத்தின் கீழ் ஊவா மாகாணத்திலுள்ள எல்ல பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள தலைவர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக நடைபெறவுள்ள கூட்டமானது 2021 டிசம்பர் மாதம் 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு எல்ல என்றவிடத்தில் அமைந்துள்ள எல்ல பிரதேச சபையின் சபை மண்டபத்தில் நடைபெறுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

**எம்.எம். விஜேநாயக்க**
**உள்ளூராட்சி ஆணையாளர்**
**பதுளை மாவட்டம்.**

**2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் நாளன்று பதுளை, மாட்டின் சில்வா மாவத்தையிலமைந்துள்ள ஊவா மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில்.**

## கட்டான பிரதேச சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**வலிசிங்க ஹரிஸ்சந்திர விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்தல் (2ஆம் கட்டம்)**

பெறுகை இலக்கம். க.பி.ச.03/D3/பெறுகை/2021

01. கட்டான பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் சபையின் ஒதுக்கீட்டின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வகையில் வலிசிங்க ஹரிஸ்சந்திர விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக் காலம் | ஒப்பந்தப் பதிவு |
|---|---|---|---|---|
| 01 | கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் 70/பி கே.சி. த வலிசிங்க ஹரிஸ்சந்திர விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்தல் (2ஆம் கட்டம்) | 10,000,000.00 | 06 மாதங்கள் | C7 அல்லது C6 |

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் பிரகாரமாகும். பிரதேச முன்னுரிமையாக மேல் மாகாணத்தினுள் 5% ஆகும்.

03. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2021-12-14ஆம் திகதி முதல் அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கட்டான பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தின் கைத்தொழில் பிரிவிற்கு வருகை தந்து விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் வேலை அத்தியட்சகரிடமிருந்து (0312222575) பெற்றுக்கொள்ளலாம்.

04. 2021-12-14ஆம் திகதி முதல் 2021-12-27ஆம் திகதி வரையான காலத்தினுள் மீளளிக்கப்படாத 2,500.00 (இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா) கட்டணத்தைச் செலுத்தி எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து வேலைப் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத்தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் அல்லது காப்புறுதி நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது பெற்றுக்கொள்ளக்கூடிய 2022-05-14ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் ஒரு இலட்சம் ரூபா (ரூபா 100,000.00) பெறுமதியான பிணைமுறி அல்லது அதற்குச் சமமான தொகையை கட்டான பிரதேச சபையில் வைப்புச் செய்து அந்தப் பற்றுச்சீட்டை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென தயாரித்து 2021-12-28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், கட்டான பிரதேச சபை, தெமங்ஹந்திய'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கட்டான பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பெறுகை இலக்கம், செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இந்த விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்தின் பின் வருகைதந்துள்ள விலைமனுதாரர்கள்/பிரதிநிதிகள் முன்னிலையில் கட்டான பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

07. இந்த விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரத்தை பிரதேச சபை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**எம். நந்த விஜேரத்ன சில்வா,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**கட்டான பிரதேச சபை, தெமங்ஹந்திய.**
**2021-12-14.**

**தொலைபேசி: 031-2222575 தொலைநகல்: 031-2231631**

# கேள்வி அறிவித்தல்

**நிறுவனத் தோட்ட மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

**எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்**

**அபாயகரமான மற்றும் பலகை அறுவைக்கான மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்காக கேள்விகோரல்**

கேள்வி இல. EPL/PL/TB/T-10/2021 – Timber

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் பின்வரும் தோட்டங்களிலுள்ள மரங்களை வெட்டி அகற்றுவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன.

| தோட்டம் | மர வகை | மரங்களின் எண்ணிக்கை | ஏனைய விடயங்கள் | லொட் இலக்கம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| மில்லவான | ஹல்மில்ல,கெட்டகலா, மஹோகனி, தேக்கு | 40 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 01 | 50,000.00 |
| ஹுணுகல | கினிசபு | 27 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 02 | 25,000.00 |
| ஹுணுகல | கிரவிலியா | 29 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 03 | 25,000.00 |
| ஹுணுகல | கொட்ட, ஈரப்பலா, பலா, தென்னை உட்பட கலப்பு மரங்கள் | 23 | அபாயகரமான மரங்கள் | 04 | 10,000.00 |
| ஹுணுகல | சபு, கொட்ட, ஈரப்பலா, பலா, மஹோகனி, கிரவிலியா கலப்பு மரங்கள் | 30 | அபாயகரமான மரங்கள் | 05 | 10,000.00 |
| ஹபுகஸ்பிட்டிய | பலா | 1 | அபாயகரமான மரங்கள் | 06 | 5,000.00 |
| ஹபுகஸ்பிட்டிய | கலப்பு மரங்கள் | 353 | மின்சார கம்பிவழிக்கு இடைஞ்சலாகவுள்ள மரங்கள் | 07 | 25,000.00 |
| ஹபுகஸ்பிட்டிய | கலப்பு மரங்கள் | 109 | மின்சார கம்பிவழிக்கு இடைஞ்சலாகவுள்ள மரங்கள் | 08 | 25,000.00 |
| ஹபுகஸ்பிட்டிய | கலப்பு மரங்கள் | 400 | மின்சார கம்பிவழிக்கு இடைஞ்சலாகவுள்ள மரங்கள் | 09 | 25,000.00 |
| ஹபுகஸ்பிட்டிய | கலப்பு மரங்கள் | 144 | மின்சார கம்பிவழிக்கு இடைஞ்சலாகவுள்ள மரங்கள் | 10 | 25,000.00 |
| எல்கடுவ | யூகலிப்டஸ், கிரான்விஸ் | 35 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 11 | 25,000.00 |
| எல்கடுவ | யூகலிப்டஸ், கிரான்விஸ் | 36 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 12 | 25,000.00 |
| எல்கடுவ | யூகலிப்டஸ், கிரான்விஸ் | 33 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 13 | 25,000.00 |

கேள்விப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை 2021-12-14ஆம் திகதி முதல் 2021-12-24ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரையில் குறித்த தோட்ட அலுவலகத்தில் அல்லது இல. 320, ஜனவது பியஸ, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு-10ல் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் உப அலுவலகத்தில் அல்லது 2021-12-14ஆம் திகதி முதல் 2021-12-27ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரை ரத்வத்த, உக்குவளையில் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதான அலுவலகத்திற்கு 2000.00 ரூபா பெறுமதியான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூரணப்படுத்தி முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2021-12-27ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் ரத்வத்த உக்குவெலயில் அமைந்துள்ள தலைமை அலுவலக கேள்விச் சபையின் தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அவை 2021-12-27ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச்சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

- திருப்திகொள்ள முடியாத அதிக விலைக்கோரல்களைச் சமர்ப்பித்துள்ள சகல கொள்வனவாளர்களுடன் கலந்துரையாடும் அதிகாரத்தை தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்,**
**செயற்பாட்டு அலுவலகம்,**
**ரத்வத்த, உக்குவளை.**

**தொலைபேசி இலக்கம்:**
**066-2242522 - தலைமை அலுவலகம்**
**066-3682458 - ஹுணுகல தோட்டம்**
**066-3682461 – மில்லவான தோட்டம்**
**011-2698059 - உப அலுவலகம்**
**066-3133355 – எல்கடுவ தோட்டம்**
**066-3669882 – ஹப்புகஸ்பிட்டிய தோட்டம்**

# பெறுகை அறிவித்தல் – 2022ஆம் வருடம்

## மஹியங்கனை பிரதேச சபை

மஹியங்கனை பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2022-01-01ஆம் திகதி முதல் 2022-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட பெறுகை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. பெறுகை விண்ணப்பங்கள் வழங்குதல் - 2021-12-14ஆம் திகதி முதல் 2021-12-20ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை
02. பெறுகை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் - 2021-12-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை
03. பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படுதல் - 2021-12-21ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு மஹியங்கனை பிரதேச சபை அலுவலகத்தில்

| தொ. இல. | ஆதனத்தின் விபரம் | மீளளிக்கப் படாத பெறுகை விண்ணப்பக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் பெறுகை பிணை வைப்பு (ரூபா) | 2022ஆம் வருடத்திற்கான ஆகக் குறைந்த கேள்வி (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | மஹியங்கனை சனிக்கிழமை வாரச்சந்தையில் வரிகளை அறவிடும் வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 5000.00 | 25000.00 | 8804041.31 |
| 02 | கி/கோட்டே வெள்ளிக்கிழமை வாரச்சந்தையில் வரிகளை அறவிடும் வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 5000.00 | 20000.00 | 2424645.56 |
| 03 | மஹியங்கனை நன்னீர் மீன் தட்டு | 2500.00 | 3000.00 | 189000.00 |

01. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் மற்றும் படிவக் கட்டணத்திற்காக முத்திரைக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். (மேற்படி வரித் தொகை அரசாங்கத்தினால் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு ஏற்புடையதாகும்)
02. பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படும் வேளையில் பெறுகை விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். (மேலதிக விபரங்களுக்கு: 055-2257275 எனும் தொலைபேசியில் விசாரிக்கவும்)

**கே.பி. குணவர்தன,**
**தலைவர்,**
**மஹியங்கனை பிரதேச சபை.**

**2021-12-07ஆம் திகதி மஹியங்கனை பிரதேச சபையில்**

# அறிவிப்பு

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

**பஸ்டியன் கோரலலாகே தியுடர்**
**ரெஜினோல்ட் ரோட்ரிகோ**
**மாதவ, கோஹிலகெதர, குருநாகல்**
**வாதி**

**வழக்கு எண். : DSP/401/2021**
**இயல்பு : விசேஷ**
**செயல்முறை : சாதாரணம்**
**மதிப்பு : ரூ. 500,000/-**

**- எதிர்-**

1. **இலங்கை செஞ்சிலுவை சங்கம்**
   **106, தர்மபால மாவத்தை,**
   **கொழும்பு-07.**
2. **ஜகத் அபேசிங்க - தலைவர்**
   **இலங்கை செஞ்சிலுவை சங்கம்**
   **106, தர்மபால மாவத்தை,**
   **கொழும்பு-07.**
3. **எஸ்.எச்.நிமல் குமார**
   **தேசிய செயலாளர்**
   **இலங்கை செஞ்சிலுவை சங்கம்**
   **106, தர்மபால மாவத்தை,**
   **கொழும்பு-07.**
4. **டாக்டர். மகேஷ் குணசேகர**
   **நிர்வாக இயக்குனர்**
   **இலங்கை செஞ்சிலுவை சங்கம்**
   **106, தர்மபால மாவத்தை,**
   **கொழும்பு-07.**
5. **சர்வதேச செஞ்சிலுவை சங்கம்**
   **இல. 29, லேயர்ட்ஸ் வீதி,**
   **கொழும்பு-05.**
6. **சர்வதேச செஞ்சிலுவை மற்றும்**
   **செம்பிறை இயக்கம்**
   **106, தர்மபால மாவத்தை,**
   **கொழும்பு-07.**

**பிரதிவாதி**

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும்.**

மேலே பெயரிடப்பட்ட வாதி, மேலே குறிப்பிடப்பட்ட 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளை பெயரிட்டு இவ்வழக்கு பின்வரும் நிவாரணங்களுடன் இந்த நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது:

i. 2வது, 3வது மற்றும் 4வது பிரதிவாதிகளுக்கு எதிராக, 1வது பிரதிவாதி சங்கம் சார்பில், இந்த வழக்கை தொடர, சிவில் நடைமுறைச்சட்டத்தின் பிரிவு 16ன் கீழ் உத்தரவொன்று வழங்குமாறும்.

ii. மத்திய கவர்னர்கள் குழுவின் அடுத்த பதவிக்காலத்துக்கு புதிய அதிகாரிகளை நியமிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்காமல், மத்திய ஆளுநர் குழுவின் முன்னாள் அதிகாரிகளால் டிசம்பர் 14, 2021 அன்று நடைபெறும் சிறப்புப் பொதுக் கூட்டத்தில், கூட்டுச்சட்ட ஆணையகத்தின் முன் அனுமதியின்றி மார்ச் 2021 இல் உருவாக்கப்பட்ட உத்தேச அரசியலமைப்பு மற்றும்/அல்லது உத்தேச நடத்தை விதிகளை சட்டவிரோதமாக முன்வைப்பதன் மூலம் 1வது பிரதிவாதி சமூகத்தின் நடத்தை விதிகள் மற்றும் கொள்கைகள் அத்தியாயம் 11.5.1, 24.2 24.3 ஆகியவற்றை மீறுவதற்கான அறிக்கையொன்று வழங்குமாறும்,

iii. பிரிவு 27.1 இன் படி கொரோனா தொற்றுநோயை அவசரநிலையாக அங்கீகரித்து, ஒத்திவைக்கப்பட்ட தேர்தலுடன் 24 வது அமர்வுகளை நடத்துவதற்கு மற்றும் 1 வது பிரதிவாதி சங்கத்தின் பொது அல்லது சிறப்புப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கும், அவசரநிலையின் ஆரம்ப நேரத்தில் அடுத்த அமர்வுக்கு புதிய கிளைப் பிரதிநிதிகளை நியமிப்பதற்கும் 1 வது பிரதிவாதி சங்கத்தின் மத்திய ஆளுநர் குழுவின் முன்னாள் தேசிய செயலாளரான 3 வது பிரதிவாதிக்கு இயலாமல் போனதனால் 1வது பிரதிவாதி சமூகத்தின் நடத்தை விதிகள் மற்றும் கொள்கைகள் அத்தியாயம் 19,11 மற்றும் 37.1 உட்பட பிற விதிகளை மீறுவதற்கான அறிக்கையொன்று வழங்குமாறும்,

iv. 1வது பிரதிவாதி சங்கத்தின் மத்திய ஆட்சிக் குழுவின் முன்னாள் தேசிய செயலாளரான 3வது பிரதிவாதி, கொரோனா தொற்று பரவியதை அடுத்து அவசரகால நிலையின் ஆரம்ப கட்டத்தில் அத்தியாயம் 27.1 வது பிரிவின்படி சரியான நேரத்தில் கூட்ட முடியாமல் போனதையடுத்து அந்த அவசரக்காலம் சரியானவுடனே 2021 ஆம் ஆண்டு தேர்தல்களுடன் பொதுச் சபையைக் கூட்டத் தவறியதனால் 1வது பிரதிவாதி சமூகத்தின் நடத்தை விதிகள் மற்றும் கொள்கைகள் அத்தியாயம் 15.4, 27, 27.1, 19.1.1 ஆகியவற்றை மீறுவதற்கான அறிக்கையொன்று வழங்குமாறும்,

v. 1வது பிரதிவாதி சங்கத்தின் மத்திய வாரியத்தின் பூர்வாங்க அதிகாரிகளால் 12.09.2021 அன்று நடத்த தீர்மானிக்கப்பட்ட பொதுக்கூட்டத்தை மீண்டும் 04.12.2021 அன்று நடத்துவதற்கு முடிவு செய்ததற்காக 1வது பிரதிவாதி சமூகத்தின் நடத்தை விதிகள் மற்றும் கொள்கைகளை மீறுவதற்கான அறிக்கையொன்று வழங்குமாறும்,

vi. 1 வது பிரதிவாதிச் சங்கத்தின் மத்திய ஆளும் குழுவின் தேசிய செயலாளராக பதவி வகிக்கும் 3 வது பிரதிவாதி 2021 டிசம்பர் 4 ஆம் தேதி சிறப்பு பொதுக் கூட்டத்திற்கான இறுதி அறிவிப்பை நவம்பர் 19, 2021 அன்று வெளியிட்டதற்காக 1வது பிரதிவாதி சமூகத்தின் நடத்தை விதிகள் மற்றும் கொள்கைகளை மீறுவதற்கான அறிக்கையொன்று வழங்குமாறும்,

vii. கூட்டுச்சட்ட ஆணையகத்தின் முன் அனுமதியின்றி மார்ச், 2021 இல் வரைவு செய்யப்பட்டு முடிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட அரசியலமைப்பு மற்றும் / அல்லது முன்மொழியப்பட்ட விதிகள் மற்றும் நடத்தை விதிகளை டிசம்பர் 4, 2021 அன்று 1வது பிரதிவாதி சங்கத்தின் மத்திய வாரியத்தின் முன்னாள் அதிகாரிகளால் சிறப்புப் பொதுக் கூட்டத்திற்கு சமர்ப்பித்தினால் 1வது பிரதிவாதி சங்க சட்டத்தின் அத்தியாயம் 3.2 5.1, 5.2, 5.3, 8.1.1 மற்றும் கொள்கைகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை இயக்கத்தின் சட்டங்கள் மற்றும் நடைமுறை விதிகளின் அத்தியாயம் 04 மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்க சட்டத்தின் அத்தியாயம் 07(2ப்), 08(Bஅ), 08(Bf), 08(Bஜ), 10(1) ஆகியவற்றை மீறுவதற்கான அறிக்கையொன்று வழங்குமாறும்,

viii. மத்திய வாரியத்தின் அடுத்த பதவிக் காலத்திற்கு புதிய அதிகாரிகளை நியமிக்கும் முன் நவம்பர் 19, 2021 தேதியிட்ட "இறுதிப் பிரகடனத்தில்" கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளை அங்கீகரிப்பதற்காக நவம்பர் 19, 2021 அன்று இறுதி அறிவிப்பு வரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருத்தப்பட்ட அரசியலமைப்பு மற்றும் விதிகளை ஏற்றுக்கொள்வதற்காக கொரோனா தொற்று பரவியதை அடுத்து மே 30, 2021க்கு முன் சரியான நேரத்தில் தேர்தலை நடத்த முடியாத காரணத்தினால் டிசம்பர் 4, 2021 அன்று அல்லது அதற்கு அடுத்த நாள் அல்லது வேறு ஏதேனும் ஒரு கூட்டத்தை கூட்டுவதற்கு சங்க சட்டம் அத்தியாயம் 27.1 பிரிவுக்கு இணங்க 1 வது பிரதிவாதி சங்கம் 24 வது கிளை பொதுச் சபை மற்றும் அமர்வுகளை நடத்துவதற்கு 1 வது பிரதிவாதிச் சங்கத்தின் பொது அல்லது சிறப்புப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு 1 வது பாதுகாவலர் சங்கத்தின் அடுத்த தவணைக்கான தேர்தலுடன் பொதுக் கூட்டத்தை நடத்துவதைத் தடுப்பதற்காகவும், கிளையைப் பிரதிநிதித்துவப்படுத்த அடுத்த காலத்திற்கு புதிய கிளை பிரதிநிதிகளை நியமிப்பதற்காக 1 வது பிரதிவாதி சங்கம் மற்றும் / அல்லது அனைத்து அதிகாரிகள் மற்றும் / அல்லது அந்த சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உத்தரவு பிறக்குமாறும்,

ix. இந்த வழக்கை விசாரித்து தீர்ப்பளிக்கும் வரை மத்திய வாரியத்தின் அடுத்த பதவிக் காலத்திற்கு புதிய அதிகாரிகளை நியமிக்கும் முன் நவம்பர் 19, 2021 தேதியிட்ட "இறுதிப் பிரகடனத்தில்" கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளை அங்கீகரிப்பதற்காக நவம்பர் 19, 2021 அன்று இறுதி அறிவிப்பு வரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருத்தப்பட்ட அரசியலமைப்பு மற்றும் விதிகளை ஏற்றுக்கொள்வதற்காக கொரோனா தொற்று பரவியதை அடுத்து மே 30, 2021 க்கு முன் சரியான நேரத்தில் தேர்தலை நடத்த முடியாத காரணத்தினால் டிசம்பர் 4, 2021 அன்று அல்லது அதற்கு அடுத்த நாள் அல்லது வேறு ஏதேனும் ஒரு கூட்டத்தை கூட்டுவதற்கு சங்க சட்டம் அத்தியாயம் 27.1 பிரிவுக்கு இணங்க 1 வது பிரதிவாதி சங்கம் 24 வது கிளை பொதுச்சபை மற்றும் அமர்வுகளை நடத்துவதற்கு 1 வது பிரதிவாதிச் சங்கத்தின் பொது அல்லது சிறப்புப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு 1 வது பாதுகாவலர் சங்கத்தின் அடுத்த தவணைக்கான தேர்தலுடன் பொதுக் கூட்டத்தை நடத்துவதைத் தடுப்பதற்காகவும், கிளையைப் பிரதிநிதித்துவப்படுத்த அடுத்த காலத்திற்கு புதிய கிளை பிரதிநிதிகளை நியமிப்பதற்காக 1 வது பிரதிவாதி சங்கம் மற்றும் / அல்லது அனைத்து அதிகாரிகள் மற்றும் / அல்லது அந்த சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உத்தரவு பிறக்குமாறும்,

x. அவ்வாறு இடைக்கால தடை உத்தரவை வழங்கும் வரை மத்திய வாரியத்தின் அடுத்த பதவிக் காலத்திற்கு புதிய அதிகாரிகளை நியமிக்கும் முன் நவம்பர் 19, 2021 தேதியிட்ட "இறுதிப் பிரகடனத்தில்" கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளை அங்கீகரிப்பதற்காக நவம்பர் 19, 2021 அன்று இறுகி அறிவிப்பு வரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருத்தப்பட்ட அரசியலமைப்பு மற்றும் விதிகளை ஏற்றுக்கொள்வதற்காக கொரோனா தொற்று பரவியதை அடுத்து மே 30, 2021க்கு சரியான நேரத்தில் தேர்தலை நடத்த முடியாத காரணத்தினால் டிசம்பர் 4, 2021 அன்று அல்லது அதற்கு அடுத்த நாள் அல்லது வேறு ஏதேனும் ஒரு கூட்டத்தை கூட்டுவதற்கு சங்க சட்டம் அத்தியாயம் 27.1 பிரிவுக்கு இணங்க 1 வது பிரதிவாதி சங்கம் 24 வது கிளை பொதுச் சபை மற்றும் அமர்வுகளை நடத்துவதற்கு 1வது பிரதிவாதிச் சங்கத்தின் பொது அல்லது சிறப்புப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு 1வது பாதுகாவலர் சங்கத்தின் அடுத்த தவணைக்கான தேர்தலுடன் பொதுக் கூட்டத்தை நடத்துவதைத் தடுப்பதற்காகவும், கிளையைப் பிரதிநிதித்துவப்படுத்த அடுத்த காலத்திற்கு புதிய கிளை பிரதிநிதிகளை நியமிப்பதற்காக 1 வது பிரதிவாதி சங்கம் மற்றும் / அல்லது அனைத்து அதிகாரிகள் மற்றும் / அல்லது அந்த சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு எதிராக தடை உத்தரவு பிறக்குமாறும்,

xi. வழக்கு கட்டணங்கள், மற்றும்

xii. இந்நீதிமன்றம் பொருத்தமானதாகக் கருதும் பிற மற்றும் கூடுதல் நிவாரணங்கள்.

இந்த வழக்கு 2021 டிசம்பர் 2 ஆம் திகதி அழைக்கப்பட்ட வேளையின் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால், மேற்கண்ட நிவாரணங்களைக் கோரி 1 முதல் 6 பிரதிவாதிகளின் பெயரைக் கூறி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இலக்கம் 01இல் தொடரப்பட்ட வழக்கு 2021 டிசம்பர் 16 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

13 டிசம்பர், 2021 அன்று

**நீதிமன்ற உத்தரவின்படி,**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**கொழும்பு.**



கம்பளை மரியாவத்தை அல்மத்ரஸத்துல் ஹக்கீமிய்யா மத்ரஸா மாணவர்களின் பரிசளிப்பு நிகழ்வும் சான்றோர் கௌரவிப்பும் கெலிஓய எலமல்தெனிய பேல்ஸ் கல்யாண மண்டபத்தில் அதிபர் மௌலவி பி. எம். ஹுஸைன்டீன் த்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, விசேட அதிதிகளாக உடுவர பிரதேச சபையின் உப தவிசாளர் ஸபான், அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமவின் இணைப்பதிகாரியும் யட்டிநுவர பிரதேச சபை உறுப்பினருமான வசீர் முக்தார்,முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹம்ஜட், ஹைரா பாம் நிறுவனத்தின் இயக்குனரும், அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் பெருளாளருமான யூ. எம். பாசில்,ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான பஸ்லான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்

# பூஸ்டர் தடுப்பு மருந்தேற்றும் பணிகள் தொடர்ந்து முன்னெடுப்பு

***மாத்தளை சுழற்சி நிருபர்***

*மாத்தளை மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் கொரோனா வைரஸ் மூன்றாம் கட்ட பைசர் பூஸ்டர் தடுப்பு மருந்தேற்றும் பணிகள் சுகாதாரப் பிரிவினரால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட வைத்தியசாலை தொற்று நோய் பிரிவின் விசேட வைத்தியர் வசந்த பண்டார தெரிவித்தார்.*

*மாத்தளை மாவட்ட சுகாதார பணிமனையின் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், மாத்தளை மாவட்டத்தில் முதல், இரண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே மூன்றாம் கட்ட பைசர் தடுப்பு மருந்தேற்றப்பட்டு வருகின்றது. கொவிட் 19 வைரஸ் தொற்று கட்டுப்பாடுகளை மதித்து சுகாதார வழிமுறைகளை மக்கள் முழுமையாக பின்பற்றுவதில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.*



சௌபாக்கிய உற்பத்தி கிராமம் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சேதன பசளை உற்பத்தி செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் கொட்டகலையில் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் வைத்து அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் 8 கிராம சேவகர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 48 பயனாளிகளுக்கு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.இதன்போது தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன், கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜமணி பிரசாத், நுவரெலியா பிரதேச செயலகத்தின் அதிகாரிகள், கொட்டகலை பிரதேச சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

படம் தலவாக்கலை குறூப் நிருபர்


# இலங்கை வங்கி

## ஏலவிலை கோரல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை விநியோகிப்பதற்கு புகழ்பெற்ற உற்பத்தியாளர்களிடமிருந்து / விநியோகஸ்தர்கள் அல்லது அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திர இல | P/PROC/2021/300 | |
| பண்டம் / சேவைகளின் விபரம் | இலங்கை வங்கியின் சின்னம் மற்றும் இலங்கை வங்கியின் கோபுரம் வடிவிலான பரிசுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் | |
| **விபரம்** | **தொகை** | **பிணை முறியாக (ரூ.)** |
| 01 - வெந்நீர் போத்தல் | 2,000 | 75,000/- |
| 02 - தண்ணீர்ப் போத்தல் | 10,000 | 110,000/- |
| 03 - பேனா தாங்கி | 2,000 | 50,000/- |
| மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | ரூ. 4,320/= (பெறுமதி சேர் வரிகளுடன்) | |
| ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும் | 2022.01.03 1500 மணி வரை | |
| ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் நேரம் | 0900 மணி முதல் 1500 மணி வரை | |
| ஏலவிலை கூறல் முடிவடையும் / திறக்கும் திகதியும் நேரமும் | 2022.01.04 1000 மணி வரை | |
| ஏலவிலை கூறல் திறக்கும் காலம் | ஏலவிலை கூறல் முடிவடைந்த உடன் | |
| முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் இடமும் | 2021.12.21ஆம் திகதி 1000 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகக் கட்டடத்தின் 03ஆம் மாடியில் இடம்பெறும் (நேரடியாக ஏலவிலைகூறலுக்கு முந்திய கூட்டமானது நடாத்த முடியாதவிடத்து, உரிய ஏலவிலை கூறுபவரின் உத்தியோக பூர்வ மின்னஞ்சலுக்கு தேவையாக இணைப்புகளை வழங்குவதன் மூலம் நேரலையில் இக் கூட்டமானது இடம்பெறும்) | |

1. உரிய விபரங்களுடன் விலைகூறல் ஆவணத்தொகுதியை இலக்கம் 01, இலங்கை வங்கித் தலைமையகம், "BOC சதுக்கம்", இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ள இலங்கை வங்கியின் 14ஆம் தளத்தில் உள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் திருப்பிச் செலுத்தாக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.
2. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை இலங்கை வங்கி தவிர்ந்த மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து பெற்றதும் இலங்கை வங்கியினால் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் 2022.05.03ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதமாக / பிணை முறியாக இணைத்து அனுப்ப வேண்டும். பிணை முறிக்குப் பதிலாக பண வைப்பு / வங்கிக் கட்டண ஆணை / வங்கி வரைவு என்பனவும் (தனிப்பட்ட காசோலை தவிர்ந்த) ஏற்றுக்கொள்ளப்படும்
3. கேள்விப் பத்திரங்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
4. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
5. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
இல.01, "இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2204264, 2544310


# ஸ்ரீ.ல.சு கட்சியின் மஸ்கெலியா ஒருங்கிணைப்பாளர் மீது தாக்குதல்

***ஹற்றன் சுழற்சி நிருபர்***



*மஸ்கெலியா பிரதேச சபையின் உப தலைவரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மஸ்கெலியா தொகுதி ஒருங்கிணைப்பாளருமான பெரியசாமி பிரதீபன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மஸ்கெலியா பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் நேற்று (13.12.2021) தவிசாளர் கோவிந்தன் செண்பகவள்ளி தலைமையில் இடம்பெற்ற போதே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*நேற்று (13.12.2021) பிற்பகல் 1 மணியளவில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மஸ்கெலியா பிரதேச சபை எல்லைக்குள் கட்டப்பட்டுள்ள தேவையற்ற கட்டடங்கள் தொடர்பில் எழுந்த பிரச்சினையை மையமாகக் கொண்டே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் காயமடைந்த பிரதீபன் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். தாக்குதலில் பெரியசாமி பிரதீபனின் இடது கண்ணுக்கு அருகில் காயம் ஏற்பட்டுள்ளதாக மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.*

*மஸ்கெலியா பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆரியரத்ன பண்டார தெரிவித்தார். இச்சம்பவத்தினையடுத்து மஸ்கெலியா பிரதேச சபையின் அமர்வுகள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.*

# பசறை – லுணுகலை வீதி புனரமைப்பு பணி தாமதம்

*பதுளை மட்டக்களப்பு பிரதான வீதியின் பசறை லுணுகலைக்கு இடைப்பட்ட பாதை முழுமையாக புனர்நிர்மாணம் செய்யப்படாமல் உள்ளது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத் திட்டம் இன்று வரையில் முழுமை பெறாமையால் மக்கள் சொல்லொணா துன்பங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.*

*வீதியின் இரு மருங்கிலும் காணப்படும் சில பாலங்கள் பகுதி அளவிலேயே செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதனால் வாகன நெரிசல் ஏற்படுகின்றது. பெரும்பாலும் மழைக்காலங்களில் மாணவர்கள் வீதியில் வழுக்கி விழுதல், வாகனங்கள் செல்லும் போது சேற்று மண்ணில் புதைதல், விபத்துக்கள் போன்றனவும் நிகழ்ந்து வருகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்கள் நலனை கருத்தில் கொண்டு இந்த வீதி புனர்நிர்மாண வேலைத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர்.*

*(ந.திஸ்னாகுமாரி)*

# ஐ.ம. சக்தியின் விவசாய சம்மேளனம் ஆரம்பம்

*நுவரெலியாவில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக "சமகி பல கொவி மண்டல" எனும் விவசாய சங்கங்களின் மக்கள் கிளை பிரிவுகள் பதிவு செய்யும் நடவடிக்கையும், நிர்வாக சபை தேர்வும் மற்றும் கலந்துரையாடலும் நுவரெலியா கூட்டுறவு சங்க விடுதியில் நேற்று (13) மாலை இடம்பெற்றது.*

*எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா அமைப்பாளர் தினேஷ் லங்கா கீகனகே ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.*

*நிகழ்வுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.*

*அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட இணையமைப்பாளரும் தலவாக்கலை நகர சபையின் முன்னாள் தலைவருமான அசோக்க சேப்பால உள்ளிட்ட நுவரெலியா மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்களுடன்,விவசாயிகள் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அதே நேரத்தில் நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை,ஹங்குராக்கெத்த, கொத்மலை,அம்பகமுவ மற்றும் நுவரெலியா பிரதேசங்களில் ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக புதிய விவசாயிகளின் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு நிர்வாக சபைகளும் தேர்வு செய்யப்படும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகிறது.*

*அந்த வகையில் வலப்பனை,தலவாக்கலை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கு பின் நுவரெலியாவில் (13) மதியம் இந் நிகழ்வு இடம்பெற்றது.*



# மண்ணுக்குள் புதைந்து கொண்டிருக்கும்

# இறக்குவானை டிப்டீன் தமிழ் வித்தியாலயம்



**பாடசாலை கட்டடம் இரண்டு அடிக்கு மேல் புதையுண்டுள்ளது**

**மாற்றீடாக வழங்கப்படும் காணிகளும் அபாயம் நிறைந்ததாகவே காணப்படுகிறது**

நற்பிரஜைகளை உருவாக்கித் தருகின்ற அற்புத பணியை பாடசாலைகள் மேற்கொண்டு வருகின்றன. அறிவை விருத்தி செய்துவதற்காக தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்கும் பெற்றோர்களிடம் தமது பிள்ளைகளுக்கான பாதுகாப்பை பாடசாலை நிர்வாகம் பொறுப்பேற்கும் எனும் நம்பிக்கை அதிகம் காணப்படுகின்றது. இத்தகைய நிலையில் மண்சரிவுக்குள் தம் பிள்ளைகள் சிக்குண்டு விடுவார்களோ எனும் அச்சத்துடனேயே இரத்தினபுரி இறக்குவானை டிப்டீன் தமிழ் பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இரத்தினபுரி நிவித்திகல கல்வி வலயத்திற்குட்பட்ட டிப்டீன் தமிழ் வித்தியாலயம் இறக்குவானை பகுதியில் அமைந்துள்ளது. இங்கு முதலாம் தரம் முதல் ஒன்பதாம் தரம் வரையான வகுப்புகளுடன் அதிபர் உட்பட எட்டு ஆசிரியர்களும் கடமையாற்றி வருகின்றனர். இத்தகைய மனித வளம் செறிந்து செயற்படுகின்ற இப்பாடசாலையை சுதந்திரமாக இயங்குவதற்கு பொருத்தமற்ற பகுதியாக பொதுமக்கள் கருதுகின்றனர்

கடந்த காலங்களில் பாடசாலைக் கட்டடங்கள் அமைந்துள்ள 100 மீட்டர் சுற்று வட்டார பகுதியில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இதற்காக வெட்டப்பட்ட குழிகளினால் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. அக் குழிகளில் நீர் தேங்கி நீரின் அமுக்கம் அதிகரிப்பதனால் பாடசாலைக் கட்டடங்கள் மண்ணுக்குள் புதையுறும் ஆபத்து அதிகமாக உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர.;

பாடசாலை கட்டடங்களுக்கு அருகில் மண்மேடுகள் மழைக் காலங்களில் சரிந்து விழுவதும் கட்டடங்கள் நாளுக்கு நாள் இறங்குவதும் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அவதானிக்கப்பட்டுள்ளது. இப் பகுதியை சுற்றிலும் பல வெடிப்புகள் காணப்படுகின்றன. பாடசாலையின் முன்னாள் அதிபர் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதற்கு இணங்க அப்பகுதியை விட்டு வெளியேருமாறு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

வலயக்கல்வி பணிப்பாளரும் பிரதேச சபை உறுப்பினர்களும் தற்காலிகமாக வைத்தியசாலை கட்டடம் ஒன்றை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துமாறு அறிவித்தனர். வைத்தியசாலை சுற்றாடலும் ஏற்கனவே மாணிக்கக்கல் அகழ்வில் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அவ்விடமும் புறக்கணிக்கப்பட்டது.

மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் தடைப்படுவதனால் விகாரையை அண்மித்த பகுதிக்கு செல்லலாம் என தீர்மானித்த போது, அவ்விடமும் பாதுகாப்பு அற்ற இடமாக காணப்பட்டதால் அதுவும் அமையாமல் போய் விட்டது. கிராம மக்கள், பொது மக்களின் பிரயத்தனத்தால் டிப்டீன் ஆலயத்திற்கு அருகிலுள்ள மண்டபம் ஒன்று தற்காலிகமாக பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அந்த இடத்தில் 19 இட்சம் நிதி ஒதுக்கீட்டில் கட்டடம் அமைத்து தருவதாக வலயக்கல்வி பணிப்பாளர் கூறியிருந்தாலும் கூட,பாடசாலை நிர்வாகத்தின் அசமந்த போக்கால் இன்று வரையில் தற்காலிக கட்டடத்திற்கான வேலைத் திட்டங்கள் கூட ஆரம்பிக்கப்படவில்லை.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாளிடம் இவ்விடயம் தொடர்பில் பாடசாலை ஆசிரியர் கலந்துரையாடியுள்ளார். தோட்ட முகாமையாளரும் இவ்விடயம் குறித்து மிகவும் அலட்சியமாக செயற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஹபுகஸ்தென்ன பெருந்தோட்ட நிர்வாகம் பாடசாலைக்கான காணியை வழங்குவது தொடர்பில் முழுமையான ஈடுபாட்டை கொண்டிருக்கவில்லை. தோட்ட முகாமையாளர் இரண்டு ஏக்கர் காணியை வழங்குவதாக கூறினாலும் அக்காணி காட்டுப் பகுதியிலும், வயல் நிலங்களிலுமே காணப்படுவதாக பெற்றோர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

இவ்வாறு வழங்கப்படும் காணிகளில் காட்டு யானைகளின் நடமாட்டமும் வயல் நிலங்களில் நீர் தேங்கும் நிலையும் காணப்படுகின்றது. இச்செயல் 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது' போன்றதாகும். பாடசாலைக்கான பொருத்தமான காணி வேண்டுமாயின் பாராளுமன்ற உறுப்பினரின் பரிந்துரை தேவைப்படுகின்ற நிலையில் அவ் அறிக்கையை வழங்குவதிலும் கால தாமதம் ஏற்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களை தொடர்பு கொண்டு பாடசாலை விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தினாலும் அவர்களும் கரிசனை காட்டுவதாக தெரியவில்லை.அதுவும் இந்த பாடசாலை ஒரு பின்தங்கிய பகுதியில் காணப்படுவதால் அரசியல் வாதிகளும் பாராமுகம் காட்டுவதற்கு காரணமாக இருக்கலாம். அல்லது அரசியல் இலாபம் இல்லாததால் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ் விடயத்தை கையில் எடுப்பதில்லை என தோன்றுகிறது. கொரோனா பெரு தொற்றால் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் திறக்கப்பட்டதன் பின்னரும் இறக்குவானை டிப்டீன் பிரதேச மாணவர்கள் கொரோனா அபாயத்திலிருந்து மீண்டு பாடசாலை என்ற அபாயவட்டத்திற்கு செல்கின்றனர். மில்லியன் தொகை பணச் செலவில் போக்குவரத்துச் சாலைகளும், சொகுசு ஹோட்டல்களும் நிர்மாணிக்கப்படுகின்ற இந்நாட்டில் தான் தமது அடிப்படை தேவைகளை கூட பூர்த்தி செய்துக் கொள்ள இயலாத மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழை காலத்திலும் தமக்கான பொருத்தமான கட்டட வசதிகள் இன்றி மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மண்மேடு சரிந்து விழுவதால் இறந்துவிடுவோமோ அல்லது மண்ணுக்குள் புதையுண்டு போய் விடுவோமோ என்ற அச்சத்துடனேயே அன்றாடம் பாடசாலை கட்டட கதவுகளை திறக்கும் இவர்களுக்கு வெளிச்சம் தருவது யார்?தீர்வு தருவது யார்?



எஸ்.எம்.தர்ஷினி








நுவரெலியா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த 5 வருட காலமாக நுவரெலியா வை. எம். எம். ஏ. கிளையினால் நடத்தப்படும் விசேட இரத்ததான முகாம் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நுவரெலியா வை. எம். எம். ஏ. கிளையின் தலைவர் ஏ. ஆர். நவாஸ் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை.. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, உப தலைவர் இஹ்சான் ஹமீட், பொருளாளர் பாசில், நுவரெலியா மாவட்டப் பணிப்பாளர் ஜீ. அப்துல் றஹீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்

## ஒப்சேர்வர் - SLT மொபிடெல் பாடசாலை கிரிக்கெட்

# மிகவும் பிரபலமான வீரர் சதிஷ, வீராங்கனை நிமேஷா




### கொழும்பில் இன்று விருது வழங்கும் விழா

கொழும்பு றோயல் கல்லூரியின் சதீஷ ராஜபக்ஷ மற்றும் வெயாங்கொடை மரபொல கல்லூரியின் டபிள்யூ. பி. நிமேஷா ஒப்சர்வர் SLT மொபிடெல் இந்த ஆண்டின் மிகவும் பிரபலமான பாடசாலை கிரிக்கெட் வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டனர். 43வது ஒப்சர்வர் SLT மொபிடெல் வருட பாடசாலை கிரிக்கெட் விருது வழங்கும் விழா இன்று (14) மாலை 5.15 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க கலந்து கொள்ளவுள்ளார்.

சதிஷ ராஜபக்ச 42,832 வாக்குகளைப் பெற்று ஆண்டின் மிகவும் பிரபலமான வீரராக தெரிவானார். கண்டி புனித அந்தோனியார் கல்லூரியைச் சேர்ந்த அஷேன் பண்டார 31,988 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றார். புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த துனித் வெல்லாலகே 25,207 வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றார்.

வெயாங்கொட மரபொல மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நிமேஷா தருணி 20,186 வாக்குகளைப் பெற்று தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக SLT மொபிடெல்லின் ஆண்டின் மிகவும் பிரபலமான வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார்.

பன்னிபிட்டிய தர்மபால மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த டி.சுஷாதி கௌசல்யா 13,572 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வாதுவ மத்திய கல்லூரியைச் சேர்ந்த நெத்மி பூர்ணா 10,166 வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

## லங்கா பிரீமியர் லீக் தொடரின் 13 ஆவது லீக் போட்டி

# இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்த கொழும்பு ஸ்டார்ஸ்

கொழும்பு ஸ்டார்ஸ் மற்றும் கோல் கிளேடியேட்டர்ஸ் அணிகளுக்கு இடையில் நடைபெற்று முடிந்த, லங்கா பிரீமியர் லீக் தொடரின் 13 ஆவது லீக் போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி 41 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

கொழும்பு ஸ்டார்ஸ் மற்றும் கோல் கிளேடியேட்டர்ஸ் அணிகள் மோதியிருந்த இந்தப் போட்டி, நேற்றுமுன்தினம் (12) கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அஞ்செலோ மெதிவ்ஸ் தான் கொழும்பு ஸ்டார்ஸ் அணியினை வழிநடாத்துகின்ற முதல் போட்டியில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை தெரிவு செய்திருந்தார். இதே நேரம் இந்தப் போட்டி மழையின் குறுக்கீடு காரணமாக அணிக்கு 18 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

பின்னர் போட்டியின் நாணய சுழற்சிக்கு அமைவாக முதல் துடுப்பாட்டத்தினை ஆரம்பித்த கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக அணித்தலைவர் அஞ்செலோ மெதிவ்ஸ் மற்றும் பெதும் நிஸ்ஸங்க ஆகியோர் களமிறங்கினர்.

பெதும் நிஸ்ஸங்க ஒரு ஓட்டத்தினைப் பெற்ற நிலையில் தனது விக்கெட்டினை சமித் பட்டேலிடம் பறிகொடுத்து கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் முதல் விக்கெட்டாக மாறியிருந்தார். ஆனால், ஏனைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான அஞ்செலோ மெதிவ்ஸ், புதிய வீரராக களம் வந்த அஷான் பிரியஞ்சனுடன் இணைந்து கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு 64 ஓட்டங்களை இரண்டாம் விக்கெட் இணைப்பாட்டமாகப் பெற்றுக் கொடுத்தார்.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் இரண்டாம் விக்கெட்டாக ஆட்டமிழந்த அஷான் பிரியஞ்சன் 16 பந்துகளுக்கு 23 ஓட்டங்களைப் பெற்றிருக்க, புதிய வீரர்களாக களம் வந்த டொம் பென்டன் மற்றும் சீகுகே பிரசன்ன ஆகியோர் ஏமாற்றமான துடுப்பாட்டத்துடன் வெளியேறினர்.

எனினும் அஞ்செலோ மெதிவ்ஸ் தொடர்ச்சியாக ஓட்டங்களை குவித்திருந்ததோடு, தினேஷ் சந்திமாலும் அதிரடியான முறையில் செயற்பட்டு கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் ஓட்டங்களை அதிகரித்திருந்தார்.



இந்த இரண்டு வீரர்களினதும் துடுப்பாட்ட உதவியோடு கொழும்பு ஸ்டார்ஸ் அணி 18 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் அஞ்சலோ மெத்திவ்ஸ் இந்த எல்பிஎல் தொடரில் பெற்றுக்கொண்ட முதல் அரைச்சதத்துடன் 57 பந்துகளுக்கு 3 சிக்ஸர்கள் மற்றும் 8 பௌண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். மறுமுனையில், தினேஷ் சந்திமால் 14 பந்துகளுக்கு 2 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 36 ஓட்டங்களை எடுத்தார்.

கோல் கிளேடியேட்டர்ஸ் அணியின் பந்துவீச்சு சார்பில் சமிட் பட்டேல் மற்றும் தனஞ்சய லக்ஷான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 162 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய கோல் கிளேடியேட்டர்ஸ் அணிக்கு, ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக குசல் மெண்டிஸ், தனுஷ்க குணத்திலக்க ஆகியோர் களமிறங்கினர்.

இந்த வீரர்களில் தனுஷ்க குணத்திலக்க வெறும் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து கோல் கிளேடியேட்டர்ஸ் அணியின் முதல் விக்கெட்டாக மாற, அதன் பின்னர் களம் வந்த மொஹமட் ஹபீஸ், 51 ஓட்டங்களை கோல் கிளேடியேட்டர்ஸ் அணியின் இரண்டாம் விக்கெட்டுக்காக குசல் மெண்டிஸ் உடன் இணைந்து இணைப்பாட்டமாகப் பகிர்ந்தார். தொடர்ந்து மொஹமட் ஹபீஸின் விக்கெட் அவர் 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சீக்குகே பிரசன்னவின் பந்துவீச்சில் பறிபோனது.

மொஹமட் ஹபீஸின் விக்கெட்டினைத் தொடர்ந்து கோல் கிளேடியேட்டர்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் குறுகிய இடைவெளிகளில் தொடர்ச்சியாக ஆட்டமிழந்த போதும், குசல் மெண்டிஸ் அதிரடியான முறையில் வெற்றி இலக்கிற்கான பயணத்தில் கோல் கிளேடியேட்டர்ஸ் அணியினை முன்னேற்றியிருந்தார்.

இறுதியில் குசல் மெண்டிஸின் போராட்டமும் வீணாக கோல் கிளேடியேட்டர்ஸ் அணி 16.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 121 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து போட்டியில் தோல்வியினைத் தழுவியது.

கோல் கிளேடியேட்டர்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் குசல் மெண்டிஸ் இந்த பருவகாலத்திற்கான எல்பிஎல் தொடரில் தனது முதல் அரைச்சதத்துடன் 39 பந்துகளில் 7 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 64 ஓட்டங்கள் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் பந்துவீச்சில் நவீன் உல்ஹக் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற, ரவி ராம்போல் மற்றும் சீகுகே பிரசன்ன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் வெற்றியோடு கொழும்பு ஸ்டார்ஸ் அணி, இந்தப் பருவகாலத்திற்கான எல்பிஎல் தொடரில் தம்முடைய இரண்டாவது வெற்றியினைப் பதிவு செய்ய, கோல் கிளேடியேட்டர்ஸ் அணிக்கு இப்போட்டி எல்பிஎல் தொடரில் இரண்டாவது தொடர் தோல்வியாக அமைந்தது. போட்டியின் ஆட்ட நாயகனாக கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்காக அதிரடியான முறையில் துடுப்பாடிய தினேஷ் சந்திமால் தெரிவானார்.

## எல்பிஎல் தொடரில் தொடர்

# வெற்றிகளை குவிக்கும் ஜப்னா கிங்ஸ்

லங்கா பிரீமியர் லீக்கின் (12) ஜப்னா கிங்ஸ் மற்றும் கண்டி வொரியர்ஸ் ஆகிய அணிகளுக்கு இடையிலான போட்டியில் மழை குறுக்கிட்டிருந்த போதும், டக்வர்த் லுவிஸ் முறைப்படி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஜப்னா கிங்ஸ் அணி இலகுவான வெற்றியை பதிவுசெய்தது.

ஜப்னா கிங்ஸ் அணி கடந்த மூன்று போட்டிகளில் வெற்றிபெற்று, இந்த போட்டியில் களமிறங்கியதுடன், கண்டி வொரியர்ஸ் அணி தங்களுடைய கடந்த இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று, ஒரு வெற்றியுடன் இந்தப் போட்டியில் விளையாடியது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜப்னா கிங்ஸ் அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்த நிலையில், முதலில் களமிறங்கி துடுப்பெடுத்தாடிய கண்டி வொரியர்ஸ் அணி நிதானமான ஆரம்பத்தை பெற்றுக்கொண்டது.

முதல் 7 ஓவர்களில், அஹமட் ஷேஷாட் மாத்திரம் ஆட்டமிழந்து வெளியேறியிருக்க, சரித் அசலங்கவின் சிறந்த பங்களிப்புடன் கண்டி வொரியர்ஸ் அணி 47 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன்போது, போட்டியில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டதுடன், மீண்டும் ஆரம்பமாகிய போட்டியில், அணிக்கு தலா 16 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டன.

இதனைத்தொடர்ந்து கண்டி வொரியர்ஸ் அணி வேகமாக ஓட்டங்களை குவிக்க ஆரம்பிக்க தொடங்கியது. இதில், சரித் அசலங்கவுடன், மினோத் பானுக இணைந்து துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைப் பெற்றனர்.

மினோத் பானுக 16 பந்துகளில், வனிந்து ஹஸரங்கவின் பந்துவீச்சுக்கு சிக்ஸர் ஒன்றை விளாசியதுடன், 20 ஓட்டங்களை பெற்றிருந்தவேளை, வஹாப் ரியாஸின் அடுத்த ஓவரில் ஆட்டமிழந்திருந்தார். அடுத்து வந்த டொம் மூர்ஸ் 6 ஓட்டங்களை பெற, சரித் அசலங்க 34 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 2 பௌண்டரிகள் அடங்கலாக 44 ஓட்டங்களை குவித்திருந்தார்.



கண்டி வொரியர்ஸ் அணி 12.2 ஓவர்கள் நிறைவில் 94 ஓட்டங்களை பெற்றிருந்த போது, போட்டியில் மீண்டும் மழை குறுக்கிட்டது. எனவே, இந்த போட்டி நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்திருந்த போதும், மீண்டும் ஒருமுறை இலங்கை மைதான ஊழியர்கள் வேகமாக செயற்பட, போட்டி அணிகளுக்கு

தலா 10 ஓவர்களாக நிர்ணயிக்கப்பட்டதுடன், கண்டி வொரியர்ஸ் அணியின் துடுப்பாட்ட இன்னிங்ஸ் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

டக்வர்த் லுவிஸ் முறைப்படி, 2.2 ஓவர்கள் குறைக்கப்பட்ட நிலையில், வெற்றியிலக்காக ஜப்னா கிங்ஸ் அணிக்கு 95 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. ஜப்னா கிங்ஸ் அணி சார்பாக சொஹைப் மலிக் மற்றும் வஹாப் ரியாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஜப்னா கிங்ஸ் அணியினர், எந்தவித அழுத்தங்களுமின்றி ஓட்டங்களை குவித்தனர். இடைக்கிடையில் விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்ட போதும், முழுமையான அழுத்தமும் கண்டி வொரியர்ஸ் பக்கமே இருந்தது.

அவிஷ்க பெர்னாண்டோ 12 பந்துகளுக்கு 23 என்ற வேகமான ஆரம்பத்தை பெற்றுக்கொடுக்க, உபுல் தரங்க 13 ஓட்டங்களையும், டொம் கொஹ்லெட்மோர் 12 ஓட்டங்களையும் பெற, முதல் 5 ஓவர்களில் ஜப்னா கிங்ஸ் அணி 2 விக்கெட்டுகளை இழந்து 52 ஓட்டங்களை கடந்தது. இவர்கள் மூவரின் ஆட்டமிழப்பின் பின்னர் ஜப்னா கிங்ஸ் அணிக்கு அனுபவம் கைகொடுத்திருந்தது. திசர பெரேரா தனக்கே உரித்தான பாணியில் வேகமாக ஓட்டங்களை குவிக்க, சொஹைப் மலிக் சரியான ஓட்ட வேகத்தில் ஓட்டங்களை பெற்றார். திசர பெரேரா 13 பந்துகளில் 29 ஓட்டங்களையும், சொஹைப் மலிக் 14 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுக்க, ஜப்னா கிங்ஸ் அணி 8.4 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது.

ஜப்னா கிங்ஸ் அணி தொடர்ச்சியாக தங்களுடைய நான்காவது வெற்றியை பதிவுசெய்து புள்ளிப்பட்டியலில், முதல் இடத்தை தக்கவைத்துள்ளதுடன், கண்டி வொரியர்ஸ் அணி தங்களுடைய நான்காவது தோல்வியை இன்றைய தினம் சந்தித்தது.

# தேசிய மட்ட போட்டிகளுக்கு இறக்காமம் பிரதேச செயலக இளைஞர்கள் தெரிவு

ஹிங்குரான குறூப் நிருபர்

2021 ஆம் ஆண்டுக்கான 33ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவை முன்னிட்டு அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை விளையாட்டு போட்டிகள் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நடைபெற்று இப்போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்கள் அடுத்துவரும் தினங்களில் தேசிய ரீதியான போட்டிகளில் கலந்துகொள்ள உள்ளனர்.

33வது தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அம்பாறை மாவட்ட தடகளப் போட்டி நிகழ்ச்சிகள் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போது இறக்காமம் பிரதேச செயலகம் சார்பாக வீ.சி.மிலான் இளைஞர் கழகம் சார்பாக கலந்துகொண்ட எம். எச். சதாம் அஹமட் (800மீ) மற்றும் ஏ.எம். ஆசிப் (1500மீ) ஆகிய வீரர்கள் முதலாம் இடத்தினைப் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 33வது இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய ரீதியான போட்டியில் கலந்துகொள்ள உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுத் தொடரில் பங்குபற்றி



வெற்றி பெற்ற அனைத்து வீரர்களுக்கும், பயிற்றுவித்த இளைஞர் சேவை அதிகாரி ஏ.ஆர். நியாஸ், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல். றஷீன் ஆகியோருக்கு பிரதேச செயலாளர் எம்.எஸ். எம். ரஷ்ஷான் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்ததோடு தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றி வெற்றிச் சாதனைபெற நல்லாசிகளையும் தெரிவித்தார்.

## 145 வது தேசிய சாரணர் உயர் பயிற்சியில்

# அக்கரைப்பற்று - கல்முனை மாவட்டம் வரலாற்றுச் சாதனை

இலங்கை சாரணர் சங்கத்தினால் தேசிய ரீதியாக நடாத்தப்பட்ட 145 வது சாரணர் உயர் பயிற்சியானது (அவதை 4) கடந்த 2021.11.25 தொடக்கம் 2021.12.01 வரை நுவரெலியாவில் உள்ள பீட்ரு தேசிய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் மொத்தம் 33 பேர் தேசிய ரீதியாக பங்குபற்றினர். இதில் அக்கரைப்பற்று கல்முனை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் (14பேர்) அதிகளவில் பங்குபற்றி தேசிய ரீதியில் ஒரு பெரிய சாதனையை ஏற்படுத்தியுள்ளனர். இப்பயிற்சியானது முற்றிலும் தமிழ் மொழிமூலம் நடாத்தப்பட்டது ஒரு விஷேட அம்சமாகும். அக்கரைப்பற்று கல்முனை மாவட்டத்திலிருந்து மொத்தம் 17 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தும் இதில் மூன்று பேர் தவிர்க்க முடியாத காரணங்களினால் பங்குபற்ற முடியாமல் போனது துரதிஷ்டவசமானதாகும்.

இவ்வாறு அதிகூடிய (14) பயிற்சியாளர்கள் பங்கு பற்றியமை இது வரையில் இம்மாவட்டத்தில் நிகழ்ந்திராத தேசிய ரீதியிலான ஒரு வரலாற்றுச்சாதனையாகும். இப்பயிற்சியானது இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம சாரணர் ஆணையாளர் ஜனப்பிரிய பெர்னாண்டோ தலைமையின் கீழ் தேசிய பயிற்சி ஆணையாளர் நந்த பெர்னாண்டோ வழிகாட்டலிலும் நடைபெற்றது. இந்தப் பயிற்சிக்குத் தலை



வராக பி.அஜித்குமார் LT (யாழ்ப்பாணம்) உதவி பயிற்சித் தலைவராக ஜீ கமலகுமார் ( பீடாதிபதி, தேசிய கல்வியியல் கல்லூரி, வவுனியா) அவர்களும் பொறுப்பேற்று நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சிக்கு வளவாளர்களாக எஸ். ரவீந்திரன் LT, ஏ.கே. மகேந்திரன் LT, திருமதி கே. பாரதி LT, . எஸ். தேவராஜன் ALT, எஸ். ஜயபவன் ALT, வை. ரவீந்திரன் ALT, ஆர். மயூரதரன் ALT, திரு. எம். அப்துல் ஸலாம் ALT, திரு. ஏ. புத்கரன் ALT, திரு. பி. ராஜரட்ணம் ALT, ஆர். சசீதரன் ALT, எஸ். தஸ்தகீர் ALT, கே. துஜ்யந்தன் ALT ஆகியோர் தேசிய பயிற்சி ஆணையாளர் மற்றும் தலைமைப்பீட மேலதிக ஆணையாளர் எஸ்.எப். எஸ். முயிட் ஆகியோரால் 'ஸூம்' தொழில்நுட்பம் மூலம் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அக்கரைப்பற்று கல்முனை மாவட்டத்தைச் சேர்ந்த பின்வருவோர் பயிற்சியை சிறப்பாக முடித்து வெளியேறினர். ரவீந்திரன் (திருக்கோவில்), எம். ஹலீம் ( சாய்ந்தமருது), திருமதி. எஸ். மேரி திரேஷா(அக்கரைப்பற்று), ரி.எம். இன்சாப் (நிந்தவூர்), திருமதி. கே. சந்திரவதனி(பெரிய நீலாவணை), ஏ.எம்.எம். தில்ஷாத் (சாய்ந்தமருது), ஏ.ஆர்.எம். இம்தியாஸ் (சாய்ந்தமருது), எம்.ஐ.எம். சிராஜுதீன் (அட்டாளைச்சேனை), வீ.கமலதாசன் (பெரிய நீலாவணை), எஸ்.எல்.எம்.சுதாபி (அக்கரைப்பற்று), எம்.எச்.ஹம்மாத் (அட்டாளைச் சேனை), பி.எம். றியாத் (சாய்ந்தமருது), ஐ. நஸ்றுல்லாஹ் (சம்மாந்துறை).

சாரணர் இயக்கமானது அதன் ஸ்தாபகர் றொபட் ஸ்ரிவின்சன் சிமித் பேடன் பவல் என அன்புடன் அழைக்கப்படும் இவர் 1907 இல் முதலாவது சாரணர் பாசறையை 20 பேரின் பங்குபற்றுதலுடன் இங்கிலாந்து பிறவுன்சி தீவில் நடாத்தினார்.

இலங்கையில் சாரணர் வரலாறு:

1912 இல் -வது தூறுப் திரு. எஃப்.ஜீ. ஸ்ரீபனிஸனால் மாத்தளை கிறிஸ்தவ கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது.

1917 இல் முதலாவது சாரணர் ஒன்றுகூடல் (Rally) ஹவ்லொக் மைதானத்தில் நடைபெற்றது.

1918 இல் கப்ஸாரணர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1921 இல் பேடன் பவலும் அவருடைய துணைவியார் பவல் அம்மையாரும் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

1924 இல் முதலாவது தரு சின்னம் பயிற்சி கொழும்பில் நடைபெற்றது.

1930 இல் முதலாவது தரு சின்னப்பயிற்சி சிங்கள மொழி காலியில் நடைபெற்றது.

1934 இல் பேடன் பவல் இரண்டாவது தடவையாக வருகை.

1952 இல் இலங்கையின் முதலாவது தேசிய ஜம்போறி.

1953 இல் உலக சாரணர் சங்கத்தில் இலங்கை அங்கத்துவம் பெற்றது.

1961 இல் தேசிய பயிற்சிக் குழுவின் 1வது பாசறை நுவரெலியா பீட்ரு பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

1975 இல் குருளை(Cub) முதலாவது ஜம்போரி காலியில் நடைபெற்றது.

1980 இல் தேசிய சாரணர் காரியாலயம் கொழும்பு சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் நிறுவப்பட்டது.

1990 இல் சார்க் நாடுகளுக்கிடையிலான முதலாவது ஜம்போறி இலங்கையில் நடைபெற்றது.

இலங்கை சாரணர் சபையின் போஷகராகவும் பிரதம ஆணையாளராகவும் நாட்டின் ஜனாதிபதி இருப்பார். அத்துடன் உப போஷகர்கள் நான்கு பேர் செயற்படுவர். பிரதம மந்திரி, கல்வி அமைச்சர், பிரதம நீதிபதி, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பதவிவழியில் நியமிக்கப்படுவர்.இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளரின் தலைமையின் கீழ் தலைமைப்பீட சாரண ஆணையாளர்கள் ஒவ்வொரு பிரிவிற்கும் பொறுப்பாக இருப்பர். மாவட்ட ரீதியில் மாவட்ட ஆணையாளருடன் ஒவ்வொரு பிரிவிற்கும் பொறுப்பான உதவி மாவட்ட ஆணையாளர்கள் பயிற்சி, நிர்வாகம், ICT, நிதி,மீடியா,சர்வதேச விவகாரம் போன்ற பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டு சிங்கிதி (வயது 5 7.5 வரை), குருளைச் சாரணியம் (வயது 7.5 11வரை) சாரணியம் (கனிஷ்டம் வயது 1115 வரை, சிரேஷ்டம் வயது 1518வரை), திரிசாரணியம் (வயது 18 26 வரை), ஆகிய நான்கு பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது.

ஒரு சாரணன் இன ஒற்றுமை, தன் னம்பிக்கை,பற்றுறுதி, பெரியோருக்கு மரியாதை செய்தல், தைரியம், சகோதரத்துவம், பிராணிகளுக்கு அன்பு செலுத்துதல், சிக்கனம், மனமகிழ்ச்சி, மற்றும் சொல், செயலில் தூய்மை போன்ற நற்பண்புகள் கொண்டவனாக இருப்பான்.

சாரணியத்தின் தாரக மந்திரமான சத்தியப் பிரமாணமானது ஒவ்வொரு சாரணியனாலும் பயபக்தியுடன் மொழியப்படல் வேண்டும்.

சாரணிய வாக்குறுதி:

என்னால் கூடுமானவரை எனது சமயத்திற்கும் என் தேசத்திற்கும் தன் கடமைகளைச் செய்வேன் என்றும் எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும் சாரண விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கிறேன் என மொழிந்த பின் சாரணிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

சாரணர் பாசறைப் பயிற்சிகள், பாடல்கள், சாரணர் விளையாட்டுக்கள், குழுச் செயற்பாடுகள் , சமையல், தலைமைத்துவம், முகாமைத்துவம், நேரந்தவறாமை, சரியான முடிவுகள் எடுத்தல் போன்ற திறமைப் பண்புகளைக் கொண்ட ஒரு பல்துறை விற்பன்னர்கள். காணப்படுவான்

'ஒரு நாள் சாரணன் என்றுமே சாரணனாவான்'

எஸ். தஸ்தகீர்
கல்முனை

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.